
புதிய சமதர்மம்

PUTHIYASAMATHARMAM

# புதிய சமதர்மம்

புதிய சமதர்ம உலகம் படைப்போம்

இதழ் 84 | ஜுன்-ஜுலை 2008 | விலை ரூபா 20




# பிரதமரின் போர் முழக்கம்! வெறும் வாய்ப் பேச்சு.

*இன்று ஜே.வி.பியின் கீழ்மட்டத்தில் உள்ள சகல பிரிவினரும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் குதித்துள்ளனர். நாளுக்கு நாள் அரசுக்கு எதிரான போராட்டம் சகல திசைகளிலும் பரவத்தொடங்கியுள்ளது. யுத்தம் தொடரப்பட வேண்டும் என பிரகடனம் செய்த சோமவன்சவின் குரல் ஒடுங்கியுள்ளது.*

ஜே.வி.பிக்குள் அவரின் குரலுக்குப் பதிலாக கீழ்மட்ட தலைவர்களின் போராட்ட முழக்கங்களே மேல்வந்து கொண்டு இருக்கின்றன. இன்று அரசாங்கம் இரண்டு போர் முனைகளை சந்தித்து வருகின்றது. ஒன்று வடக்கு-கிழக்குப் போர்முனை. அடுத்தது, தென்னிலங்கையில் ஜே.வி.பி அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் போர்முனை போர் மாயையைக் காட்டி தென்னிலங்கை மக்களை ஏமாற்றும் படலம் முடிவுக்கு வந்து கொண்டு இருக்கின்றது. பிரதமர் தான் செல்லும் இடங்கள் எல்லாம் விடுத்து வந்தபோர் முரசு அறை கூவல்கள் எல்லாம் இன்று தென்னிலங்கை மக்கள் மத்தியில் செல்லாக்காசாக மாறியுள்ளது. ஹெல உறுமயாவின் பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த குரு மக்களிடம் அழுது வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போது அரசாங்கம் மிகவும் சிக்கலில் உள்ளது. எனவே யாரும் அரசுக்கெதிராக போராட்டங்களை முன் னெடுக்க வேண்டாம் என மிகவும் கீழ் இறங்கி கோரியுள்ளார். வாழ்க்கைச் செலவு சுமையால் மக்கள் நொந்து போய் இருக்கும் இவ் வேளையில் ஜே.வி.பியின் கீழ்மட்டத் தலைவர்கள் ஒரு புதிய போராட்ட அலையை திறந்திருப்பது மகிந்த அரசாங்கத்திற்கு பாரிய சவாலாகவே அமையும். அடுத்து வரும் யூலை, ஆகஸ்ட் மாதங்கள் போராட்டங்கள் நிறைந்த மாதங்களாகவே அமையும். இலங்கையின் வரலாற்றில் யூலை, ஆகஸ்ட் மாதங்கள் மிகப்பெரிய அனர்த்தங்கள் நிறைந்த மாதங்களாகவே அமைந்திருக்கும். எனவே இவ்வருட யூலை, ஆகஸ்ட் மாதங்களில் அரசுக்கு எதிரான மிகப்பெரிய போராட்டங்கள் நிச்சயம் உருவாகும்.

நடைபெறுகின்ற இந்தப்போராட்டம் மேலும் தொடர்ந்தால், நிச்சயம் இலங்கையின் ஒற்றையாட்சி என்ற அடித்தளம் தகரும். இதன் பின்பு சுதந்திரமான பிராந்திய ஆட்சிகள் மலரும். புதிதாக தேர்தல் நடத்தப்பட்ட கிழக்கு

*தொடர்ச்சி 19 ம் பக்கம்*

# நாட்டையே சுடுகாடாக்கும் மகிந்தரின் போர் வெறி

நாட்டில் பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப் படுவது அதிகரித்து காணப்படுகின்றது. குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என அனைவரும் பலியாகும் துயரச்செய்திகள் தினம் தினம் வந்த வண்ண மே உள்ளன. அரசாங்கமே இதற்கு பதில் கூறவேண்டும். வட-கிழக்கு பகுதிகளில், அரச படையினர் பொது மக்கள் மீது விமானங்கள் மூலமும் எறிகணை வீச்சுகள் மூலமும் ஆழ ஊடுருவி தாக்கும் படையணி மூலமும் வகை தொகையின்றி பொது மக்களை கொன்று வருகின்றனர்.

இங்ஙனம் கொலைகளை புரிந்துவிட்டு விடுதலைப்புலிகளை கொன்றுள்ளதாக கணக்கு காட்டுகின்றனர். தென்பகுதி செய்தி ஊடகங்களும் அரசாங்கத் தரப்பு கணக்கை அப்படியே பொதுமக்கள் நம்பும் விதத்தில் பிரசுரித்தும் வருகின்றன. யுத்தத்தை மையமாக வைத்து தனது அரசியல் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற முயல்கின்றது மகிந்த அரசு.

யுத்த நிறுத்தம் இரத்துச் செய்யப்பட்ட பின்னர் மிலேச்சத்தனம் எல்லை தாண்டக்கூடிய நிலையில் காணப்படுகின்றது. ஆட்களை கடத்துவது என்பது தெரு நாய்களை பிடிப்பது போன்று நடைபெறுகின்றது. சுட்டுக் கொலைசெய்யப்பட்டு வீதியோரங்களின் மறைவிலும் புதர்களிலும் புதைகுழிகளிலும் உடல்கள் போடப்படுகின்றன.மேலும், அண்மைய காலங்களில் தென் பகுதியில் நிகழ்ந்து வரும் குண்டு வெடிப்புகளால் பாடசாலை மாணவர்கள்,விளையாட்டு வீரர்கள்,தொழிலாளர்கள் என பரந்துபட்ட பிரிவினர் மரணத்தை தழுவியுள்ளனர். எண்ணற்றோர் பாரிய காயங்களுக்குஉள்ளாகி அவயங்களை இழந்துள்ளதுடன், வாழ்க்கையில் செயற்படமுடியாத நிலைக்கும் ஆளாகியுள்ளனர். மனிதாபிமானம் கொண்ட எவரும் இத்தகைய வன்முறைகளை அனுமதிக்கமாட்டார்கள்.

மகிந்த அரசின் போர் வெறி நடவடிக் கையால் நாடே சுடுகாடாக மாறுகின்றன நிலைக்கு சென்றுள்ளது. விலைவாசி உயர்வு,பணவீக்கம் போன்ற காரணிகளால் அரசுமீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். இவற்றிற்க்கு எல்லாம் யுத்தமே மைய சக்தியாக விளங்குகின்றது. யுத்தத்தை நிறுத்தி சமாதானச் சூழ்நிலையை முதலில் ஏற்படுத்த வேண்டும். இதன் பின்பு,விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் பேச்சுவாாத்தையில் ஈடுபட வேண்டும்.

இதன் மூலமே இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும். அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளித்து விட்டு அரசாங்க வன்முறையை கண்டிப்பதில்

*தொடர்ச்சி 19 ம் பக்கம்*

# மீண்டும் இந்திய ஆக்கிரமிப்பு

அண்மையில் இந்தியாவின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு வந்து இலங்கை அரசாங்கத்தினை எச்சரிக்கை செய்த விட்டு சென்றிருக்கின்றனர். இவ் எச்சரிக்கை 1987 போல மீண்டும் ஒரு இந்திய ஆக்கிரமிப்புக்கான முன்னறிவிப்பா? என்ற சந்தேகத்தை அரசியல் ஆய்வாளர்களிடையே உருவாக்கியுள்ளது. எச்சரிக்கை பிரதானமாக மூன்று விடயங்களில் விடப்பட்டுள்ளது.

1.சீனாவிடமும், பாகிஸ்தானிடமும் இலங்கை ஆயுதங்களை வாங்கக் கூடாது, பயிற்சிகளையோ, புலனாய்வு உதவிகளையோ பெறக் கூடாது.

2.மூன்று மாதத்திற்குள் அரசியல் தீர்வினை முன்வைத்தல் வேண்டும் அத்தீர்வு சர்வகட்சிக் குழுவின் Aக் குழு அறிக்கை போன்று இருத்தல் வேண்டும். சார்க் மாநாட்டில் அதனை அரசின் கொள்கையாக முன்வைத்தல் வேண்டும்.

3.சார்க் மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் வரும் போது கொழும்பின் பாதுகாப்பு இந்தியப் பாதுகாப்பு படைகளின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கை அதற்கு முக்கியத்துவம் கொடுக்கம். அதிகாரக்கட்டமைப்பு எண்பவற்றை நன்கு புரிந்து கொண்டவர்களுக்கு இவ் எச்சரிக்கை ஆச்சரியம் எதையும் தரவில்லை.

மகிந்தர் அரசாங்கம் இந்த விடங்களை தூரநோக்கில் ஆராயாமல் இந்தியா மோதலில் ஈடுபடும் நாடுகளிடம் இராணுவ உதவிகளைப் பெற்றதோடு, அந்த நாடுகளின் புலனாய்வு அமைப்புக்களுக்கும் இலங்கையில் இடம் கொடுத்திருக்கின்றது. இதன் மூலம் இன்னோர் இந்திய ஆக்கிரமிப்புக்கு சந்தர்ப்பத்தையும் தானாகவே உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

இந்திய சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவின் பாதுகாப்பு கொள்கையின்படி 'இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் இருகின்றது.'' இந்த விடயத்தை இலங்கை அரசு உதாசீனப்படுத்தியதினாலேயே இன்று சங்கடத்திற்குள் மாட்டிக்கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டிற்கு தன்னுடைய நாட்டின் பாதுகாப்பு மீது மட்டுமல்ல அயல் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகவும் பொறுப்புணர்வு உண்டு இலங்கை அதனை உதாசீனப்படுத்தியிருக்கின்றது.

இந்தியா தனது புதிய நகர்வுகளை பின்வரும் ஒழுங்குகளில் மேற்கொள்ளலாம் என ஆய்வாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

1.சார்க் மாநாட்டினைப் பயன்படுத்தி இந்தியப் படைகளை கொழும்பில் இறக்கி படைத் தலைமையகம் புலனாய்வுத் தலைமையகம் என்பவற்றை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல்

2. அரசியல் தீர்வை வைக்கும்படி வற்புறுத்தல்.

3. அவ் அரசியல் தீர்வினை புலிகளை ஏற்கும் படி அழுத்தம் கொடுத்தல்.

4. புலிகள் அரசியல் தீர்வினை எற்காவிடின் இந்தியாவின் தலைமையில் சகல வழங்களுடன் புலிகள் மீது போர் தொடுத்தல்.

*தொடர்ச்சி 14 ம் பக்கம்*

## மலையகத்தில் அரசியல் தலைமைகள் இல்லை. சந்தாத் தலைமைகளே இருக்கின்றன !

மனோகணேசன்



10




11

கலாநிதி விக்ரமபாகு

## தமிழ் மக்களின் போராட்டத்தினை அங்கீகரிப்பதே ஓரே வழி !

## சமூக வரலாற்று ஆய்வினை வேண்டி நிற்கும் தேச வழமைச் சட்டம்.

பேராசிரியர்.கார்த்திகேசு.சிவத்தம்பி.



13

அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கருத்துக்களம்

## போராடிப் பெறாத எந்த இனமும் வரலாற்றில் நிலைத்து நின்றதில்லை.

சமதர்மம் ஆசிரியருக்கு!
சென்ற மே மாத இதழ் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. இதழ் பல கோணங்களிலும் இருந்து பேச முற்படுவது தெரிகின்றது. செய்திப் பத்திரிகை என்றால் அதன் அர்த்தம் இப் பத்திரிகையிலேயே அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் விடயங்களை குறிப்படலாம். சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் நேபாள அரசியலில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது தொடர்பிலான ஒரு கண்ணோட்டத்தை தமிழ்ச் சூழலில் அறிமுகம் செய்து வைக்கும் செய்திகளை அறிந்து கொண்டேன். இது நல்ல ஆரோக்கியமான படைப்பாக இருந்தது.
அதுபோல ஆபிரிக்கா மற்றும் மூன்றாம் உலக தேசங்களின் அரசியல் வரலாற்றுப் போக்குகளை தொடர்ச்சியாக அறிமுகம் செய்து வைத்தால் உண்மையில் எமக்கு வெளியில் அந்தந்த நாடுகளில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை அறியும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும் , நம்பகத்தன்மையுடன் கூடிய உங்களின் பார்வைகள் இருப்பதையும் வரவேற்கின்றேன்.

உங்கள் பத்திரிகை ஓர் கட்சிப்பத்திரிகை என்றபடியால் கட்சியின் பிரச்சாரத்தன்மை இருப்பது உணரக்கூடியது. குறிப்பாக நாட்டின் நிலவரங்களை பேசுகின்ற, அதன் திசைவழியை உணர்த்துகின்ற போதனைகளை அக்கறைப்படுத்தும் விதத்தில் இருப்பது பாராட்டத்தக்கது. சுயநிர்ணய உரிமையுள்ள மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வுகள் பிரதிபலிக்ககூடிய ஆர்வங்கள் தொட்டுணரத்தக்கதாக அமைந்திருக்கின்றது. உங்களின் மட்டுப்படுத்தலுடன் கூடிய இவ் ஆர்வம் அவசியமும் கூட என உணர்கின்றேன். கிழக்கு மாகாணசபைத்தேர்தல் தொடர்பான பலதரப்பட்ட கோணங்களில் முன்வைக்கப்பட்ட கருத்துகள் பல தெளிவுக்கு என்னை இட்டுச்சென்றது.

கடைசியாக நினைவில் நிறுத்தி நிஜக்கண்ணாடியை ஒரு தடவை இன்றைய நிகழ்காலத்திற்கும் பொருந்தக்கூடிய எழுத்தை எமக்கு சமர்பித்த சிவராமுக்கும், உங்களுக்கும் எனது சம வந்தனங்கள்.

*நிலாவெளியிலிருந்து கெங்காதேவி.*

## சமதர்மம் தொடக்கம் நன்று

சமதர்மம் பார்க்க கிடைத்தது சந்தோசம். சிவராம் பற்றிய கட்டுரையும் பாலியல் தொழிலாளி பேபியம்மாவின் நேர்காணலும் வரவேற்றகத் தக்ககது

பெண்ணியம்,தேசியம் பற்றிய கோட்பாடுகளுக்கு இடம் ஒதுக்குவது நல்லது. உலகமயமாக்கல் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

எழுத்துப் பிழைகள் அதிகமாக உள்ளன தரம் வாய்ந்த பத்திரிகைக்கு இது அழகல்ல, பக்க வடிமைபபிலும் கவனம் தேவை

*எம். செல்லத்துரை செட்டித் தெரு கொழும்பு*

*வாகர்களுக்கு..!*
*உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்*
*தொடர்பு முகவரி*

*வாசகர் கருத்துக்களம்*
*புதிய சமதர்மம்*
*143 /3 கீயு வீதி கொழும்பு. 02*
*தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963*
*putiyasamadarmam@gmail.com*
இணையத்தளம்: *www.nssp.info*

# அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் மக்கள் எழுச்சி

அரச ஊழியர்களுக்கு மாதாந்த வேதன உயர்வாக ஆயிரம் ரூபாவினை யூலை மாதத்திலிருந்து வழங்க மகிந்த அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இது உண்மையில் 625.00 ரூபாய் உயர்வாகவே இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்க ஊழியர்களில் ஓய்வுதியம் பெறும் முன்னாள் அரசாங்க ஊழியர்களுக்கு இது பொருத்தப்படமாட்டாது. இது கடந்தகாலங்களில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாகவே இந்த ஏற்பாடு ஏடுக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர்கள் 5000.00 ரூபா சம்பள உயர்வை முன்நிறுத்தி நாடளாவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட முற்பட்டிருக்கின்ற வேளையில் அரசு அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வை மாத்திரம் அதுவும் ஆயிரமாக உயர்த்தி தப்பிக்க வழிதேடுகின்றது. அரசாங்க ஊழியர்கள் போலவே தனியார் ஊழியர்களினதும் சம்பள உயர்வை தீர்மானிக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அரச ஊழியர்களுக்கு சகல வேதனங்களையோ அடிப்படை தேவைகளையோ அதிகரிக்க எடுக்கும்போது தனியார் ஊழியர்களினதும் சம்பள உயர்வை அதே கால கட்டத்தில் அதே தேவையில் பரீசீலனை செய்வது அதன் கடமையாகும். இது வழக்கத்தில் இருந்து வருகின்றது. அவ்வகையில் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு என்பதன் அடிப்படையில் அரச, தனியார் ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கும் தேவைக்குமான அவசிய சம்பள உயர்வை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

இது குறிப்பாக, தொழிற்சாலை, அரச, தனியார் சேவைத் திணைக்களங்கள், ஓய்வுதியம் பெறுபவர்கள் ஆகியோர்களின் வாழ்க்கைக்கு அரச,தனியார் நிறுவனங்களே பொறுப்பக்கூற வேண்டிய அவசியம் இருக்கின்றது. அரசாங்கம் தான்தோன்றித்தனமாக முழு நாட்டினையும் இராணுவ ஆட்சியில் வைத்துக்கொண்டு, வேண்டிய இராணுவ அழுத்தங்களை மக்கள் மேல் செலுத்தி, பயத்தில் அச்சுறுத்தி ஆட்சியை நடாத்திக்கொண்டிருக்கின்றது. இதற்கு தேவையான வளங்களை பயன் படுத்துகின்றது. தனக்குத் தேவையான கொள்கையை முன்மொழிகின்றது. தனக்குத் தேவையானவைகளை சுரண்டிக்கொள்கின்றது. தனக்குத் தேவையானவைகளையெல்லாம் எடுத்துக்கொள்கின்றது. யுத்தம் ஒன்றே தனது தெரிவாகக் கொண்டு யுத்தத்தை நடாத்துகின்றது. அதற்கான வளங்கள் எல்லாம் கரைந்து தேய்ந்து ஒழிந்து போகின்றது. நாளாந்தம் இந்நாட்டுப் பிரஜையின் தலையை வைத்து கடனுக்கு மேல் கடன் பட்டு செலவு செய்கின்றது. சம்பந்தம் சம்பந்தமில்லாத விலையேற்றங்களைச் செய்து, நுகர்வு மற்றும் வர்த்தக முகாமைத்துவ முறை மையைப் பேணாமல் தராளமயமாக கொள்ளை ஈட்டும் முறைமையையும் ஊக்குவிக்கின்றது. இதனால் ஏற்பட்டிருக்கும் ஊழல், மோசடி, ஏமாற்று சூழ் நிலைகளால் மக்கள் எல்லோருமே தத்தழிக்கும் நிலைக்கு ஆட்பட்டுள்ளனர். இந்த நிலையினை பகிரங்கப்படுத்த முடியாத சூழ்நிலையில் இலங்கையின் சனநாயக அரசியல் இருக்கின்றது.

ஷஷஷஷஷஷஷஷஷஷஷஇதனை எதிர்த்து மக்கள் வீதிக்கு வர தயாராகுகின்றனர். யூலை மாதம் இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு மாதமாக மிளிர்கின்றது. யூலை இனக்கலவரம் தொடக்கிவைத்த அந்த துயரநிகழ்வுக்கு சான்றாய் ஒவ்வொரு யூலை மாதமும் இலங்கை அரசியல் நெருக்டியைச் சந்திக்கும் நிகழ்வுப்போக்காக அமைந்திருக்கின்றது. அங்காங்கே இனவாதிகளும் தாராளவாதிகளும் முதற்கொண்டு தொழிலாளர்கள் உட்பட தமது சம்பள உயர்வை முன்நிறுத்தி யூலை மாதத்தில் ஆரம்பித்து வைக்கவிருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் அரசாங்கத்திற்கு நெருக்கடியை கொடுக்க முன் தள்ளும் காரணியாக அமையப் போகின்றது. அனைவரும் பங்கேற்று, தத்தமது உயர்வுகளை வெளிக்காட்டி தமது உரிமையை, தேவையை நிலைநிறுத்த முன்வரும்தேவை எழுந்திருக்கின்றது. வாழ்வின் உத்திரவாதத்திற்கு கையேந்தும் நிலையில் இலங்கை மக்கள் தள்ளப்பட்டிருப்பது இலங்கை வரலாற்றில் ஒரு மீண்டும் மீண்டும் மாறி வருகின்ற போக்குத்தான் இன்னும் உள்ளது

# திண்ணையில்

*பரதேசி*

## ரணிலும் எருமைக்கன்றும் !

மகிந்தர் அரசு நரபலி எடுக்கத்தொடங்கியதுடன்
உயிர்அச்சுறுத்தல் பயம் அரசியல் வாதிகளை விட அவர்களின் மனைவிமாருக்குத்தான் அதிகம்
இப்பயம் ரணிலின் மனைவி மைத்ரேஜிக்கும் வந்துவிட்டது.
அவர் ஓடினார் சோதிடர்களிடம்.
சோதிடர்களும் சனிப்பாதிப்பு அவ்ருக்கு இருப்பதால் கிரியைகள் தேவை என்றனர்.
மைத்ரேஜி புருஸபக்தி உடையவர் அல்லவா!
கிரியைகளுக்கு ஆயத்தமானார்.
தன் ஆசிரியப் பணிகளையெல்லாம் தற்காலிகமாக
ஒத்திவைத்துவிட்டு இந்தியா சென்றார்.
தமிழ்நாடு குச்சனூர் சனீஸ்வரன் ஆலயத்தில் கிரியைகள் நடந்தன.
ரணிலுக்கு நீண்ட ஆயுள் வேண்டி பத்தொன்பது
வெற்றிலைகளில் நாணயங்கள் வைக்கப்பட்டு
மாலையாக கட்டப்பட்டன.
யாகங்கள் பூசைகள் செய்யப்பட்டு மாலை மைத்ரேஜின்
கைகளில் கொடுக்கப்பட்டது.
அவர் ஏற்கனவே தயாராக இருந்த எருமைக்கன்றின் கழுத்தில்
மாலையைப் போட்டார்.
ரணில் வராதபடியால் எருமைக்கன்றினை
தயார்படுத்தவில்லையோ! தெரியவில்லை.
பின்னர் எருமைக்கன்றுடன் கோவிலை பத்தொன்பது தடவை
சுற்றிவந்தார்.
ரணில் போல!
எருமைக் கன்றும் சாதுவாக அவர் பின்னால் சென்றது.
பத்தொன்பது பேருக்கும் தட்சணையும் அன்னதானமும் கொடுத்தார்
மைத்ரேஜி.
எருமைக்கன்றையும் தானமாக கோவிலுக்கு வழங்கினார்.
பாதுகாப்பு கருதி எல்லாம் இரகசியமாகவே நடந்தன.
கோவிலில் நின்ற மக்களுக்கு ஒரே ஆச்சரியம்.
சுடிதாருடனும், பொப்தலையுடனும் இருக்கும் பெண்ணுக்கும்
புருஸபக்தி வருமா?
எட்டுமுழச் சேலையுடனும் நீண்ட கூந்தலுடனும் இருக்கும்
பெண்களுக்குத்தான புருஸபக்தி வரும் என்ற
நினைப்பு அவர்களுக்கு!
நேரம் செல்லத்தான் அவர்களுக்கு அப் பெண்
யாரெனப்புரிந்தது.
கோவிலில் நின்ற பெண்கள் அனைவரது கண்களிலும் கண்ணீர்.
இவ்வளவு புருஸபக்தியா?
இப்பொழுது எழும் கேள்வி
இச்செய்தி மகிந்தரின் மனைவி சிராந்திக்கு தெரியுமா?
அவர் எபபோது குருவாயூர் ஐயப்பன் கோவிலுக்கு
செல்லப்போகின்றார்?

## தென்னிலங்கை உயர்கல்வி நிலையங்களும் தமிழ் மாணவர்களும்.

சிங்களப் பெரும்பான்மைக் கல்வி நிலையங்களில் தமிழ் மாணவர்கள் கற்பது எதிர்வரும் காலங்களில் சாத்தியமானதா?
இன்றைய சூழலில் தமிழ்மக்களிடம் எழும் மிகப்பெரும் கேள்வி இது.
இக்கல்வி நிலையங்களில் தமிழ் மாணவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.
மாணவர் மன்றங்கள் எல்லாவற்றிலும் பெரும்பான்மை ஆதிக்கம்!
தமிழ்மன்றம் மட்டும் ஒரே பாக்கி!
தமிழ் மொழி மூலமானவர்களுக்கு கல்வி வாய்ப்புகளும் பெரியளவிற்கு இல்லை.
அதைதட்டிக் கேட்கும் துணிவும் தமிழ்
விரிவுரையாளருக்கு இல்லை.
ஆங்கில மொழிவழிக்கல்வி சற்றுப் பறவாயில்லை.
சிங்கள மாணவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு
இவர்களுக்கும் கிடைக்கும்.
மாணவர் உரிமைகள் அங்கும் இல்லை.
ஏதோ படித்துவிட்டுச் செல்வோம் என வந்தனர் தமிழ் மாணவர்கள்.
உயர்கல்வி நிலையங்களினால் கிடைக்கும் ஆளுமை வளர்ச்சி கிடைப்பதில்லை என அவர்களுக்கும் கவலைதான்.
என்ன செய்வது பொறுத்துக் கொண்டனர்.
தற்போது உயிருக்கே ஆபத்து!
தென்னிலங்கையில் குண்டு வெடித்தால் இவர்கள் சக மாண்வர்களாலேயே தாக்கப்படுகின்றனர்.
இலங்கைத்தீவு சமூகளவில் இரு தேசங்களாக பிரிந்த பின்னர் இது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான்.
தற்போது எழும்கேள்வி
எதிர்காலத்தில் என்ன செய்வது?
தமிழ் மாணவர்களுக்கென தனியான உயர்கல்வி நிலையங்களை உருவாக்குவதைத் தவிர வேறுவழி இருக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மயமாக்கலுக்கு வழிவிடும் கிழக்கு மாகாணசபை!

சுப்பிரமணியம்

மீன் சந்தையில் மீன்கள் விற்று முடிந்தாலும் நாற்றம் தொடர்ந்து அடிப்பதுபோல கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் ஒருவாறு முடித்துவைக்கப் பட்டாலும் அது உருவாக்கிய களேபரங்கள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஹிஸ்புல்லா பிடிவாதமாக நின்று பின்னர் சரணடைந்திருக்கின்றார். அவர் பிடிவாதமாக நின்றார் என்பதை விட அவ்வாறு நிற்க வேண்டிய கட்டாயம் அவருக்கிருந்தது. அதேபோல பின்னர் சரணடைய வேண்டிய நிாப்பந்தமும் அவருக்கிருந்தது. ஜனாதிபதி மகிந்தர் இறுதி முயற்சியாக கடும் தொனியை முடுக்கிவிட்டமையினால் அவர் வெற்றி பெற்றிருக்கின்றார். ஆனால் அவ்வெற்றி ஹிஸ்புல்லாவை மட்டுமல்ல அவரது வெற்றிக்கு துணையாக நின்ற முஸ்லீம் அமைச்சர்களினது அரசியல் வாழ்வையுமே இல்லாமல் செய்யும் நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஏனெனில் இவ்விவகாரம் வெறுமனே ஹிஸ்புல்லா–மகிந்தர் விவகார மல்ல. கிழக்கு முஸ்லீம் சமூகத்தின் பன்மைத்தன்மை, தன்மானம், இருப்பு பற்றிய விவகாரமாகும்.இதனை வெறுமனே ஒற்றைத்தன்மை வாய்ந்த சூத்திரத்தின் மூலம் தீர்த்துவிட முடியாது. பிள்ளையான் ஆயுத அடக்குமுறை மூலம் தமிழ் மக்களை மௌனமாக்கி முழுக் கிழக்குத் தமிழ் மக்களையும் பேரினவாத்தின் முன் பொம்மையாக்கியது போல முஸ்லீம் மக்களும் பிள்ளையானின் பொம்மையாகி விடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இலங்கையில் நவீன ஜனநாயகத்தின் அறிமுகமே இத்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொண்டே அறிமுகமானது. இதனால் தான் ஆங்கிலேயர்கள் கோல்புறூக்அரசியல் சீர்த்திருத்தத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறைமையைக் கொண்டுவந்தனர். இப்பிரதிநிதித்துவ முறைமையினை இனங்களுக்கான அதிகாரப் பங்கீடு வரை வளர்த்துச் சென்றிருக்க வேண்டும். டொனமூர் குழுவினர் கூட இதனைச் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால் பேரினவாத நலன்கள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இதன் விளைவே இன்று சிந்தப் படுகின்ற இரத்தங்களாகும்.

மத்திய அரசாங்க மட்டத்தில் தோன்றிய நிலையே இன்று மாகாண சபை மட்டத்திலும் தோன்றியுள்ளது. மத்திய அரசாங்கம் ஒரு செம்மையான அதிகாரப் பங்கீட்டிற்கு எக்காலத்திலும் இணங்காத நிலை யில் தான் தற்போது போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதே போன்ற அதிகாரப்பங்கீட்டுப் பிரச்சினை தற்போது கிழக்கிலும் தோன்றியுள்ளது. கிழக்கில் வாழும் மூன்று இனமக்களும் ஒரு வருடைய அதிகாரத்தின் கீழ் ஒருவர் வாழவிரும்பவில்லை என்பதே உண்மை நிலையாகும். இவ்வுண்மையினை விளங்காத நிலையில் தமிழ்த்தேசியத்தையும் அதன் வழியிலான தமிழ் மக்களின் கூட்டிருப்பினையும் சிதைக்க வட - கிழக்கினைப் பிரித்த அரசாங்கம் இன்று முஸ்லீம் தேசியத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது.

எப்போதும் ஒரு அரசியல் பிரச்சினைக்கு குறுக்கு வழித் தீர்வுகளைக்காண முயன்றால் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தான் முகம் கொடுக்க வேண்டி வரும். குறுக்கு வழித் தீர்வுகள் சில தற்காலிகமான வெற்றிகளைத் தரலாம். ஆனால் ஒரு போதும் நிரந்தரமான வெற்றியைத் தந்துவிடாது. இணைந்த வட-கிழக்கில் அங்கு பெரும்பான்மையாக வாழும் இரு சமூகங்களுக்கும் நியாயமான வகையில் அதிகாரங்களைப் பங்கிடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் இவ்வாறான நெருக்கடிகளைத் தீர்த்திருக்க முடியும். அங்கு வாழும் சிங்கள மக்களுக்கு கூட சில தனித்துவமான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். வட-கிழக்கு மண்ணில் தமிழ்-முஸ்லீம் மக்களுக்கு உள்ள உரிமை சிங்கள மக்களுக்கு இல்லாவிட்டாலும் அரசியல் நாகரீக முன்மாதிரி ஒன்றிக்காக தமிழ்-முஸ்லீம் மக்களும் அதற்கான ஒத்துழைப்பினை வழங்கியிருப்பர்.

மகிந்தர் ஆட்சிக்கு வந்த காலம் தொடக்கம் பேரினவாத நிகழ்ச்சி நிரலின்படியே தொழிற்பட்டிருக்கின்றார். அவருடைய இராணுவ நிகழ்ச்சி நிரல் என்றாலும் சரி அவருடைய அரசியல் நிகழ்ச்சி நிரல் என்றாலும் சரி பேரினவாத நிகழ்ச்சிநிரலின் படியே இடம் பெற்றிருக்கின்றது. அவர் இராணுவ நிகழ்ச்சி நிரலின்படி கிழக்கைக் கைப்பற்றினார். தொடர்ந்து வடக்கினைக் கைப்பற்றுவதற்காக வன்னி மீது போர் தொடுத்தார். இன்று வன்னிப் போரினை முன்னே கொண்டு செல்லவும் முடியாமல், பின்னே கொண்டு வரவும் முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றார். அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி வடக்கு- கிழக்கு இணைப்பைப் பிரித்தார். சர்வகட்சிக்குழுவின் முதல் ஆலோசனையை கிடப்பில் போட்டார். பின்னர் உப்புச்சப்பற்ற தனது யோசனையை சர்வகட்சிக் குழுவின் யோசனையாக வெளிவரச்செய்து சர்வகட்சிக் குழுவையே நோண்டியாக்கினார். தொடர்ந்து தனது செயற்பாட்டின் உச்ச நிலையாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்தினார். பேரினவாதத்தை திருப்திப் படுத்துவதற்காகவும், மாகாண சபையை தனது நேரடிகட்டுப் பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கா கவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சின்னத்தில் தனக்கு ஆதரவான பிள்ளையான் குழுவையும் முஸ்லீம் தரப்பையும் ஒன்றாகப் போட்டியிடச் செய்தார்

அவரது முதற்சறுக்கல் வேட்பாளர் பட்டியல் தயார் செய்யும் போதே ஏற்பட்டது. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நிறைவேற்று என்பதற்கிணங்க ஹிஸ்புல்லாவிற்கு நீரே முதலமைச்சர் என்றார். அதேவேளை பிள்ளையானுக்கும் நீரே முதலமைச்சர் என்றார். இதனால் ஒரேகட்சியில் போட்டி யிட்ட இருவர் தாங்களே முத லமைச்சர் எனப் பிரச்சாரம் செய்யும் அதிசயம் நிகழ்ந்தது. முஸ்லீம் காங்கிரசின் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து போட்டியிட முன்வந்ததும் பிரச்சாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. பிரச்சார நிலமை முற்றவே அதிகூடிய பிரதிநிதிகளைப் பெறும் தரப்பிற்கு முதலமைச்சர் பதவி என்றார். இதனை நம்பி முஸ்லிம் அமைச்சர்கள் பட்டாளம் தமது ஆள், அம்பு பரிவாரங்களுடன் கிழக்கில் முகாமிட்டது. மிரட்டல், தாக்குதல், பெட்டி நிரப்புதல் என அனைத்து குழறுபடிகளையும் செய்து கட்சியை வெற்றியீட்டச் செய்ததோடு மகிந்தர் கேட்ட பெரும்பான்மைப் பிரதிநிதிகளையும் பெற்றுக்கொடுத்தது.



தேர்தல் முடிந்தவுடன் முஸ்லீம் தரப்பு நமக்கே முதலமைச்சர் பதவி என்றனர். மகிந்தர் தேர்தலை நடாத்தியதே தமிழ்த்தேசியத்தை சிதைப்பதற்குத் தான். அதன்வழி கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்து வதற்குத்தான். அவரைப் பொறுத்தவரை இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் பிள்ளையானை முதலமைச்சராக்க வேண்டும்

மறுபக்கத்தில் பிள்ளையான்தரப்பு வாக்களிக்கச் செல்லும் வேலையைக் கூட தமிழ் மக்களுக்கு விட்டுவைக்கவில்லை. தாங்களே மக்களின் வாக்காளர் அட்டைகளை பறித்து பெட்டிகளை நிரப்பினர். பெட்டி நிரப்புவதற்கும் பல இடங்களில் ஆட்பற்றாக் குறை ஏற்பட்டதால் எல்லாப் பிரதேசங்களையும் அவர்களால் கவனிக்க முடியவில்லை. இதனால் இவர்களின் கால்படாத பிரதேசத்து மக்கள் ஒன்றில் தேர்தலை பகிஸ்கரித்தனர். அல்லது அரசாங்கத்தி ற்கு எதிராக வாக்களித்தனர். பிள்ளையான் தரப்புக்கு இருந்த ஆட்பற்றாக்குறை அரசாங்கப் பக்கத்தில் நின்ற முஸ்லீம் தரப்புக்கு இருக்கவில்லை. அவர்கள் போதியளவு ஆட்களை உள்ளூரிலும் திரட்டினர். வெளியூர்களிலிருந்து கொண்டு வந்தனர். முடிவு மகிந்தர் எதிர்பார்த்ததற்கு மாறாக பிள்ளையான் தரப்பு 6 பிரதி நிதிகளை மட்டும் பெற்றுக்கொள்ள முஸ்லீம் தரப்பினரால் எட்டுப் பிரதி நிதிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

மகிந்தரின் இரண்டாவது சறுக்கல் இங்குதான் நிகழ்ந்தது. மகிந்தர் மட்டக்களப்பு நகரில் ஒருசில பிரதேசவாதம் பேசியவர்களின் கருத்துகளை மட்டும் உள்வாங்கிக் கொண்டு கிழக்கு தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு சார்பாகத் தான் வாக்களிப்பர். ஒரு சில பிரதேசங்களே எதிர்நிலையில் இருக்கும். அங்கு பிள்ளையான் குழுவைக்கொண்டு பெட்டிகளை நிரப்பி வெற்றிபெறச் செய்யலாம். எனவே தேர்தலில் பிள்ளையான் குழுவின் பிரதிநிதிகளே அதிகளவில் வெற்றிபெறுவர். இவ்வெற்றியை வைத்து முஸ்லீம்களை சற்று அடக்கிவிடலாம் என்றே எதிர்பார்த்தார். இவருடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக, தமிழ்மக்கள் நடந்து கொண்டதனாலும், முஸ்லீம் தரப்பும் பிள்ளையான் குழுவுக்கு சற்றும் சோடைபோகாமல் பெட்டிகளை நிரப்பும் பணியில் ஈடுபட்டதனாலும் முஸ்லீம் தரப்பு பிள்ளையான் குழுவினைவிட அதிகளவிலான பிரதிநிதிகளைப் பெறமுடிந்தது.

தேர்தல் முடிந்தவுடன் முஸ்லீம் தரப்பு நமக்கே முதலமைச்சர் பதவி என்றனர். மகிந்தர் தேர்தலை நடாத்தியதே தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்குத் தான். அதன்வழி கிழக்கில் புலிகளைப் பலவீனப் படுத்துவதற்குத்தான். அவரைப் பொறுத்த வரை இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் பிள்ளையானை முதலமைச்சராக்க வேண்டும். அதேவேளை முக்கிய விடயமாக இருக்கின்ற கல்வி, காணி அதிகாரங்களை சிங்களத் தரப்பிடம் வைத்திருக்கவேண்டும். இதற்கேற்பவே அவர் காய் நகர்த்தினார். முஸ்லீம் அமைச்சர்களின் எதிர்ப்புகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு பிள்ளையானை முதலமைச்சராக்கினார். கல்வி, காணி அமைச்சுக்களை அம்பாறைச் சிங்களவரான விமல வீர திசநாயக்கவுக்கு வழங்கினார். ஒரு அமைச்சினை மட்டும் ஹிஸ்புல்லா ஓடிக் களைத்து திரும்பி வருவதற்காகக வெற்றிட மாக வைத்திருந்தார். ஓடிக் களைத்த ஹிஸ்புல்லா பின்னர் பவ்வியமாகப் அதனைப் பெற்றிருக்கின்றார். ஹிஸ்புல்லாவிற்கு வெளியில் தங்குமிடம் எதுவும் கிடையாது. கொள்கை நெருக்கடியும் அவருக்கு இல்லை. அதனால் அவர் மகிந்தரிடம் திரும்பி வந்திருக்கின்றார்.



ஒரு அமைச்சினை மட்டும் ஹிஸ்புல்லா ஓடிக்களைத்து திரும்பி வருவதற்காகக வெற்றிட மாக வைத்திருந்தார். ஓடிக் களைத்த ஹிஸ்புல்லா பின்னர் பவ்வியமாகப் அதனைப் பெற்றிருக்கின்றார். ஹிஸ்புல்லாவிற்கு வெளியில் தங்குமிடம் எதுவும் கிடையாது. கொள்கை நெருக்கடியும் அவருக்கு இல்லை. அதனால் அவர் மகிந்தரிடம் திரும்பிவந்திருக்கின்றார். முஸ்லீம் சமூகம் வரவில்லை.

முஸ்லீம் சமூகம் வரவில்லை. ஹிஸ்புல்லா திரும்பி வந்திருந்தும் நிலமை சீரடைய வில்லை. பிள்ளையான் நிருவாகம் ஒரே நேரத்தில் முஸ்லீம் தரப்பு, பேரினவாத்தரப்பு, இராணுவத் தரப்பு ஆகிய மூன்றிற்கும் முகம் கொடுக்க வேண்டி ஏறப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு பெரியளவில் அதிகாரங்கள் எதுவும் கிடையாது. இருந்த அதிகாரங்களில் பலவற்றைக்கூட மத்திய அரசாங்கம் திரும்பப்பறித்து விட்டது. குறிப்பாக மாவட்ட வைத்திய சாலைகள், ஆதார வைத்திய சாலைகள் என்பவை தொடர்பான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் திரும்ப எடுத்துவிட்டது. பொலீஸ் அதிகாரம் அரசியல் யாப்பில் இருக்கின்ற போதிலும் அவ்வதிகாரம் இதுவரை வழங்கப் படவில்லை. எதிர்காலத்தில் வழங்கும் எண்ணமும் அரசுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. ஹெலஉறுமயவும் இவ்வதிகாரங்கள் வழங்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம் எனக் கூறியுள்ளது. காணி அதிகாரம் மாகாண சபைகளுக்குக் கிடையாது. அது மத்திய அரசாங்கத்தின் அதிகாரமாகும். காணி தொடர்பான கொள்கைகள் அதில் குடியேற்றப் படுபவர்கள் பற்றிய கொள்கைகளை மத்திய அரசாங்கமே தீர்மானிக்கும். மாகாண சபை இது தொடர்பான நடை முறை வேலைகளை மட்டுமே கவனிக்கும் என அரசியல்யாப்பு குறிப்பிடுகின்றது. நடைமுறை அதிகாரத்திற்கான அமைச்சினைக் கூட ஜனாதிபதி சிங்களவர் ஒருவருக்கே வழங்கியிருக்கின்றார். எனவே இனிவரும் காலங்களில் சட்டரீதியாகவே சிங்களகுடியேற்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கலாம்.

தொடர்ச்சி 15 பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு–கிழக்கு – தென் இலங்கை முஸ்லீம்களினது அரசியல் அடையாளம் ஒன்றல்ல!

இலங்கை முஸ்லீம்களின் ஒட்டுமொத்தமான அரசியலை அவர்களுடைய அபிலாசைகள், அரசியல் தேவைகள், சூழலின் நெருக்கடிகள் போன்ற காரணகளை மறுதலித்துவிட்டு ஒரு ஏகபோக – தனித்த அரசியல் அடையாளத்தின் கீழ் ஒரு போதுமே முன்னெடுக்கமுடியாது. அந்த முன்னெடுப்பானது ஒரு பிரதேசத்தில் வாழும் முஸ்லீம்களை தொடர்பில்லாத அரசியலுக்குள் தக்கவைத்திருப்பதன் மூலம் இலங்கை முஸ்லீம்களின் ஒரு பகுதியினரை அரசியல் ரீதியான மிகப்பெரும் பாதிப்புள்ளாக்கிவிடும் இனமாக மாற்றிவிடும் அபாயத்தைக் கொண்டிருக்கின்றது. இலங்கை முஸ்லீம்களுடைய அரசியலில் மட்டுமல்லாது கலாச்சார, சமூக அமைப்பு முறைகளிலும் இம்மக்களிடையே பலவாறான வேறுபாடுகள் காணப்படுகின்றன. வட-கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனித்த போக்காகவும் - தென்னிலங்கை முஸ்லீம்கள் ஒரு தனித்த போக்காகவுமே எப்போதும் தங்களுடைய இனத்துவ வாழ்வில் உள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இலங்கையில் ஒரு தனித்த இனமாக முஸ்லீம்கள் தங்கள் பொது அடையாளத்தின் மூலம் ஒன்றுபடும் அதேநேரம் இம்மக்களுடைய அரசியலை, அதனுடைய நியாயமான கோரிக்கைகளை ஒரு பொதுத்தளத்தில் எப்போதுமே சந்திக்க வைக்க முடியாது இருப்பதை சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கை முஸ்லீம்களின் அரசியல் வரலாற்றில் கண்டுவருகின்றோம். இந்த உண்மையை மறுதலித்தவிட்டு, இலங்கையில் வாழும் அனைத்து முஸ்லீம்களையும் - இணைந்த இலங்கைத் தேசிய முஸ்லீம்களின் அரசியல் கட்சி நாங்கள் தான் என மார்தட்டுவதில் தென்னிலங்கை, வட-கிழக்கில் வாழும் எந்த முஸ்லீம்களுக்கும் அரசியல் சுபீட்சம், விடுதலை ஒருநாளும் கிட்டிவிடப் போவதில்லை.

மாறாக இப்படியான ஒரு மாயைத் தோற்றத்தைக் கொடுப்பதன் ஊடாக முஸ்லிம் தனிக்கட்சி அரசியல் நடத்துபவர்கள் அரசியல் இலாபத்தை அடைந்து கொள்ளலாம். சிங்களத் தேச நாட்டில் சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் தங்கள் வாக்குப் பலத்தை நிரூபிப்பதற்கும், தேசியப் பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதன் ஊடாக தங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கையை அதிகரித்துப் பேரம் பேசுவதற்கும் அமைச்சர் பதவிகள், இலாகாக்களுக்கான பணிப்பாளர் பதவிகள் பெறுவதற்கும் மட்டுமே இவ்வரசியல் பயன்பட முடியும். 1987 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்றப் பிரவேசத்திற்கு முன் தென்னிலங்கை அரசியல் தலைமையே இலங்கை முஸ்லிம்களின் ஏகபோக அரசியல் தலைமையாக அரசியல் நடாத்திக்கொண்டிருந்தது. இந்தத் தலைமை முஸ்லிம்களின் உணர்வுகளை முற்றாக பிரதிபலிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையாக இல்லாதுவிட்டாலும் கூட, தென்னிலங்கை முஸ்லிம்களின் நலனில் அதிக அக்கறை கொண்டிருந்தது. இன்னொரு வகையில் செரல்வதானால் அத்தலைமைகளின் பூரண விருப்பு தென்னிலங்கையாகவே இருந்தது.

வரலாறு தந்த நெருக்கடியின் காரணமாக தென்னிலங்கை அரசியல் தலைமைக்கும் வட-கிழக்கு முஸ்லிம் மக்களுக்கிடையே அடிப்படையான முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளால் வட-கிழக்கு முஸ்லிம்களின் இனத்துவப் பாதுகாப்பிற்கு எந்தவிதமான காப்பீடுகளையோ தீர்வையோ பெற்றுத்தர முடியாது என்பது உணரப்பட்டது. இவ்வுணர்தலின் பிரதிபலிப்பே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கான வட-கிழக்கு முஸ்லிம்களின் அங்கீகாரமாகும். அதாவது, வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் தலைமையும் ஆகும். இம்மக்களின் அரசியல் முதன்மைப்படுத்தும் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கான அரசியல் ஸ்தாபனத்தின் தேவையாகவே அது வெளிப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின் வட-கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் தங்கள் ஏகோபித்த அரசியல் ஸ்திரத்தைப் பெற்றிருந்த சிங்களத் தேசியக் கட்சிகளின் தென்னிலங்கைசார் முஸ்லிம் தலைமையை முஸ்லிம் காங்கிரசின் வருகையுடன் பெருமளவு அகற்ற முடிந்தது.

தென்னிலங்கை முஸ்லிம்கள், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியலுக்குமிடையே மிகப்பெரும் வேறுபாடுகள் நிலவுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால் இவ்விருபிரதேச முஸ்லிம்களின் அரசியல் உணர்வுகள், தேவைகள் எப்போதுமே எதிர்நிலை வகிக்கக்கூடியதாகவே உள்ளது. இது மிகத் தெளிவாக வட-கிழக்கு முஸ்லிம்களுடைய அரசியல் கோரிக்கையில் தென்னிலங்கை முஸ்லிம்களால் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்காக தோற்றம் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது பாராளுமன்ற அரசியல் சிந்தனைப் போக்கால் - அதன் விருப்பால் தனது அரசியலை தென்னிலங்கைக்கும் வியாபித்ததன் காரணமாக கடந்த 14 வருடங்களில் அதனுடைய அரசியலில் - வட-கிழக்கு முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு, அதிகார அலகில் எந்தவிதமான கோரிக்கைகளையும் தீவிரமாக முன்வைத்து அக்கோரிக்கைக்காக போராட முடியாது போயிருப்பதையும் காண்கின்றோம்.

ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தன்மையை நுண்ணியதாக பார்க்காமல் வெறும் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலை நடாத்தும் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளாக இருந்தாலும் சரி, வட-கிழக்கு முஸ்லிம் தலைமையாக இருந்தாலும் சரி அத்தலைமைகளால் ஒரேநேரத்தில் ஒரு பொதுவான அரசியலின் கீழ் இரு பிரதேச முஸ்லிம்

> *தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளால் வட–கிழக்கு முஸ்லிம்களின் இனத்துவப் பாதுகாப்பிற்கு எந்தவிதமான காப்பீடுகளையோ தீர்வையோ பெற்றுத்தர முடியாது என்பது உணரப்பட்டது. இவ்வுணர்தலின் பிரதிபலிப்பே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றம்*

*தொடர்ச்சி 13 பக்கம்*

# முஸ்லீம்களின் அரசியல் அபிலாசைகளை இலங்கையின் அரசியல் முறைமைக்குள் உள்ளீர்த்தல் !

**சிராஜ் மஷ்ஹீர்.**

இலங்கை முஸ்லீம்கள் தமது அடையாளத்தை மொழியைவிட சமயத்தின்(மதத்தின்)அடிப்படையிலேயே நிலைநிறுத்தியுள்ளனர் எம்.ஏ.நு.்.மானின் கருத்துப்படி, “19ம் நூற்றாண்டின் பிந்திய பகுதியிலும் அதன் பின்னரும் படித்த முஸ்லீம்களிடையே மொழி அடையாளத்தை மறுக்கும் பலமான அரசியல் உணர்வு காணப்பட்டது.(நு.்.மான்2004: 15). சுதந்திரத்திற்கு முந்திய காலப் பிரிவில் தனியான முஸ்லீம் அடையாளத்திற்கான பலமான அடித்தளம் ஒன்று நிறுவப்பட்டது. சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பிரிவை முஸ்லீம் அடையாளத்தினது வளர்ச்சியின் இரண்டாவது கால கட்டமாகக் கொள்ளமுடியும். இக்காலப் பிரிவில் முஸ்லீம் அடையாளம் பற்றிய பிரக்ஞை ஆழப்பட்டதோடு,நிறுவனமயப் படுத்தப் பட்டது என நு.்.மான் மேலும் குறிப்பிடுகின்றார்.

“1980கள்,முஸ்லீம் அடையாளத்தினது வளர்ச்சியின் மூன்றாவது கட்டமாக குறிப்பிடப் படுகின்றது. வடக்கு - கிழக்கிலும் தமிழ் ஆயுதப்போக்கினது வளர்ச்சி மற்றும் 1985 இலிருந்து அவர்கள் முஸ்லீம்கள் மீது காட்டிவந்த மோதல் மனப்பாங்கு என்பன கடுமையான பாதுகாப் பின்மை பற்றிய உணர்வை கூர்மைப படுத்தின்.’’(மேலது: 26) சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஒரு பலமான அரசியல் சக்தியாக மேலெழுந்தமை இக்காலப் பிரிவின் குறிப்பிடத் தக்க ஒரு வளர்ச்சி நிலையாகும். கவர்ச்சிகரமான நலன்புரித் திட்டமொன்றை முன்வைப் பதற்குப் பதிலாக, சமூகத்தை அரசியல் மயப்படுத்துவதே முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபின் பிரதான இலக்காக அப்போது இருந்தது. பாமரமக் களும் விவசாயிகளுமே அவரது ஆரம்ப கால வெகுசன ஆதரவுத் தளமாக இருந்தனர். வெகுசன முஸ்லீம்களை ஒரு இயக்கமாக ஒருமைப் படுத்த மரபுவழித் தலைமைத்துவம் முயற்சிக்க வில்லை. வாக்காளர்களாக விருந்த அவர்களது கூட்டுப்பலம் பற்றிய போதிய தெளிவின் மையே அவர்களுக்குக் காணப் பட்டது (அமீர்தீன் 2006:130)

மு.காவின் வருகையின் பின்னரான இந்த அரசியல் பண்பு மாற்றம் இலங்கை முஸ்லீம்களது வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாக அடையாளப்படுத்தப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லீம் களது குரலாக முஸ்லீம் காங்கிரஸ் மாறியது. அதனது ஆரம்பகாலங்களில் மு.கா வெறும் அரசியல் கட்சியாக மட்டும் இருக்க வில்லை.– ஓர் அரசியல் இயக்கத்திற்கான பண்புகளையே அது வெளிக் காட்டியது. கிழக்கு முஸ்லீம்களது குரல் கொழும்பின் அதிகாரமையங்களில் மெது மெதுவாக எதிரொலிக்கத் தொடங்கியது. கலாநிதி சுமண சிறி லியனகேயின் வார்த்தைகளில் இதனை இப்படி வர்ணிக் கலாம்.“முஸ்லீம் அரசியலின் தளம் படிப்படியாக கிழக்குக்கு மாற்றப்பட்டது. முஸ்லீம் அடையாள அரசியலின் கிழக்கு நோக்கிய நகர்வானது இந்த மாற்றத்தைக் குறித்துக் காட்டுகின்றது. தனியான பிராந்திய சபைக்கான கோரிக்கை மற்றும் வெறும் அதிகாரப் பகிர்வல்லாத சுயாட்சிக் கோரிக்கை என்பன பிரதானமான அரசியல் கோரிக்கைகள்ளாக மாறின. தமிழ் ஆயுத வழிப்பட்ட தேசிய வாதம் மற்றும் இனப்பிரச் சினையில் முஸ்லீம் களுக்கு தீர்வை வழங்க முடியாத அரசின் ஓரந்தள்ளும் மனோபாவம் என்பன முஸ்லீம் தேசம் மற்றும் முஸ்லீம் தேசிய வாதம் என்பவற்றின் வளர்ச்சிக்கு பாரியளவு பங்களித்தன. ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைவதற் கான சமிக்ஞைகள முஸ்லீம் அரசியல் வெளிக்காட்டி வருகின்றது.. மரபுவழித் தலைமைத்துவத்தின் இயலுமை பற்றி கேள்வியெழுப்பும் கடும் போக்குடைய முஸ்லீம் இளைஞர்களை நாம் காண முடிகின்றது.’’ (லியனகே 2007)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒலுவில் பிரகடனம் முஸ்லீம் அரசியலின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையாகக் கொள்ளப்படுகின்றது. அதன் தீர்க்கமான வெளிப்பாடு, முஸ்லீம் அடையாள அரசியலினது வளர்ச்சி நிலையின் நான்காவது கட்டமாக நோக்கப்படுகின்றது.தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் அனுசரணையுடன் 29.09.2003 அன்று, பல்கலைக் கழக ஒலுவில் வளாக முன்றலில் இடம்பெற்ற முஸ்லீம் தேசிய எழுச்சியின்போது ஒலுவில் பிரகடனம் வெளியிடப் பட்டது. பல்லாயிரக்கணக்கான முஸ்லீம் மக்கள் இதில் பங்கு கொண்டு நேரடியாக இப்பிரகடனத்திற்கு தமது ஆணையைத் தெரிவித்திருந்தனர். இதன் காரணமாக வடக்குகிழக்கு முஸ்லீம்களது அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அங்கீகரிக்கத்தக்க அரசியல் ஆவணமாக இது மாறியுள்ளது. இதில் தென்னிலங்கை முஸ்லீம்கள் தொடர்பான அக்கறையும் வெளிக்காட்டப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

## முஸ்லீம் அடையாளமும் அதன் அரசியல் பரிமாணமும்:

அதன் பிரகடனங்கள் பின்வருமாறு:

1.வட - கிழக்கு முஸ்லீம்கள் தனி யான அரசியல் சமூகம்,தனி யான தேசிய இனம் அல்லது தனியான தேசம் (Separate Nationality or Nation) இங்கு தேசிய இனம் அல்லது தேசம் என்பது பொதுவான அரசியல் உணர்வினால் பிணைக்கப்பட்ட, பண்பாடு, கலாச்சார அம்சங்களில் தனித்துவமான மக்கள் கூட்டம் என்பதைக் குறிக்கின்றது.

2.வட–கிழக்கு பிரதேசம் முஸ்லீம்களின் பாரம்பரியத் தாயகம்.

3.வட – கிழக்கு முஸ்லீம்கள் தமது அரசியல் தலைவிதியினை தாமே தீர்த்துக்கொள்ளும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள்.

3.இன்றைய அரசியல் சூழலில், வட-கிழக்கு முஸ்லீம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை ஆட்புல எல்லையாகக் கொண்டதும், அரசியல் ரீதியில் சமத்துவமானதுமான ஒரு சுயாட்சி அரசியல் அதிகார அலகு, அரசியல் தீர்வில் எமக்கு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

4.வட - கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையில் சிதறி வாழும் எமது சகோதர முஸ்லீம் மக்களது சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார,உரிமைகள் நியாயமான முறையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதற்காகக்குரல் எழுப்புவதும் போராடுவதும் எமது கடப் பாடாகும். (ஒலுவில் பிரகடனம் 2003)

இந்தஅடிப்படையில் இலங்கை யின் மைய நீரோட்ட அரசிய லினால் புறந்தள்ள முடியாத ஒன்றாக, முஸ்லீம் அடையாள அரசியல் வலுவடைந்தும் முக்கிய பரிமாணம் பெற்றும் உள்ளது.

*நன்றி : மீள்பார்வை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கு இந்தியா செய்திருக்கும் உதவி !

மலைஞானி

தென் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்குத் தமிழர்கள் எப்போது வந்தார்கள் என்ற கேள்வி எழுப்பினால் பெரும்பாலான தமிழ் பேசும் மக்களும், பெரும்பான்மை சிங்களவர்களில் 90 சதவீதமானவர்களும் சொல்லக்கூடிய பதில் வெள்ளைக்காரன் காலத்தில் என்பதாகவே இருக்கும். ஆனால், வரலாறு அறிந்தவர்கள், இது தவறு என உணர்வார்கள். பெரும்பான்மையினரைப் போலவே தமிழாக்ளும் இந்நாட்டின் பூர்வீகக் குடிமக்களே. இந்த உண்மையை இந்நாடு சுகந்திரம் பெற்றபோது அதிகாரத்துக்கு வந்தவர்கள் உணர்ந்து நேர்மையான அரசியல் நடந்தியிருந்தால் இனப் பிரச்சினை இத்தனை சிக்கல்களையும் ஆக்ரோஷத்தையும் கொண்டதாக மாறியிருக்காது. எனினும், அன்றென்றில்லை, இன்று கூட உண்மைகள் தெரிந்திருந்தும் அவற்றை ஏற்றுக் கொண்டு பிரச்சனைக்கு முடிவு காண்பதற்கு விடாப்பிடியாக மறுத்து வரும் போக்கையே பேரினவாதத் தலைமைகளிடத்தில் நாம் காண்கின்றோம். இது இந்நாட்டின் துரதிஷ்டம்.

எல்லாளன் காலத்துக்கு முன்பிருந்தும் அதன் பின்வரும் அவ்வப் போது இலங்கையில் தென்னிந்தியர் குடியேற்றம் நடைப்பெற்றே வந்திருக்கிறது. சிங்கள அரசர்கள் இந்திய அரசர்களோடு கொண்டிருந்த நட்புரிமையும் உறவு முறையும் பல தமிழ்க் குடியேற்றங்களை இங்கே ஏற்படுத்தி வந்திருக்கின்றது. நாயக்க அரசர்கள் காலத்திலும் கோட்டே ராஜதானி கரலத்திலும் தென்னிந்தியத் தமிழர்கள் இந்நாட்டின் மலையகப் பகுதியில் அதிகமாகக் குடியேறினர். படைவீரர்கள், வர்த்தகர்கள், அரச அதிகாரிகள், சேவகர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் குடியேற்றங்கள் இங்கு நிகழ்ந்தன.

இந்த வரிசையில் இறுதியாக நிகழந்த தமிழ்க் குடியேற்றமே, வெள்ளைக்காரன் காலத்தில் நடைப்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வருகையாகும். 1830 முதல் 1940 வரை பல லட்சக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவதும் போவதுமாக இருந்ததோடு 1870க்குப் பின் அவர்கள் நிரந்தரமாக இங்கேயே தங்கினர். இன்றைய மலையக அல்லது இந்திய வம்சாவளித் தமிழர்கள் அனைவருமே, இத் தொழிலாளர் குடும்பங்களின் அல்லது இவர்களின் தேவைகளைப் போன்ற துணைத்துறைகள் சார்ந்தவர்களின் சந்ததியினராவர். எனினும், மலையகத் தமிழர்கள் என்ற பதம் தோட்டத் தொழிலாளர்களையே குறிக்கின்றது என்ற நினைப்பால் பல வம்சாவளித் தமிழர்கள் தம்மை அவ்வாறு அழைத்துக் கொள்வதில்லை என்பது தேவையான விஷயம்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி யினரின் இந்தியத் தொடர்புகள் தொன்மை வாய்ந்ததாக இருக்கின்ற போதிலும் இலங்கை சுகந்திரமடைந்த பின்னர் இவர்களின் நலன்களில் தொடர்ந்தும் அக்கறையற்ற ஒரு போக்கையே இந்தியா கடைப்பிடித்து வந்திருக்கின்றது. எனினும், இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்ந்தும் இந்தியாவின் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர்.

1971 ஜே.வி.பி கிளர்ச்சி சமயத்தில் இளைஞர்களுக்கு ரோகண விஜேவீர நடத்திய 'மூளைச் சலவை' வகுப்புகளில் இந்திய விஸ்தரிப்புவாதமும் ஒன்றாகும். இலங்கை வாழ் மலையக மக்கள் இந்நாட்டுக்கு விசுவாசமற்றவர்கள் என்றும் இந்தியாவுக்கு அவர்கள் விசுவாசமாக இருப்பது இலங்கை நலனுகளுக்கு உகந்தது அல்லவென்று இவ்வகுப்பில் எடுத்துச் சொல்லப்பட்டது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது ஒன்றாகும். அன்றைய விசுவாசம் எவ்வாறானதாக இருந்திருந்தாலும் இன்றைய பரம்பரையினர் மத்தியில் இந்தியா மீது பற்றும் மரியாதையும் இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் இலங்கைக்கு விசுவாசமானவர்களாக இருக்கின்ற அதேசமயம், மூதாதையர் நாடு என்ற பக்திபூர்வமான 'நம்ம நாடு' என்ற உறவு மனப்பான்மை அவர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது.

இங்கேதான் இந்தியா இவர்களுக்கு என்ன செய்கிறது? என்ற அக் கேள்வி வருகின்றது. ஶ்ரீமா-சாஸ்தரி ஒப்பந்தம் இப்போது 40 ஆண்டுகளின் பின்னர் பலராலும் மீளாய்வு செய்யப்படுகிறது. இப்படி ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டது இந்தியாவைப் பொறுத்தவரை சரியானதுதான் என்றும்; இதனால் இலங்கையில் இரண்டுங்கெட்டான் நிலையில் துயரத்தில் ஆழந்திருந்த குடும்பங்களை இந்தியா திருப்பி அழைத்துக் கொண்டது ஒரு முன்மாதிரியான அரசியல் பண்பு என்றும் சிலர் வாதிடுகின்றனர். இச் சொல் இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கையுடன் நெருங்கி வர உதவியது என்றும் இலங்கைக்குத் தலைவலியாக இருந்த பிரச்சனைக்கு தீர்வுகாண இந்தியா திறந்த மனதுடன் உதவியது என்றும் கருத்து முன்வைக்கப்படுகிறது.

எனினும், இந்த ஒப்பந்தத்தை தேவையற்ற இந்தியத் தலையீடு என வர்ணிப்பவர்களும் உள்ளனர். காலனித்துவ ஆட்சியின் கீழ் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு சுதந்திர இந்தியா பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் எழவில்லை. வெள்ளையர் ஆட்சியின்போது இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு மட்டும் அழைத்துவரப்படவில்லை. பிஜி, தென்னாபிரிக்கா, மலேசியா, மொரிசியஸ், மேற்கிந்தியத் தீவுகள் எனப் பல நாடுகளுக்கும் தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களின் சனப்பெருக்கம்;அந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த நிலையில் அம்மக்களின் ஒரு பகுதியினரையும் இந்திய அரசு திரும்பப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்தியா இந்நாடுகளுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வாறிருக்க, அண்டைய நாடான இலங்கையில் வாழும் தமிழர்களில் ஒரு பெரும் பகுதியினரை இந்தியா திரும்பப் பெற்றுக்கொள்ள இணங்கியது ஏன்? இவ்வாறு இணங்கியதால் மலையக மக்களின் பலத்தை, அரசியல் ரீதியாக காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற் கான சக்தியை இந்தியாவே குறைத்தது. மேலும் ஶ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் போது இந்திய அரசு தொண்டமான போன்ற மலையகத் தலைவர்களை அழைத்து கலந்தாலோசித்திருக்க வேண்டும். டெல்லி அரசு எதேச்சாதிகாரமாகவே நடந்து கொண்டதால் சிங்கள தேசியவாதிகளுக்கு அது உதவுவதாக அமைந்தது. இந்திய அரசு அச்சமயத்தில் தமிழக திராவிடக் கட்சிகளையும் கலந்து ஆலோசிக்கவில்லை. தென்னிலங்கையில் பல பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுவதற்கும் தோட்டங்களில் பெரும்பான்மை இனத்தவர்கள் பரவலாக தொழில்கள் பெறவும் பல இடங்களில் தமிழர்களின் செறிவு மிகக் குறைந்து போகவும் இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது. தென்னிலங் கையின் அவிசாவளை, மத்துகம, இரத்தினபுரி, கேகாலை போன்ற இடங்களில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ்க் குடும்பங்கள் தமது சுயத்தை இழந்ததற்கும் இந்த ஒப்பந்தமே காரணம் என்று வாதிடுவோர், அறுபதுகளில் தமிழும் கலையும் துரித வளர்ச்சி பெற்ற பதுளை மாவட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இம் மக்கள் புலம் பெயராமல் இருந்திருந்தால் எமது பேரம் பேசும் பலம் உரமாக இருந்திருக்கும் என்றும்; தீர்மானிக்கும் சத்தியாக இருந்திருப் போமெனவும் மலையகக் கட்சிகளைச் சேர்ந்தோர் ஆதங்கத்துடன் குறிப்பிடவே செய்கின்றனர். காலனித்துவ காலத்தில் வந்தவர்களை திரும்பவும் இந்தியா அழைத்துக் கொண்டாலும் ஒப்பந்தப் பிரகாரம் அனைவருமே பல தாமதங்கள் காரணமாக இந்தியாவுக்கு திரும்பிச் செல்லவில்லை. அவர்களும் திரும்பிச் சென்றிருந்தால் மலையக சமூகத்தின் பலம் மேலும் குன்றியிருக்கும். எந்தத் தனித்துவமுமின்றி பெரும்பான்மையுடன் கலந்து மறைந்திருப்பார்கள் என்றும் ஒரு தொழிற்சங்க பிரமுகர் சுட்டிக்காட்டுகிறார்.

ஶ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் இவ்வாறு மறுபரிசீலனையின் போது விமர்சனங்களுக்கு உள்ளாகும் அதே சமயம் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக ஒரு தொகை குடும்பங்களைத் திருப்பி அழைத்துக் கொண்டதோடு கடமை முடிந்து விட்டதாக இந்தியா கருதுகிறதா? என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் இந்தியாவை மூதாதயரின் நாடாகக் கருதி கௌரவிக்கும் அதேசமயம் இந்தியா இச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக என்ன செய்கின்றது? என்ற கேள்வியையும் இவர்கள் எழுப்புகின்றனர்.

இந்தியா இலங்கைத்தமிழக்கள் (வடக்கு கிழக்கு) விடயத்தில் கொள்ளும் கரிசனையில் 'ஒரு சிறு பகுதியைத்தானும் மலையக மக்கள் விவகாரத்தில் காட்டுவதில்லை என்றும் இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். உதாரணமாக நோர்வூட் ஆஸ்பத்திரி விவகாரத்தை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றன்.

மலையகத்தின் சுகாதார சேவை மிகவும் மோசமானது என்பது தெரிந்த விஷயம். நுவரெலியாவுக்கு அடுத்ததாக நாவலப்பிடியிலேயே பெரியாஸ்பத்திரி உள்ளது. நுவரெலியா மாவட்ட வீதிகளின் ஊடாக நோயாளிகள் மோசமான போக்குவரத்து வசதிகளின் மூலம் ஆஸ்பத்திரிகளை நோக்கி பயணம் செய்வது முதுகு ஒடியும் வேலை. நோர்வூட்டில் முழுமையன ஒரு ஆஸ்பத்திரி அமைக்கப்படுவது எவ்வளவு அவசியமானது என்பது நுவரெலியா மாவட்ட மக்களுக்குத்தான் தெரியும்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு இந்தியத் தூதரகம், நோர்வூட் ஆஸ்பத்திரியைத் தரமுயர்த்தி முழுமையான ஒரு ஆஸ்பத்திரியாக மாற்றி அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்து அது தொடர்பான பூர்வாங்க வேலைகளில் இறங்கியது. டெல்லிக்கு விவரங்கள் அனுப்பப்பட்டது. திட்ட வரைவு முழுமையாக்கப்பட்டது. நிதி ஒதுக்கப்பட்ட தாகவும் அறிய முடிந்தது. ஆனால் தற்போது ஆஸ்பத்திரி தொடர்பாக பேச்சு மூச்சே இல்லை. விசாரித்துப் பார்த்ததில் நோர்வூட் ஆஸ்பத்திரி அதே பழைய மாதிரித்தான் இருந்து வருகிறது. எந்நவொரு மலையகக் கட்சியும் எதுவும் தெரிவித்ததாகவும் இல்லை. மலையக மக்களுக்கு இந்தியா சில்லறை உதவிகளையும் 'வாய் சேவை'களையும் தான் செய்து வருகிறது என்பதற்கு நோர்வூட் ஆஸ்பத்திரி விவகாரமே போதும்!

நன்றி : எங்கள் தேசம்

*ஶ்ரீமா–சாஸ்திரி ஒப்பந்தம் இவ்வாறு மறுபரிசீலனையின் போது விமர்சனங்களுக்கு உள்ளாகும் அதேசமயம் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக ஒரு தொகை குடும்பங்களைத் திருப்பி அழைத்துக் கொண்டதோடு கடமை முடிந்துவிட்டதாக இந்தியா கருதுகிறதா? என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது.*



*மலையகமக்களின் பலத்தை அரசியல் ரீதியாக காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான சக்தியை இந்தியாவே குறைத்தது. மேலும் ஶ்ரீமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் போது இந்திய அரசு தொண்டமான போன்ற மலையகத் தலைவர்களை அழைத்து கலந்தாலோசித்திருக்க வேண்டும். டெல்லி அரசு எதேச்சதிகாரமாகவே நடந்து கொண்டதால் சிங்கள தேசியவாதிகளுக்கு அது உதவுவதாக அமைந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா மனித உரிமைச் சபைத் தோல்வி

## இலங்கைக்கா? இந்தியாவுக்கா?



செம்பாட்டான் பதில்கள்

> *ஐ. நா மனித உரிமைக் கவுன்சிலுக்கான தேர்தல் தோல்வி இலங்கை தொடர்பாக சர்வதேச அனுகுமுறையில் ஒரு பண்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையே வெளிக்காட்டியுள்ளது. இவ்வளவு காலமும் வெறும் அறிக்கைகளுடன் செயற்பட்ட சர்வதேசம் நடைமுறை அழுத்தம் என்ற அளவிற்கு முன்னேறி உள்ளது. இது ஒரு வகையில் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மணி எனவும் கூறலாம். எவ்வாறு இந்தியா யாழ்குடாநாட்டில் உணவுப் பொட்டலங்களை போட்டமை. அன்றைய ஜனாதிபதி து. சு. ஜெயவர்த்தனாவுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்ததோ அதேபோல மகிந்தருக்கும் இது ஒரு எச்சரிக்கை குறியீடு என்றே கூறவேண்டும்.*

**ஐ. நா மனித உரிமைக் கவுன்சிலிக்கான தேர்தலில் இலங்கையின் தோல்வி பற்றி?**

ஐ.நா மனித உரிமை கவுனசிலுக்கான தேர்தலில் எதிர் பார்த்ததைப் போலவே இலங்கை தோல்வி அடைந்துள்ளது.பல அமைச்சர்கள் அதிகாரிகள் நேரடியாக சென்று பிரசாரம் செய்தும் தோல்வியை தழுவி இருக்கின்றது. இதில் முக்கியமான அம்சம் இந்தியா மிக சிரமம் எடுத்து இலங்கைக்காக பிரசாரம் செய்தும் இலங்கை தோல்வியை தழுவியமையாகும். இந்த வகையில் இத்தோல்வி இலங்கையை விட இந்தியாவுக்கே மிக பெரும் தோல்வி என கூற வேண்டும்.

இத்தோல்விக்கு பிரதான காரணம் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், மனித உரிமை ஆர்வலர்களும், கடும் முயற்சி எடுத்து இலங்கைக்கு எதிராக மேற் கொண்ட பிரசார்மாகும்.

அமெரிக்காவை தலைமையகமாக கொண்ட மனித உரிமை கண்காணிப்பகம் இது விடயத்தில் அதிதீவிரத்துடன் செயற்பட்டுடிருந்தது. ஐ.நா சபை பொதுச் சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் நேரடியாக சந்தித்து பிரசாரம் செய்திருந்தது. அதன் பிரசாரத்திற்கு அமெரிக்க அரசின் ஆதரவும் பின்னனியில் இருந்தது என்று கூறவேண்டும். இதைவிட நோபல் பரிசு பெற்ற மூன்று முக்கிய அறிஞர்களின் பிரசாரமும் அத் தோல்வியில் பெரும் பங்காற்றியிருந்தது.

மறுபக்கத்தில் இலங்கையின் பிரசாரம் ஒருவகையில் மனித உரிமை விவகாரங்களை கிண்டலடிப்பதாகவும் இருந்தது. காணாமல் போனோர் தொடர்பாக ஐரோப்பிய பிரதிநிதி ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த சட்டமாக அதிபர் அவர்கள் மேற்கு நாடுகளில் தங்கள் பெண் நண்பர்களுடன் தம்பதிகளாக வாழ்கின்றனர் என்று கிண்டலடித்தார். இவ்வாறு கிண்டலடிக்கும் அளவிற்கு மனித உரிமை விவகாரம் ஒரு கீழான விடயமாக அவருக்கு தெரிந்தது. இக் கிண்டல் அவரது பதவிக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பது அவருக்கே வெளிச்சம்.இக்கிண்டல்களும் சர்வ தேச மனித உரிமை அமைப்புக்களை கோபப்படுத்தி இருக்கலாம்.

**ஐ. நா மனித உரிமைக் கவுன்சிலுக்கான தேர்தல் தோல்வி எதனை வெளிக் காட்டுகின்றது ?**

இலங்கை தொடர்பாக சர்வதேச அணுக்குமுறையில் ஒரு பண்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையே வெளிக் காட்டியுள்ளது. இவ்வளவு காலமும் வெறும் அறிக்கைகளுடன் செயற்பட்ட சர்வதேசம் நடைமுறை அழுத்தம் என்ற அளவிற்கு முன்னேறி உள்ளது. இது ஒரு வகையில் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மணி எனவும் கூறலாம்.

எவ்வாறு இந்தியா யாழ் குடாநாட்டில் உணவுப் பொட்டலங்களை போட்டமை. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்ததோ அதேபோல மகிந்தருக்கும் இது ஒரு எச்சரிக்கைக் குறியீடு என்றே கூறவேண்டும்.

ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இவ் எச்சரிக்கையின் விபரீதத்தை உணர்ந்து உடனடியாகவே இந்தியாவிற்கு பணிந்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு வந்தார். ஆனால் மகிந்தர் பணிவார் எனக் கூறமுடியாது பணிவதற்கான எந்த வித இட வெளிகளையும் அவர் விட்டு வைக்கவில்லை

இரண்டாவது முக்கிய விடயம் இந்தியாவின் விருப்பத்தினை மீறி மேற்குலகம் செயற பட்டமையாகும். இந்தவகையில் இந்தியாவுக்கும் எச்சரிக்கையா? என்ற கேள்வியும் எழுகின்றது இந்தியாவின் செல்வாக்கினால் தான் 101 வாக்குகள் இலங்கைக்கு கிடைத்தது

இல்லையேல் 10 வாக்குகளாவது இலங்கைக்கு கிடைப்பது கடினமாக இருந்திருக்கும்.

எனவே எதிர்காலத்தில் இந்தியாவை மீறி ஒரு நிகழ்ச்சி நிரலை தென்னாசியாவில் மேற் கொள்வதற்கு மேற்குலகம் தயாராகின்றதா? எனறும் சந்தேகம் எழுகின்றது.

அமெரிக்க-இந்திய அணு சக்தி ஒப்பந்தத்தின் தோல்வி ஈரான் ஜனாதிபதியின் இந்திய விஜயம் என்பன மேற்குலகை அதிர்ப்திக்கு உள்ளாக்கி இருந்தன. இந்தியாவின் தேசியவாதமும் பிராந்திய வல்லரசுத் தன்மையும் மேற்குலக அபிலாசைகளோடு பொருத்திவரக் கூடியவை அல்ல.

இலங்கை இனப்பிரச்சினையினால் எதிர் காலத்தில் சர்வதேச ரீதியில் இந்தியா தனிமைப்படும் அபாயமும் ஏற்படலாம்.

**மேற்குலகம் தொடர்ந்து என்ன செய்ய போகின்றது?**

ஜனாதிபதி மகிந்தரின் செயற்பாட்டுடன் சார்புநிலை உடையது. மேற்குலக எச்சரிக்கையை மகிந்தர் கவனத்தில் கொள்ளாவிடின் தொடர்ந்தும் அழுத்தங்கள் வரலாம். இவ் அழுத்தங்கள் எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்கு மென் அழுத்தங்களாக இருக்குமே தவிர வன்மையான அழுத்தங்களாக இருக்கும் எனக் கூறமுடியாது. ஆசியாவில் அணிமாற்றம் தெளிவாக தெரியத் தொடங்கிய பின்னரே வன்மையான அழுத்தங்கள் வரப்பாக்கலாம். அதாவது சீனா பக்கம் இலங்கை முழுமையான நிலைப்பாட்டினை எடுக்கும் போதே வன்மையான அழுத்தங்கள் வரலாம். அது வரை தொடர்ந்து மென்மையான அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

ஏற்கனவே காணாமல் போனோருக்கான சர்வதேச குழு சர்வதேச நீதிமன்றத்தில் வலிமையான சாட்சியங்களுடன் வழக்கொன்றினை தொடுத்துள்ளது. ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு எதிராக கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு தயாராகி வருகின்றது. இவ்வாறு ஒவ்வொன்றாக அழுத்தங்கள் அதிகரித்துச் செல்லலாம்.

ஆடை கோட்டாவிக்கான G.S.P பிளஸ் சலுகையினை மேற்குலகம் நிறுத்துமா? என கூறுவது கடினம். அது ஒரு வன்மையான அழுத்தமாக இருப்பதனால் தற்போது அதைக் கொண்டு வர பின் நிற்கலாம். அழுத்தங்களை கொண்டு வருவதற்கு ஐரேப்பிய யூனியன் தயாராக இருந்தாலும் அமெரிக்கா விட்டுப்பிடிக்கவே விரும்புகின்றது.

தான் சார்ந்த முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்கருதி அத்தடை வரக்கூடாது என்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு பயணமாகியிருந்தார். இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் விருப்பத்தினை மீறி ஐரோப்பிய யூனியன் நடந்துகொள்வது மிக கடினம். ரணிலின் கோரிக்கைக்காக விட்டுக்கொடுத்தோம் என அவர்கள் கூறமுனையலாம்

இவ் ஆடைக் கோட்டா விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை தமக்கு விண்ணப்பிக்கவில்லை என்றே ஐரோப்பிய யூனியன் கூறியிருக்கின்றது. அவசரப்பட்டு விண்ணப்பித்தால் ஐரோப்பிய யூனியன் பல நிபந்தனைகளை விதிக்கப் பார்க்கலாம் என இலங்கை கருதுவது போல தெரிகின்றது. நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் இச்சலுகை தரப்படவேண்டும் என்றே இலங்கை எதிர்பார்க்கின்றது. வன்மையான அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க விரும்பாததால் நிபந்தனைகள் இல்லாமல் அச் சலுகைகள் தமக்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே இலங்கைக்கு உள்ளது.

**இலங்கைக்கு வன்மையான அழுத்தங்களை கொடுக்க அமெரிக்கா ஏன் விரும்பவில்லை?**

பிரதானமாக மூன்று காரணங்களுக்காக வன்மையான அழுத்தங்களை கொடுக்க அமெரிக்கா விரும்பவில்லை.

முதலாவது காரணம் சீனா பக்கம் இலங்கை முழுமையாக சார்ந்துவிடுமோ என்ற அச்சமாகும். எப்படியாவது தன் அணிக்குள்ளேயே இலங்கையை வைத்திருக்க அமெரிக்கா விரும்புகின்றது. பர்மா, சீனாவின் ஆதிக்கத்திற்குள் சென்றது போல இலங்கை செல்வதை அமெரிக்கா அறவே விரும்பவில்லை. ஏற்கனவே சீனா துறைமுக அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாந்தோட்டையில் காலடி வைத்தது அமெரிக்காவுக்கு அச்சமாக உள்ளது. இவ் போக்கினை தொடர்ந்தும் வளரவிடாமல் தடுக்க அது விரும்புகின்றது.

இரண்டாவது புலிகள் மேல் நிலைக்கு வருவதை அமெரிக்கா விரும்பாமையாகும். புலிகளின் மேல் எழும்புகை தமிழீழம் என்ற இலக்கிற்கே இட்டுச் செல்லும் என்பது அமெரிக்காவிற்கு நன்றாகவே தெரியும். தமிழீழம் அமைவதை அமெரிக்கா விரும்பவில்லை அவ்வாறு அமையுமானால் இலங்கைத்தீவின் மறுதுண்டு சீனாவின் பக்கம் முழுமையாக சாய்ந்துவிடும் என்ற அச்சம் அமெரிக்காவிற்கு இருக்கின்றது.

அதேவேளை புலிகள் மீது வன்மையான நிலையினை எடுத்து தமிழ்மக்களின் கோபத்தினை சம்பாதிக்கவும் அமெரிக்கா விரும்பவில்லை. புலிகள் கொள்கை ரீதியாக அமெரிக்காவிற்கு எதிரானவர்கள் அல்லர் என்ற கருத்தே அமெரிக்காவிற்கு உள்ளது. புலிகள் அமெரிக்காவிற்கு எதிராக அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ எந்த செயற்பாட்டிலும் இதுவரை ஈடுபடவில்லை. சில சந்தர்ப்பத்தில் அமெரிக்காவில் செயற்படும் புலி உறுப்பினர்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் கடுமையான நிலையினை எடுத்தபோதும் புலிகள் மௌனமே காத்தனர்.

இதைவிட உலகம் வாழ் தமிழ்மக்களும் அமெரிக்க சமூகத்திற்கு எதிராக இல்லை இந்நிலையில் உலகில் பரந்தளவு வாழும் தமிழ்ச் சமூகத்தை ஏன் பகைப்பான் என்ற கருத்தும் அமெரிக்காவிற்கு உண்டு. இலங்கையின் இனப்பிரச்சனை உலகத் தமிழ் மக்களின் தன்மான விவகாரமாக இருப்பது அமெரிக்காவிற்கு நன்றாகவே தெரியும்.

புலிகள் மேலெழும்புவதை விரும்பாததற்கு இன்னோர் காரணம் உலகில் உள்ள ஏனைய கிளர்ச்சி குழுக்களுக்கு புலிகள் முன் மாதிரியாக விளங்கிவிடுவர் என்ற அச்சமாகும். ஏற்கனவே புலிகள் முன் மாதிரியாகத்தான் இருக்கின்றனர். எந்தவொரு நாட்டிலும் தங்கியிராமை, விலைபோகாத தன்மை, ஒரு தலைவருக்கு கீழ்பட்ட வலிமையான அணியா இருத்தல், வலிமையான தளப்பிரதேசங்களை கொண்டிருத்தல், தலைவர் தளப்பிரதேசத்தில் நின்று அணியினருக்கு வழிகாட்டுதல், முப்படைகளையும் கொண்டிருத்தல்,வலிமையான உளவுப்பிரிவு என்பன அவர்களை ஒரு முன் மாதிரியாக உலகில் நிலை நிறுத்தி இருக்கின்றது.

புலிகள் உண்மையில் ஓர் கிளர்ச்சிக்குழு அல்ல மாறாக அவர்கள் ஒரு அரசு. ஒரு அரசு இன்னோரு அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக போரிடுகின்றது என்பதே உண்மை நிலையாகும். இதை விளங்கிக் கொள்ளாமல் ஒரு கிளர்ச்சிக் குழு என்ற வகையில் அவர்களுடன் போரிட்டதால் தான் இலங்கையும, இந்தியாவும் தோல்விகளைத் தழுவிக் கொண்டனர்.

அமெரிக்காவிற்கு இந்த உண்மை கொஞ்சம் கொஞ்சமாக விளங்கத் தொடங்கியதனால் தான் புலிகள் மீதான கடினத்தன்மையை குறைத்திருக்கின்றது. அது தற்போது தனக்கு பிரச்சினை இல்லாத ஆனால் தனது செல்வாக்கிற்கு கீழ் வராத ஒரு அரசு என்ற வகையிலேயே புலிகளை பார்க்கத் தொடங்யிருக்கின்றது. ஆனால் அமெரிக்காவிற்கு உள்ள அச்சம் புலிகள் போல வேறு கிளர்ச்சி குழுக்களும் இந்நிலைக்கு வளர்ந்து விடுவார்கள் என்பதே ஆகும்.

புலிகளை பொறுத்தவரை சர்வதேச ரீதியான கொள்கை சச்சரவுக்குள் அவர்கள் மாட்டுப்படுவதில்லை. தமிழ்த் தேசியத்தை தவிர வேறு எந்த கொள்கைகளுக்குள்ளும் தம்மை அவர்கள் புகுத்துவதும் இல்லை. தமிழ்த் தேசிய அபிலாசைகளை வெற்றி கொள்வதில் கூட தங்களில் மட்டுமே அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். வேறு சக்திகளில் நம்பிக்கை வைப்பதில்லை. இவ்வாறான நிலைக்கு ஏனைய அமைப்பு வளரக் கூடாது என்ற கவலை அமெரிக்காவுக்கு உண்டு.

மூன்றாவது காரணம் இந்தியாவின் நலன்களுக்கு மாறாக செயற்படக் கூடாது என்பதாகும். இந்தியா பெரிய நாடாக இருப்பதால் இந்தியாவுடன் நெருங்கிய உறவில்லாத காலங்களில் கூட இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாக அமெரிக்கா செயற்பட விரும்பியதில்லை. இந்தியாவில் உள்ள அமெரிக்க வர்த்தக நலன்களே இதற்கு பிரதான காரணங்களாகும். எனினும் இந்திய- அமெரிக்க உறவுகள் குறைந்து சீனாவின் ஆதிக்கம் வளர்கின்ற போது அமெரிக்காவால் தொடர்ந்தும் பழைய நிலையினை பிற்பற்ற முடியாது.

எனவே இலங்கை இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை இலங்கை என்ற ஒரு நாட்டுக்குள்ளேயே அதிகாரப் பங்கீட்டின் மூலம் பிரச்சனையை தீர்க்க அமெரிக்கா விரும்புகின்றது.

**ஜனாதிபதி மகிந்தர் என்ன செய்யப் போகிறார்?**

ஜனாதிபதி மகிந்தருக்கு இந்த விடயத்தில் மூன்று பிரச்சனைகள் இருக்கின்றன.

முதலாவது அவர் பேரினவாதிகளின் கைதியாக இருப்பதாகும். அவரை ஆட்சியில் இருத் தியவர்கள் பேரினவாதிகள் என்பதால் அவர்களின் அபிலாசைகளை மீறி அவரால் நடந்து கொள்ள முடியாது. இதற்கு அப்பால் அவரும் ஒரு பேரினவாதியாக இருப்பதனால் உள் மன ரீதியாகவும் அதனை விட்டு வர அவரால் முடியாது. அவருக்கு இந்தவிடயத்தில் பேரினவாதம் என்ற ஒரே நேர்கோட்டில் மட்டும்தான் பயணிக்க முடியும் இதுவரை ஆட்சியில் இருந்த தலைவர்களில் அரசின் வளங்கள் அனைத்தையும் பேரினவாதத்தினை நோக்கி திரும்பிய முதல் தலைவரும் மகிந்தர்தான்.

தொடர்ச்சி 19 பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பேரினவாதம்! பயங்கரவாதத்தின் தாய்

வ.திருநாவுக்கரசு

ஐ நா மனிதவுரிமைகள் சபைக்கு இலங்கை தெரிவு செய்யப்படாமல் தழுவிக் கொண்ட தோல்வியானது ஒருவகையில் முழுநாட்டு மக்களுக்கும் • ஏற்பட்டுள்ள அபகீர்த்தியாகும். இவ்வாறானதொரு நிலைமை உருவாகும் என்பது முற்றிலும் எதிர்பார்க்கப்பட்டதொன்றல்ல. கடந்த 20 வருடங்களாக நாட்டில் கட்ட வீழ்த்து விடப்பட்டு வந்த பாரிய மனிதவுரிமை மீறல் சம்பவங்களும் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த பல்வேறு ஒருதலைப்பட்சமான அணுகு முறைகளும் தான் அதற்கு வித்திட்டது என்பதை மறுக்க முடியாது. அரசாங்கம் சந்தித் துள்ள தோல்வியைத் தவிர்ப் பதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, இடர்முகாமைத்துவ மற்றும் மனிதவுரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் வெளி நாட்டமைச்சர் ரோகித போகொல்லாகமவும் ஜெனிவா, நியூயோர்க், லண்டன், எங்கும் ஆலாய்ப்பறந்து கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

உல்லாசப் பயணத் துறை அமைச்சர் மிலிந்த மொறகொட, சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் போன்றோரும் அதிக பிரயத்தனம் செய்திருந்தின ராயினும் எதுவும் எடுபட வில்லை. குறிப்பாக, மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது விமர்சனம் செய்தோ குற்றம் சுமத்தியோ வந்துள்ள உட்நாட்டு மற்றும் சர்வதேச சமூகத்தினர் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானவர்களென அரச தரப்பினர் சாடியும் வசைபாடியும் வந்துள்ளமை தெரிந்ததே. ஆனால் சர்வதேச தரப்பினரிட மிருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், பாரிய குற்றச் சாட்டுகள் கொண்டுவரப்பட் டுள்ளதை மறுக்கமுடியாது. உதாரணமாக ஹியூமன் றைற்ஸ் வாச்"எனப்படும் மனிதவுரிமை கள் அமைப்பு சிறார்களைப் படையணிகளில் சேர்த்துக் கொள்ளும் விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் அடங்கலாக பல்வேறு அமைப்புகள் மீது குற்றம் சுமத்தியதோடு, ஐ.நா பாதுகாப்புச் சபை தனது அதிகாரத்தினைப் பாவித்து அவ்வமைப்புகள் மீது கடுமை யான தண்டனை வழங்க வேண்டுமென சிறார்களின் உரிமைகள் கண்காணிப் பாளராகிய ஜோபெக்கர் அம்மையார் 2006 நவம்பரில் சிபார்சு செய்திருந்ததை குறிப்பிடலாம்.

2006 நவம்பர் 8 முதல் 14 வரை ஐ.நா தூதுவர் அலன் ஐ.நா செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக 'ஆயுதப் போரட்டங்களில் சிறார்கள்' எனும் விடயத்தினை ஆராய் வதற்கு இலங்கைக்கு வருகை தந்திருந்தார். சிறார்களை படையணிகளுக்கு சேர்ப்பது நிறுத்தப்படும் எனவும், ஏற்கனவே சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்கள் விடுவிக்கப்படுவர் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அளித்திருந்த வாக் குறுதி நிறைவேற்றப்பட வில்லை யென றொக் அறி வித்தார். அத்தோடு, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணாகுழு எனறு அழைக்கப்பட்ட தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப்



ஐ. நா மனிதவுரிமைகள் சபைக்கு இலங்கை தெரிவு செய்யப்படாமல்தழுவிக்கொண்ட தோல்வியானது தேடிச் சென்று பெற்றுக் கொண்ட தொன்றாகவே காணப்படுகின்றது. சிங்கள – பௌத்த பேரினவாதம் இலங்கைக்குள் மட்டுமல்லாமல் சர்வதேச அரங்குகளிலும் ஆட்டிப் படைக்குமென கடும்போக்காகக் கனவுகண்டு கொண்டிருக்கின்றார்கள் போலும். அது எவ்வளவும் வேடிக்கையானது என்பதை உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வதற்கு இன்று இலங்கை அடைந்துள்ள தோல்வியை ஏழு படிப் பினையாகக் சிரமேற் கொள்வது அவசியமாகின்றது.

பகுதியில் சிறார்களைக் கடத்தி படையணியில் சேர்க்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித் திருந்தார். இதற்கு அரச படையினரின் ஆதரவு இருப்பதாகவும் அறிய முடிந்ததெனவும் றொக் அறி வித்தார். அதாவது இலங்கை யிலிருந்து திரும்ப முன்னதாக நடத்திய ஊடக மாநாட்டில் றொக் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பையும் மட்டுமல்லாது இலங்கை அரசாங்கத்தையுமே குற்றவாளிக்கூண்டில் நிறுத் தினார். குறிப்பாக, அரசாங்கத் தின் மீது குற்றம் சுமத்தப்பட்டதையடுத்து ஆத்திர மடைந்த கடும் போக்காளர் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் றொக்கை திட்டித் தீர்த்ததோடு அவரின் கொடும் பாவி ஒன்றை எரித்துவிடும் கைங்காரியத்திலும் ஈடுபட்டனர்.

அலன் றொக் கின் விஜயத்தின் பின்னர் சேர். ஜோன் ஹோம்ஸ், மன்பிறெட் நொவக் போன்ற உயர் ஐ.நா உயர் அதிகாரிகளும் இலங் கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாகவும் குறிப்பாக சித்திரவதைகள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், கடத்தல்கள் போன்ற நிகழ்வுகள் சம்பந்தமாகவும் அவர்கள் விடுத்த அறிக்கைகளும் அரச உயர் மட்டத்தினரின் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாக் கப்பட்டதுடன், அப்பிரமுகர்களும் கண் மூடித்தனமாக அவதுாறு செய்யப் பட்டனர். அதன் பின்னரே ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் இலங்கை விஜயம் மேற் கொள்ளப் பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜெனிவா சென்றிருந்த போது ஆர்பர் அம்மையாரை நேரடியாகச் சந்தித்து விடுத்த அழைப்பின் பேரியேயே ஆர்பர் வருகை தந்திருந்தார்.

அவரும் இலங்கை மனிதவுரிமை நிலைமைகளை சற்று விரிவாக ஆராய்ந்த தோடு பாதிக்கப்பட்ட மக்கள் சிலரைச் சந்திப்பதிலும் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக சிறைக் கைதிகளை சந்தித்து ஆறுதல் கூறினார். அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது பாதிக்கப்பட்டவர்கள் ஒரு அறையில் அடைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் அவர் களோடு அளவளாவும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. பின்னர் அமைச்சர் மகிந்த சமரசிங் கவுடன் கூடி நடாத்திய ஊடக மாநாட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மனிதவுரிமை பாதுகாப்பு முறைமைகள் போது மானவை யல்ல என சற்று அடக்கமாக தனது அதிருப்தியை வெளிப் படுத்தினார். அத்தோடு, ஐ.நா மனிதவுரிமைகள் சபையின் கீழான கண்காணிப்பு வதிவிட நிலையம் ஒன்றினை அமைப்ப தற்குமான தனது அரசியல் சிபார்சினை முன்வைத் திருந்தார். அதனை அமைச்சர் சமரசிங்க உடனடியாகவே நிராகரித்து விட்டார். அது இலங்கையின் இறைமைக்கு குந்தகமானதென காரணம் கற்பித்தே துாக்கி வீசப்பட்டது. அதற்கான அழுத்தங்கள் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தபோதும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல ஆகின.

எனவே ஒட்டுமொத்த மாக நோக்குமிடத்து இலங் கைக்குக் கிடைத்த தோல்வி யானது, தோல்வியைத் தேடிச் சென்று பெற்றுக் கொண்ட தொன்றாகவே காணப் படுகின்றது. சிங்கள – பௌத்த பேரினவாதம் இலங்கைக்குள் மட்டுமல்லாமல் சர்வதேச அரங்குகளிலும் ஆட்டிப் படைக்குமென கடும்போக்காகக் கனவுகண்டு கொண்டிருக் கின்றார்கள் போலும். அது எவ்வளவும் வாடிக்கையானது என்பதை உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வதற்கு இன்று இலங்கை அடைந்துள்ள . தோல்வியை ஏழு படிப் பினையாகக் சிரமேற் கொள்வது அவசியமாகின்றது. இலங்கையின் அங்கத்துவத்திற்காக கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்மென சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்களாகிய முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஜிம்மி காட்டர், தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மன் டுட்டு மற்றும் ஆர்ஜென்டீனா பிரமுகர் அடொல் ஃபோ பெராஸ் எஸ்குவெல் ஆகிய மூவரோ பிரேரணைக்கு எதிராக வாக்களித்த 97 நாடுகளோ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்களென யாரும் கூற முடியுமா?

இலங்கைக்கு மனித உரிமைகள் சபையில் ஆசனம் கிடைக்கத் தவறியதையிட்டு ஆசிய மனிதவுரிமைகள் ஆணைக்குழு விடுத்த அறிக்கையிலிருந்து, 'பல்வேறு காரணங்கள் கற்பித்து எந்தவொரு நாடாயினும் உலகிலிருந்து விலகி நிற்கத் தலைப்பட்டால் அது அந்நியப் பட்டு கசப்பான அனுபவங் களைச் சந்திக்கும் நிலைமை உருவாகும் என்பதற்கு மியன்மார் ஒரு உதாரணமாகும். மியன்மார் அவ்வாறு அந்நியப பட்டிருப்பதால் நர்கிஸ் சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களின் அவலங்களின் தாக்கங்கள் பன்மடங்கு பரிதாபமான வையாகியுள்ளன. விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை ஆதாரமாகக் கொண்டு அரசு அதே மாதிரி யான அல்லது அவற்றைக் காட்டிலும் மோசமான எதிர்த் தாக்குதல்களை நடாத்து வதற்குப் புறப்பட்டால் நாட்டின் எல்லா மக்களும் ப்டுதுன்பங் களை அனுபவிக்க நேரிடும். நாடு என்னும்போது பொது நிறுவனங்களையும் அவை நம்பகத்தன்மையாகப் பணியாற்றுதலின் அவசியம் ஆகிய அம்சங்களையும் கொண்டதாகும். முக்கள் அவ்வாறான நிறுவனங்களின் அடி அத்திபாரங்கள் மீது நம்பிக்கை இழப்பதைவிட மோசமான சீரழிவு இருக்க முடியாது 'அரச நிறுவனங்களை முறையாகச் செயற்படுத்தி எல்லா நிலைமைகளிலும் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டிய பொறுப்பினை எந்தவொரு அரசாங்கமும் காற்றில் பறக்கவிட்டு விடு மாயின், அதனால் ஏற்படக் கூடிய அளவு தீமை எந்தவொரு பயங்கரவாத அமைப்பினால 'கூடச் செய்ய முடியாது'. இது நிச்சயமாக புறந்தள்ளி விடக் கூடியதொரு அபிப்பிராயமல்ல. இலங்கை யைப் பொறுத்தவரை சிங்களப் பேரினவாதம் தான் பயங்கரவாதத்தின் தாய். அது தான் இன்று நாட்டுக்கு சர்வதேச அரங்கிலேயே. அவதுாறுத் தேடித்தந்துள்ளது. என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்வது, நாட்டின் எதிர்கால முன்னேற்றத் திற்க்கான முதற்படியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன மக்களின் வாழ்வு பறிக்கப்பட்டு 60 வருடங்கள்

**யூதர் அல்லாத மக்களை இஸ்ரேலிய பகுதிகளில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்ற யூதப்பேரினவாதத்தின் வெறிகொண்ட கொள்கையின் வெளிப்பாடாக பாலஸ்தீன மக்களை அவர்களின் தாயகத்திலிருந்து யூதப்பேரினவாதம் 1948ல் வெளியேற்றியது.**

என்.ஜனகன்

இஸ்ரேல் உருவாகி 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இவ்வாண்டு அத் தேசமெங்கும் 60வது ஆண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்படுகின்றது. மறுபக்கத்தில் பாலஸ்தீன மக்களை பொறுத்தவரை தமது தாயகத்தில் இருந்து விரட்டப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அவர்களும் தமது வாழ்நிலையில் மறக்கமுடியாத அந்த சோக நிகழ்வை நினைவு கூருகின்றனர்.

இஸ்ரேலிலிருந்து விரட்டப்பட்டு 30 வருடங்களின் பின்னர் அத்தேசத்திற்குள் செல்வதற்கு ரஸ்பியா பகோட்டி என்ற பாலஸ்தீனப் பெண்மணிக்கு இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் அனுமதியளித்திருந்தனர். தனது மகள்மார் இருவர், பேரப்பிள்ளைகள் இருவர் ஆகியோர்களுடன் இஸ்ரேலுக்குள் சென்றார் அவர். மூன்று மணிநேரப் பயணத்தின் பின்னர் 1948ல் சபாட் என்ற பெயருடன் இருந்த பாலஸ்தீன மக்களின் பிரதேசம் இஸ்ரேலிய ஆக்கிரப்பின் பின்னர் ரன்வாட் என மாற்றப்பட்டிருந்தது. தான் வாழ்ந்த அந்த வெள்ளைநிற கற்களாலான தனது வீடு, அந்த வீட்டின் உலோகத்தினாலான கதவுகள் எப்படி இப்பொழுது இருக்கும் என்ற நினைவுகளோடு தான் வாழ்ந்த வீட்டின் முன்னே தனது வாகனத்தை நிறுத்தினார். ரஸ்மியா பகோட்டி வாகனத்தில் இருந்து இறங்கி தனது வீட்டை நோக்கி சென்று, வீட்டின் கதவைத் தட்டினார். ரஸ்மியா கதவை திறந்துகொண்டு பருத்த தோற்றத்தையுடைய ஒரு பெண்மணி வெளியே வந்தார்.

இருவருக்குமிடையே விவாதம் ஆரம்பமாகியது. சொற்பவேளையில் ரஸ்மியா இருண்ட முகத்துடன் கண்களிலிருந்து நீர் வழிய தனது வாகனத்தை நோக்கி வந்தார். அவள் என்னை உள்ளே போக அனுமதிக்கவில்லை. இன்னும் அவளது கதவு திரைசேலை நானும் எனது அம்மாவும் சேர்ந்து உருவாக்கிய அதே திரைச்சேலைதான் பாவிக்கப்படுகின்றது என அழுதபடியவாறே கூறினார்.

அவர்கள் தமது மதிய உணவுக்காக ஹொட்டல் ஒன்றிக்கு சென்று கொண்டிருந்தனர். மௌனம் அவ்வேளையில் அங்கு குடி கொண்டிருந்தது. ரஸ்மியா மட்டும் அழுது கொண்டிருந்தார். ஹொட்டலுக்கு சென்று அமர்ந்து கொண்டு ஹொட்டல் உதவியின் வருகையை எதிர்ந்திருந்தனர். அதேவேளையில் பேரப்பிள்ளைகள் சற்று குழப்படி செய்யத் தொடங்கினர். வழமையாக இராணுவ முறையான ஒழுக்கத்தை வலியுறுத்தும் ரஸ்மியா அன்று தனது பேரப்பிள்ளைகளை மேலும் குழப்படி செய்யுமாறு சுதந்திரம் கொடுத்தார். இது அவர்களின் குடும்பத்தினருக்கு ஆச்சிரியத்தைக் கொடுத்தது. அந்த நேரம் அந்த ஹொட்டலின் உதவியாளர் ஒருவர் வேகமாக வந்து ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள் என்று கடுமையான தொனியில் யூதமொழியான கிபுறு மொழியில் கூறினார். இதனால் மிகவும் ஆத்திரமுற்ற ரஸ்மியா நாங்கள் இங்கே எதை வேண்டுமானாலும் செய்யமுடியும் என அரபு மொழியில் உரத்தகுரலில் கூறியதுடன் இது எனது தந்தையாரின் ஹொட்டல் எனவும் மறுமொழி பகிர்ந்தார். அது வரை அவர்களின் பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்கு ரஸ்மியாவின் இழப்புகள் பற்றிய எதுவும் தெரியாமலே இருந்தது.



என்று இஸ்ரேல் தான் செய்து வரும் அநியாயங்கள், அடக்குமுறைகளை திருத்திக் கொள்கின்றதோ, என்று இஸ்ரேல் சர்வதேச சட்டங்களையும் மனித நாகரீக விழுமியங்களையும் ஏற்றுக் கொள்கின்றதோ, என்று இஸ்ரேல் தனது நாட்டுமக்கள் மீதான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை நிறுத்துகின்றதோ, என்று இஸ்ரேல் பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்கின்றதோ அன்று தான் நாம் எல்லோரும் இஸ்ரேலின் விழாவை ஏற்றுக்கொள்ளமுடியும்.

**இனச்சுத்திகரிப்பு:**

கடுங்கோபத்தில் காணப்பட்ட இந்த பாலஸ்தீனத் தாய்க்கு, தான் வாழ்ந்த இல்லத்தை பார்க்கமுடியாத நிலை. 1948ன் பின்னர் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட நிலையில் இன்று அவரது இல்லத்தில் அன்னியர்கள் வாழுகின்றனர். அங்கே வாழ்பவர்கள் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. தனது தந்தையாருக்குச் சொந்தமான ஹொட்டலையும் ரஸ்மியா பார்த்தார். அந்த ஹொட்டலை வேறு இடத்திற்கு மாற்ற இஸ்ரேலிய அதிகரிகள் அனுமதிக்கவில்லை. இறுதியில் ஹொட்டல் பலாத்காரமாக இஸ்ரேலியர்களால் பொறுப்பேற்கப்பட்டது. 1948ல் ரஸ்மியா பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதன் பின்னர் தற்போது தனது தாயகத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்களுக்கு இன்றும் தமது தாயகத்திற்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றது. ரஸ்மியாவுக்கு அதிஸ்டம் இருந்ததால் உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால் மீண்டும் இஸ்ரேலில் வாழுவதற்கு அல்ல. இஸ்ரேலைப் பார்ப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டார்.

யூதர் அல்லாத் மக்களை இஸ்ரேலிய பகுதிகளில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்ற யூதப்பேரினவாதத்தின் வெறிகொண்ட கொள்கையின் வெளிப்பாடாக பாலஸ்தீன மக்களை அவர்களின் தாயகத்திலிருந்து யூதப்பேரினவாதம் 1948ல் வெளியேற்றியது.

பாலஸ்தீனத்தில் இனச்சுத்திகரிப்பு என்ற நூலை எழுதிய இயன் பாப்பே என்ற வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு எழுதியிருந்தார். ' 1948 மார்ச் 10ந்திகதி முக்கியமான யூதப்பேரினவாத் தலைவர்கள் ஒன்றிணைந்து இளம் இராணுவ அதிகாரிகளை இணைத்துக்கொண்டு பாலஸ்தீனர்களை வெளியேற்றும் அந்த இறுதிக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். பாப்பே மேலும் விபரிக்கையில் யூதத் தீவிரவாதிகள் அதாவது இஸ்ரேலின் எதிர்கால இராணுவவீரர்கள் பாலஸ்தீன மக்களின் வாழ்விடங்களுக்குள் சென்று அப்பகுதியை முற்றுகையிட்டு, பயமுறுத்தி வீடுகளுக்கு தீ வைத்து, அப்பகுதிகளில் நிலக் கண்ணிவெடிகளைப் புதைத்து பாலஸ்தீன மக்களின் 500 கிராமங்களை அழித்ததுடன் இந்த கொடுர நடவடிக்கையின் போது யூதத்தீவிரவாதிகள் இம்மக்களின் மீது தமக்குத் தெரிந்த அத்தனை கொடுமைகளையும் புரிந்தனர். இத்தகைய படுபாதக செயல்பாடுகளால் 800 ஆயிரம் மக்கள் தமது வாழ்விடத்தை இழந்து காசா, மேற்கு கரை ஜோடான், சீரியா, லெபனான், எகிப்து என உலகின் பல பகுதிகளுக்கும் அகதிகளாக விரட்டப்பட்டனர். ரஸ்மியா குடும்பம் இந்த அகதி அலைகளில் ஒன்றாகும்.

இத்தகைய பேரழிவு நடவடிக்கைளை நடாத்தி, இஸ்ரேலை உருவாக்கியவர் என்று பேசப்படும் டேவிட் பென் கொரியன் என்பவர் 1938ல் யூத முகவர் அமைப்புக்களுக்கு இதுபற்றி விளக்கியிருந்ததாக அறியமுடிகின்றது. ஏனவே பாலஸ்தீன மக்கள் ஐரோப்பியரால் துயரத்திற்குள்ளான யூதமக்களினால் துயரத்திற்குள்ளானார்கள். 10 வருடங்களுக்கு முன்னர் மறைந்த எட்வேட் என்பவர் பின்வருமாறு கூறியிருந்தார். 'இஸ்ரேல் 50 வது ஆண்டு விழாவை கொண்டாடு வதையிட்டு, நான் ஆச்சரியப் படுகின்றேன். எந்த அதிகரிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பறித்தார்களோ 50 வருடங்கள் கழிந்தநிலையிலும் பாலஸ்தீன மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீள வழங்கவோ, அடையாளப்படுத்தவோ, ஏற்றுக்கொள்ளவோ சிறிதும் மனமாற்றம் அற்றநிலையிலேயே உள்ளனர். பாலஸ்தீனத் துயரம் என்ற கருத்தை பொய்யானதென்றே இஸ்ரேல் வாதிட்டது. 60 வருடங்கள் கழிந்த நிலையிலும் அன்று கூறியதையே இன்றும் கூறிவருகின்றது. பாலஸ்தீன மக்களின் துயரத்தை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், யூதர்கள் மீது ஐரோப்பியர்கள் புரிந்த கொடுமைகளையும் சரியென்றே வாதிடமுடியும்.' பாலஸ்தீன மக்களின் துயரத்தைப் பற்றி முன்னைநாள் சனாதிபதி ஜிம்மி காட்டர் குறிப்பிடுகையில், இஸ்ரேல் பாலஸ்தீன மக்களை முடிவுறாத, உணர்ச்சியற்ற, நம்பிக்கையற்ற வன்முறைகளில் சிக்கவைக்க முயல்கின்றது எனக்குறிப்பிட்டிருந்தார்.

இன்று வரை இஸ்ரேலிய அரசாங்கம் லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்களை அவர்களது தாயகப்பூமியில் அனுமதிக்க வேண்டுமென்ற ஐக்கிய நாடுகளின் சபையின் தீர்மானம் இருக்கின்ற நிலையிலும்கூட, அங்கே அனுமதிக்கவில்லை. காரணம் அவர்கள் யூதர்களாக இல்லாதபடியால்தான். இஸ்ரேல் 41 வருடங்களாக மேற்குகரை, கிழக்கு ஜெருசலேம், கோலான்குன்று போன்ற பகுதிகளை ஆக்கிரமித்து வருகின்றது. மேலும் இஸ்ரேல் காசா பள்ளத்தாக்கு பகுதியில் மிருகத்தனமான தடை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இஸ்ரேலிய அரசாங்கம் பாலஸ்தீன மக்கள் வாழும் பகுதிகளில் தடுப்புச்சுவர்களை அமைத்து வருகின்றது. அதேநேரம் இன்றும்கூட யூதர் அல்லாத தனது பிரசைகளை இரண்டாந்தர பிரசைகளாகவே நடத்துகின்றது. மனசாட்சி உள்ள எந்த மனிதனும் இஸ்ரேலின் 60வது வருட நிறைவு விழாவை ஏற்றுக்கொள்ளமாட்டான். என்று இஸ்ரேல் தான் செய்து வரும் அநியாயங்கள், அடக்குமுறைகளை திருத்திக் கொள்கின்றதோ, என்று இஸ்ரேல் சர்வதேச சட்டங்களையும் மனித நாகரீக விழுமியங்களையும் ஏற்றுக் கொள்கின்றதோ, என்று இஸ்ரேல் தனது நாட்டுமக்கள் மீதான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை நிறுத்துகின்றதோ, என்று இஸ்ரேல் பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்கின்றதோ அன்று தான் நாம் எல்லோரும் இஸ்ரேலின் விழாவை ஏற்றுக்கொள்ளமுடியும். அத்தகைய விழாவில் ரஸ்மியாவின் உறவினர்களும் கலந்துகொள்ளலாம்

(ரஸ்மியா பகோட்டி பாலஸ்தீன அமெரிக்கராவார். இவர் அமெரிக்க அரேபிய புறக்கணிப்புக்கெதிரான குழுவின் தலைவராவார். இவரின் தாயார் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த போது அங்குள்ள பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்துள்ளார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளம் ! அடக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வழிகாட்டி !

பகலோன்

நேபாள அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் பொது மக்கள் வழங்கிய பேராதரவுடன் குடியரசுக்கான முழக்கம் சகல திசைகளிலும் முழங்கியவாறு உள்ளது. உலகின் அதி உயர்ந்த மலைச் சிகரமான இமயமலையின் பிராந்தியத்தில் சிகப்பு நட்சத்திரக் கொடி பறக்கத் தொடங்கியுள்ளது. நேபாள கம்யுனிஸ்ட் கட்சி (மாவோ பிரிவு) அரசியல் வாழ்வில் பொது நீரோட்டத்திற்கு வருமா? அல்லது மீண்டும் காட்டுக்குள் தமது கரந்தடி நடவடிக்கைகளுக்காக சென்றுவிடுமா? என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஆழப்பதிந்து இருந்தது. ஆனாலும் மக்கள் அளித்த பேராதரவின் மூலம் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை மக்கள் அரசியல் நீரோட்டத்திற்குள் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

நேபாளத்தில் நேபாள காங்கிரசை முதன்மைப்படுத்துவதில் வலதுசாரி ஊடகங்கள், இந்திய ஊடகங்கள், உலக வலதுசாரி பிரிவுகளின் ஊடகங்கள் பகீரத பிரயத்தனப்பட்டு செயல்பட்டன. இவற்றின் வெளியீடுகளில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாம் நிலையில் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முனைந்தன. ஆனால் நேபாள தலைநகரம் காத்மண்டு பகுதியில், மக்கள் நேபாளம் குடியரசாக இடதுசாரிகளின் தலைமையில் மாற்றப்பட வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். காத்மண்டு மக்களின் உணர்வலைகள் அதையே பிரதிபலித்தன. காத்மண்டுக்கு அருகே இந்தியாவின் எல்லைப்பகுதியைத் தொட்டு நிற்கும் பிர்கான்ஜ் என்னும் பகுதியில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கை மிகப்பெரிய சுவரோட்டிகளில் பொறிக்கப்பட்டிருந்தன.'நேபாளத்தை சமஷ்ட்டி ஜனநாயக குடியரசாக்குவோம், முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வருவோம். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டாவைத் குடியரசுத் தலைவராக்குவோம். மக்களே அணிதிரண்டு வாக்களியுங்கள்.

தேர்தல் நெருங்கும் வேளையில் இளம் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர்கள் சிகப்பு நிற கொடிகளை ஏந்தியவாறு, தமது உடல்களில் கம்யூனிஸ்ட் சின்னங்களை வரைந்தவாறு, உணர்ச்சி பூர்வமான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர். உண்மையில் நேபாளத்தில் நடைபெறப் போகும் மாற்றத்தை இந்த இளம் தலைமுறையின் செயற்பாடுகள் மூலம் உணரக்கூடியதாக இருந்தது. தேர்தல் தொடர்பான நிலவரங்களை அறியும் ஆவல் மேலீட்டுடன் ஊடகவியலாளர்கள் காத்மண்டு நகருக்குள் நுழைந்தபோது, அங்கே கடமையில் இருந்த பஸ் நடத்துனர் ஒருவர் அவர்களிடம் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வருவது உறுதி என திடமாக கூறினார். அவர் பின்வருமாறு கூறினார். "மாவோவாதிகள் இங்கே வெற்றி பெறுவார்கள்". தேர்தல் நெருங்கும் காலப் பகுதியில் காத்மண்டுவின் உட்பகுதிக்கு ஊடகவியலாளர்கள் சென்று கட்சிகளின் உண்மை நிலைகளை ஆராய்ந்தபோது, நேபாள வசதிபடைத்த உயர்குடியினர் நேபாள் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்தனர். வசதிபடைத்த மத்திய பிரிவினர், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட், லெனிஸ்ட் பிரிவுக்கு ஆதரவா கவும் கீழ்நிலையில் உள்ள ஒழுங்கு படுத்தப்படாத மக்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சி மாவோ பிரிவுக்கு ஆதரவாகவும் இருந்தனர். தாராளவாத போக்கை உடையவர்கள் நேபாள தேர்தலில் மாவோவாத பிரிவினர் அடைந்த வெற்றிக்கு பல்வேறு காரணங்களை கற்பித்து வருகின்றனர். மாவோவாத பிரிவினர் வன்முறைகள், தந்திரங்கள் மூலம் வெற்றி பெற்றதாகவும் இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்வாகவும் காரணம் கற்பிக்கின்றனர். உண்மையில் 2006ல் நேபாள முடியாட்சியை வீழ்த்த வேண்டுமென்ற எழுச்சி மீண்டும் முன்னெடுக்கப்பட்டதே மாவோவாதப் பிரிவு வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும்.

நேபாள மக்களின் மாற்றத்திற்கு முக்கிய காரணிகளாக முடியாட்சியும், முடியாட்சியானால் நேபாளம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தமையும், இவற்றின் மூலம் நேபாளத்தில் ஏகாதிபத்திய சக்திகளினதும், இந்திய மேலாதிக்கவாதி களினதும் வேட்டைப் பூமியாக நேபாளம் அமைந்திருந்தமையுமாகும். 1950 காலப்பகு தியில் நேபாளக் காங்கிரஸ் நேபாளத்திற்கு சனநாயகச் சுதந்திரம் வேண்டிப் போராடியது. இதன் மூலம் காங்கிரஸ் நேபாளத்தின் பிரதான அரசியல் சக்தியாக மாறியது. ஆனால் முடியாட்சி தனது சர்வாதிகாரத்தின் மூலம் காங்கிரஸ்



நேபாள மாவோவாதப் பிரிவினர்களுக்கு நேபாள மக்கள் மத்தியில் அமோக ஆதரவு இருப்பதால் அவர்களே சமூகத்தில் மையசக்தியாக மாறியுள்ளனர். எனவே மன்னரின் அதிகாரம் இன்று செல்லாக்காசாகியுள்ளது. நேபாள மக்களுக்கு எதிராக மன்னர் புரிந்த கொடுமை களுக்கு உலக வல்லாதிக்க சக்திகளும் இந்தியாவும் பின்னணியில் இருந்துள்ளன. அமெரிக்கா மாவோவாதிகளை அழித்தல் என்ற போர்வையில் நேபாள மன்னருக்கு வெளிப்படையாக பல உதவிகளைச் செய்து வந்தது. நேபாள மன்னர் இதன் பின்புலத்திலேயே நேபாள மாவோவாத தலைவரின் தலைக்கு 5 மில்லியன் ரூபாய்களை பரிசாக வழங்குவதாக பிரகடனம் செய்தார். மேலும் நேபாள மாவோவாதப் பிரிவு கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை அமெரிக்கா பயங்கரவாதப் பட்டியலில் சேர்ந்திருந்தது.

பலத்தை மூன்று சகாப்பதங்களுக்கு இரும்புப்பலம் கொண்டு ஒடுக்கியது. நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிராக அடுத்த எழுச்சி 1990ல் எழுந்தது. இதை நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி( மா-லெ) முன்னெடுத்தது. இப்போராட்டத்தை இக்கட்சி நேபாளக் காங்கிரசுடன் இணைந்து மேற்கொண்டது. இதன் பின்னர் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) நேபாளத்தின் முக்கிய அரசியல் சக்தியாக மாறியது. ஆனாலும் இவர்களின் எழுச்சி எதிர்பார்த்த வெற்றியை ஈட்டவில்லை. மன்னர் மக்கள் போராட்டத்தின் மூலம் ஓரளவு பலவீனப்பட்டாலும் முற்றுமுழுதாக மன்னரின் அதிகாரம் செயலிழக்கவில்லை. இராணு வத்தின் துணையுடன் மன்னர் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்தார். பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் நேபாளத்தில் மிகப்பெரிய அளவில் மன்னராட்சியை நீடிப்பதற்கு துணைக் காரணியாக இருந்துள்ளது. இவை காரணமாக தீவிர வாதத்தின் ஊடாகவே மன்னராட்சியை அகற்றமுடியும் என்ற நம்பிக்கை நேபாள மக்கள் மத்தியில் வேரூன்றத் தொடங்கியது. முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ கட்சியான காங்கிரஸ் மந்தகெதியில் செயல்படுவது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) அதே பாதை யில் பயணித்ததே கவலைதரும் விடையமாகும்.

**சனநாயகத்திற்கான போராட்டம்:**

இன்று நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ பிரிவு) மன்னரை வெளியேற்றும் நிலைப்பாட்டில் மிகக் கடுமையாக உள்ளது. தற்போது ஏனைய கட்சிகள் மன்னர் வெளியேற்றத்தை சடங்கு ரீதியிலான வைபவத்துடன் மேற்கொள்ளலாம் என முடிவெடுத்தபோது மாவோ பிரிவினர் அக்கோரிக்கையை திட்டவட்டமாக நிராகரித்தனர். பிரதானமாக விளங்கிய இக்கோரிக்கை மாவோ பிரிவினர் நேபாளத்தில் உள்ள பின்தங்கிய விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோரை அணிதிரட்டி கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு குடியரசே நேபாளத்திற்கு வேண்டும்! பின்தங்கிய நேபாளம் வேண்டாம்! ஏகாதிபத்திய சுரண்டலுக்கு இடமளியோம்! என



மாவோயிஸட் தலைவர் பிரசன்டா


பிரகடனப்படுத்தியதோடு பல்வேறுபட்ட போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

நேபாள மாவோவாதப் பிரிவினர்களுக்கு நேபாள மக்கள் மத்தியில் அமோக ஆதரவு இருப்பதால் அவர்களே சமூகத்தில் மைய சக்தியாகமாறியுள்ளனர். எனவே மன்னரின் அதிகாரம் இன்று செல்லாக்காசாக்கியுள்ளது. நேபாள மக்களுக்கு எதிராக மன்னர் புரிந்த கொடுமைகளுக்கு உலக வல்லாதிக்க சக்திகளும் இந்தியாவும் பின்னணியில் இருந்துள்ளன. அமெரிக்கா மாவோவாதிகளை அழித்தல் என்ற போர்வையில் நேபாள மன்னருக்கு வெளிப்படையாக பல உதவிகளைச் செய்து வந்தது. நேபாள மன்னர் இதன் பின்புலத்திலேயே நேபாள மாவோவாத தலைவரின் தலைக்கு 5 மில்லியன் ரூபாய்களை பரிசாக வழங்குவதாக பிரகடனம் செய்தார். மேலும் நேபாள மாவோவாதப் பிரிவு கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை அமெரிக்கா பயங்கரவாதப் பட்டியலில் வைத்திருந்தது. இந்திய ஆட்சியாளர்கள் குறிப்பாக சில கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நேபாள மாவோவாதப் பிரிவினரை ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணையுமாறு கோரிவந்தனர். இது மாவோவாதப் பிரிவினரை பலமிழக்கச் செய்யும் நடவடிக்கை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஒரு அமைப்பு ஆயுதப் போராட்டத்துடன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்பது பிழையான ஒரு வாதமாகும். நேபாள மாவோவாதிகளின் பலம் என்பது அவர்களின் விட்டுக்கொடுக்காத அரசியல்ச் செயல்பாடாகும். எனவே இந்திய மாவோ பிரிவினருக்கும் நேபாள மாவோ பிரிவினருக்கும் இடையே சில விடங்களில் வேறுபாடு நிலவுகின்றன. நேபாள மாவோவாதிகள் நேபாள அரசியலிலும் நேபாள மக்களின் உணர்வுகளிலும் அதிக தொடர்புகளைக் கொண்டுள்ளனர். ஆனால் இந்திய மாவோவாதப் பிரிவினர் இத்தகைய நிலைகளில் இல்லை.

**அனுபவங்கள்:**

நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி மாவோ வாதிகளின் அனுபவங்களை இந்திய இடதுசாரிகள் அறிந்து கொள்ள வேண்டும். இந்திய ஆளும்தரப்புடன் உறவாடி இந்திய இடதுசாரிகள் எதையும் சாதிக்கவில்லை. மாறாகத் தேய்ந்தது தான் வரலாறு. இன்று நேபாள மாவோவாத இடதுசாரிகள் ஒரு குடியரசை நிறுவியுள்ளனர். அவர்கள் சனநாயக இலக்கின் ஊடாக சோசலிசம் என்ற பாதையை அடையவேண்டும். இன்று பயங்கரவாதிகள் என்று பட்டியல் இடப்பட்டவர்கள் மாபெரும் மக்கள் இயக்கத் திற்கு தலைமை தாங்கி அதிகாரத்திற்கு வந்துள்ளார்கள். இதற்கு உலக மக்களே சாட்சியாகும்.

இந்திய வெளிநாட்டு கொள்கை வகுப்பாளர்களுக்கும் இந்திய அதிதீவிர இந்து வாவாதிகளுக்கும் நேபாள மக்கள் சிறந்த ஒரு பாடத்தை புகட்டியுள்ளனர். எமது சொந்தக்காலில் நிற்பதே எமக்குப்



மன்னர் கயனேந்திரா

பலம் என்பதே அவர்கள் கற்றுக்கொடுத்த பாடமாகும். இன்று இந்தியா தனது நலனுக்காக நேபாள அரச்முறைமையை தொடர்ந்தும் நிலைகொள்வதற்காக எடுத்த முயற்சிகள் காரணமாக நேபாள மக்கள் மனதில் இருந்து இந்தியா வெகு தூரத்திற்குச் சென்றுள்ளது. எனவே இந்திய ஆட்சியாளர்கள் நேபாளம் தொடர்பாக புதிய கொள்கைகளை நோக்கிய நகர்வுகளுக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

இவ்வளவு காலமும் நேபாள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நாணயம் ஒன்றை மன்னரின் காலில் வைத்து ஆசிர்வாதம் பெறுவது வழமையாகும். ஆனால் குடியரசு உருவாக்கப்பட்டதும் இது முடிவுக்கு வந்துள்ளது. இதைச் சாதித்தவர்கள் நேபாள மக்களே. மிகப்பெரிய வரலாற்று சாதனையை புரிந்துள்ள நேபாள மக்களுக்கு முன்னே பல சவால்கள் உள்ளன. அவற்றைத் தாண்டி அவர்கள் ஜனநாயகத்தின் ஊடாக சோசலிசத்திற்கு செல்லவேண்டும். எம் கண்ணெதிரே நடந்துள்ள இந்த மாபெரும் மாற்றத்தை எமக்கு வழிகாட்டியாக்கிக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் அரசியல் தலைமைகள் இல்லை, சந்தாத் தலைமைகளே இருக்கின்றன!

— மனோகணேசன்

**மேலக மக்கள் முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனுடன் ஒரு நேர்காணல்**

நேர்காணல் என்.ஜனகன்

*வட-கிழக்குக் பகுதியிலே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்கவேண்டும். உண்மையில் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதே உண்மை நிலையாகும். வட-கிழக்கிற்கு தெரிவு செய்யப்பட்ட 23 பாராளுமன்ற உறுப்பினர்களில் 22 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளை தமது ஏகபிரதிநிதியாகக் கொள்கின்றனர். ஆனால் வட-கிழக்கு வெளியே வாழுகின்ற தமிழ் மக்களுக்கு விடுதலைப்புலிகள் தலைமை தாங்கவில்லை என்பது தான் எமது கருத்தாகும். முன்பு சில தமிழ்த் தலைவர்கள் விடுதலைப்புலிகளும் அதன் தலைவரும் வட-கிழக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கும் தலைமை தாங்குவதாக பேசிவந்தனர். இந்தக் கருத்தில் எந்த அடிப்படையும் இல்லை என்பதே எமது கருத்தாகும்.*



**தங்களுடைய அரசியல் பின்னணி பற்றி ?..**

எனது அரசியல் பின்னணி ஒரு பாரிய பெருமைமிக்கது என எதனையும் என்னால் கூறமுடியாது. எனது தந்தையார் வி.பி கணேசன் ஒரு தொழிற்சங்கவாதி. கலைத்துறையை சார்ந்தவர். இது தான் எனது அரசியலின் பின்னணியாகக் கூறமுடியும். எனது தந்தை தேர்தல் அரசியலில் ஒரு போதும் ஈடுபட்டது மில்லை. அவர் தேர்தலில் போட்டியிட்டது மில்லை. பாராளுமன்ற உறுப்பினராகி, மந்திரிப் பதவியை பெற்று ஒரு சுகபோக அரசியல் வாழ்வை அவர் விரும்பியது மில்லை. அவர் நேர்மையானவராக இந்த சமூதாயத்தில் வாழ விரும்பினார். எனது அரசியலின் பின்னணி நேர்மை என்பதை மட்டுமே கொள்ளமுடியும்.

**மேலக மக்கள் முன்னணியை நீங்கள் அமைத்த தன் நோக்கம் யாது?**

மேலக மக்கள் முன்னணிக்கு முன்பாக எமது தொழிற்சங்கமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவு என்பது ஒரு அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சியாக விளங்கியது. ஆனாலும் அங்கே தொழிற்சங்க விடயங் களே முக்கியமாக செயற்பாட்டுக்கு உரியவையாக இருந்தன. அரசியல் பிரிவு என்பது சிறியளவு செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தது. நான் மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் வடக்கு-கிழக்குக்கு வெளியே மலையகம் நீங்கலாக குறிப்பாக மேல் மாகாணத்தை அண்டி வாழும் தமிழ்மக்கள் அரசியல் அனாதைகளாக இருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. இவர்கள் ஐக்கிய தேசியகட்சியின் வாக்கு வங்கியாக, எடுப்பார்கைபிள்ளையாக இருந்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியின் தமிழ் வாக்குவங்கியாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள் காணப்பட்டன. தேர்தல் காலங்களில் மட்டும் தமிழ் மக்களிடம் சென்று வாக்குகளை பெறுவதும் பின்னர் அவர்ளைக் கைவிடுவதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொன்றுதொட்டு வரும் அரசியல் பாரம்பரியமாகும். இதை மாற்றியமைத்து இந்த மக்களுக்கு அரசியல் தலைமை ஒன்று வழங்கவேண்டும் என்ற அவாவின் நிமித்தம் உருவானதே மேலகமக்கள் முன்னணியின் தோற்றமாகும்.

**மேல்மாகாணத் தமிழருக்கான தனியான அரசியலை முன்னெடுத்த நீங்கள் தற்போது மலையக அரசியலிலும் அக்கறை செலுத்தி வருகின்றீர்கள். எனவே மலையக அரசியலில் ஈடுபடப் போ கின்றீர்களா? அவ்வாறாயின். மேல்மாகாணத்திற்கான அடை யாள அரசியலை கைவிடப் போகின்றீர்களா?**

இல்லையென்றே கூறுவேன். ஆரம்பத்தில் சனநாயகத் தொழி லாளர் காங்கிரஸ் என்ற அடிப்படையில் செயற் பட்டோம். பின்னர் மேல்மாகாண மக்கள் முன்னணியென்று மாற்றமடைந்தது. பின்னர் மேலக மக்கள் முன்னணியென மாற்றினோம். விரைவில் மேலக என்ற பெயர் எடுக்கப்பட்டு, தேசிய ரீதியில் செயற்படுவதற்குரிய பொருத்தமான பெயரை வைக்க உள்ளோம். என்ன கட்சியின் பெயரை அடிக்கடி மாற்றுகின்றீர்கள் என எவரும் எண்ணக்கூடாது. உண்மையில் அந்தந்த நேரங்களில் நிலவும் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு செயற் படுகின்றோம் என்பதே உண்மை யாகும். மேலக மக்கள் அரசியல் அனாதைகள் அல்ல என்ற நிலையை உருவாக்கி இருக்கின்றோம் என்பது எம்மால் உறுதியாக்கப்பட்டுள்ளது. எனவே எமது அடுத்தகட்ட பயணத்தை தொடங்கி யுள்ளோம்.

**மலையக மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கி ன்றீர்கள்?**

சுருக்கமாகச்சொன்னால் வடக்கு-கிழக்கை எடுத்துக்கொண்டால் அங்கே தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். அதற்கு அடுத்ததாக முஸ்லீம் மக்கள் வாழ்கின்றார்கள். குடியேற்றங்களின் காரணமாகவும் பாரம்பரியமாகவும் சிங்களமக்களும் வாழுகின்றார்கள். தமிழ் மக்களுடன் ஒப்பிடும்போது அங்கே சிங்கள மக்களும் முஸ்லீம் மக்களும் சிறுபான்மையாக உள்ளனர். எனவே வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு தீர்வு வழங்கும்போது அங்கு வாழுகின்ற முஸ்லீம், சிங்கள சிறுபான்மை மக்களுக்கு என்னவிதமான உரிமைகள் வழங்கப்படுகின்றதோ அதே போன்று வடக்கு-கிழக்கு வெளியே வாழுகின்ற மலையக மக்களுக்கும் மேல் மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

**மலையக மக்களின் அரசியலை முன்னெடுப்பதில் தொண்டமான் ஆற்றிய பங்களிப்புக்களை ஏனையோர் ஆற்றவில்லை. இதற்கு என்ன காரணம் என நினைக்கின்றீர்கள்.?**



சௌமியமூர்த்தி தொண்டமானை நான் மதிக்கின்றேன். ஆனால் அவரது செயற்பாடுகளை முழுமையாக நான் ஏற்கமாட்டேன். அவரது செயற்பாடுகளை ஒரு அளவுகோலாகக் கொள்ளவும் என்னால் முடியாது. உண்மையில் வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லீம், சிங்கள மக்கள் அங்கு தேசிய சிறுபான்மையாக கருதப்பட வேண்டும் என்பது போல மலையக மக்களும் தேசிய சிறுபான்மையென்ற அடிப்படையில் கருதப்படவேண்டும். இதுவே மேலக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். குறிப்பாக மத்திய மலைநாட்டிலே மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளன. ஓன்று அம்பேகமுவ பிரதேச செயலகப் பிரிவு, மற்றது நுவரெலியா செயலகப் பிரிவு, இந்த இரண்டு செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்து உள்ளக சுயாட்சி அலகு அல்லது ஒரு அதிகார அலகு உருவாக்கப்பட வேண்டுமென்பது எமது நிலைப்பாடாகும். இன்று மலையக மக்கள் ஏனைய மக்களுடன் ஒப்பிடு கையில் சகல வழிகளிலும் பின் தங்கியே உள்ளனர். இவர்கள் இந்தியாவில் வாழுகின்ற பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையிலேயே உள்ளனர்.எனவே ஏனைய மக்களுக்கு சமமாக மலையக மக்களை கொண்டுவரக்கூடிய திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

முதன் முதலாக நியமன பாராளுமன்ற உறுப்பினராக அசீஸ் இருந்தார். அதேபோல நீங்கள் கூறிய சௌர்மியமூர்த்தி தொண்டமான் இருந்தார். இக்கால கட்டத்தில் மலையக மக்களுக்கு வ்ாக்குரிமை உட்பட எத்தகைய உரிமைகளும் இருக்கவில்லை. ஆனால் இன்று அப்படியல்ல. சரியோ பிழையோ சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட நிலமைகளால், இன்று பாராளுமன்றத்தில் 14க்கு மேற்பட்ட மலையக பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளனர். என்னைத் தவிர ஏனைய அனைவரும் அங்கே அமைச்சர்களாக உள்ளனர். அனைத் துத்துறை அமைச்சர்களும் அங்கே உள்ளனர். அதேநேரம் பெருந்தொகையான மாகாணசபை உறுப்பினர்களும் இன்று உள்ளனர். இதே போன்று உள்ளூராட்சி சபைகளிலும் உள்ளனர். எனவே அரச அதிகாரம் என்பது அங்கே உள்ளது. எனவே அரச அதிகாரம் இல்லை என்று தொடர்ந்தும் சிங்கள அரசாங்கங்களை குறைகூறி பயன் ஏதும் ஏற்ப்படப்போவதில்லை. சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் பேரினவாதத்தன்மை கொண்டது என்பது வெளிப்படை. அதன் செயற்பாடுகள் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழரை ஒடுக்கின்றது என்பதும் உண்மையாகும். ஆனால் மலையக மக்களின் வாக்கு களை பெற்று பாராளுமன்றத்திற்கு, மாகாண சபைக்கு, உள்ளூராட்சி சபைகளுக்கு அங்கத்தவரர்களாக சென்றுள்ளவர்கள். மலையக மக்களுக்கு வரலாற்று துரோகத்தை புரிந்துள்ளார்கள் என்பதே உண்மை நிலவரமாகும்.

**மலையகமக்களைப் பொறுத்தவரை அவர்களின் இருப்பை அச்சுறுத்துகின்ற குடியேற்றங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதனைத் தடுக்க என்ன செய்யலாம் என நீங்கள நினைக்கின்றீர்கள்.**

பெரிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தாக நான் மிகைப்பட கூற விரும்ப வில்லை. ஆனால் இந்த திட்டமிட்ட குடி யேற்றத்திட்ட விடயத்தை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம். மேல் கொத்மலைத்திட்டம் கூட ஒரு திட்டமிட்ட குடியேற்றத்திட்டம் என்றே கருதப்பட வேண்டும். வடக்கு-கிழக்கு தாயகத்தை இரு கூறாக பிரிக்க மணலாறு என் பதை வெலி ஓயா என பெயர் மாற்றி குடியேற்றத்திட்டம் எப்படி மேற்கொள்ளப்பட்டதோ, அதே போன்றே, மலையகத் தாயகத்தை இரு கூறாக்க மேல் கொத்மலைத் திட்டம் உருவாக் கப்பட்டுள்ளது. இங்கே கவலை தரும் விடயம் என்ன வென்றால் மலையக மக்களின் அமோக வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற ஆறுமுகம் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன் போன்றோர் அரசியலில் புரிந்த குத்துக் கரணங்கள் காரணமாக இத்திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது மாத்திரமல்ல பல இடங்களில் காடுகளை அழித்து விவசாய நிலங்களை உருவாக்கிய மலையகமக்கள் தற்போது அப்பகுதிகளில் இருந்து விரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

**இலங்கையில் நிலவும் தற்போதைய அரசியல் சூழல் பற்றி ?..**

வடக்கு-கிழக்கு மக்களின் தாயகம் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு அங்கே உள்ளக சுயாட்சி வழங்கப்பட வேண்டும். ஆனால் இதில் சிங்கள - அரசாங்கம் படிப்படியாக தவறுகளை விட்டுக்கொண்டே வருகின்றது. இப்பொழுதும் அதுவே நடைபெறுகின்றது. வடக்கு-கிழக்கு தமிழ்மக்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய சகல தன்மைகளையும் கொண்டுள்ளனர். நூற்றாண்டுகால கலாச்சார, பண்பாடு, நிலத்தொடர்ச்சி, பொதுமொழி, தேசியப் பொருளாதாரம் உட்பட சகல தன்மை களையும் அவர்கள் கொண்டுள்ளனர். எனவே இலங்கையின் இறைமையையும் ஆட்சி உரிமையையும் சமமாக பங்கீடு செய்யக்கூடிய நிலையை அரசாங்கம் மறுத்துவருகின்றது. இதனால் தான் இந்த கொடிய யுத்தம், இந்த மனித பேரழிவு தொடர்கின்றது.

**அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுவரக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றது என்று நீங்கள் கருதுகின்றீர்களா?**

பூடகமாகவோ, ஊகமாகவோ இங்கே நான் கருத்துக்கூற விரும்ப வில்லை. இப்படி ஊகமாக கருத்துக்கூறி நானும் சரி மற்றவர்களும் சரி அலுத்துப் போயிருக்கின்றோம். இந்த நாடு பிரிய வேண்டுமா? அல்லது ஒன்றாக இருக்க வேண்டுமா? என்பதற்கான பதில் சிங்கள மக்களிடமே உள்ளது. எனவே தமிழ்த்தேசிய மக்களை அங்கீகரித்து, அதிகாரம் சமமாக பங்கிடப்படாதவரை இந்த நாடு பிரிவதை யாராலும் தடுக்கமுடியாது.

தொடர்ச்சி 18 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் போராட்டத்தினை அங்கீகரிப்பதே ஓரே வழி!



பொங்கு தமிழ் பிரான்ஸ் 2008




இன்றைய சூழ்நிலையில் ஜே.வி.பியினர் மத்தியில் உள்ள குழப்பநிலையையும் கிழக்கில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலையும் உற்றுநோக்கும்போது, பிள்ளையானை மையமாக வைத்து மகிந்த ராஜபக்ச அரங்கேற்றிய நாடகம், அவருக்கு ஒரு தற்காலிக வெற்றியைத் வழங்கியுள்ளது. நாம் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அதைக் கேளாது மகிந்தவின் நாடகத்தில் பங்கேற்று இருந்த, ஐக்கியதேசியக் கட்சி, முஸ்லீம் காங்கிரஸ், ஜே.வி.பி என்பன இன்று பெரும் சோதனைக்கு உள்ளாகியுள்ளன. நாம் ஆரம்பம் முதலே மேற்படி தேர்தலை பகிஸ்கரிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தோம். முதலில் எமது கோரிக்கையை ஏற்றிருந்த இவர்கள் இறுதியில் மகிந்தவின் பொறிக்குள் சிக்குண்டார்கள் என்றே கூற வேண்டும். இந்த விடயத்தில் எம்முடன் இணையுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவுடன் இது தொடர்பாக நாம் கருத்து பரிமாறல்களை செய்திருந்தோம். ஆனால் இறுதியில் அவர்களும் எமது கருத்துக்கு ஒத்துழைப்பு வழங்காது விலகியே சென்றனர். முற்று முழுதான இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் கிழக்கு மாகாணம் ஆகும். அங்கே முழுச் சுதந்திரத்துடன் பிள்ளையான் குழு அரச படைகளின் துணையுடன் செயற்படுகின்றது. எனவே இப்பகுதியில் தேர்தலில் சுதந்திரமாக செயற்பட முடியாது என பலமுறை நாம் விரிவாக கூறியிருந்தோம்.

எனவே இந்த தேர்தலை பகிஸ்கரிப்பதன் மூலம் மகிந்தவின் நயவஞ்சக திட்டத்தை முறியடிக்க முடியும் என கூறினோம். எல்லாவற்றையும் அமைதியாக, பொறுமையாக கேட்ட இவர்கள் இறுதியில், மகிந்த விரித்தவலையில் சிக்குண்டனர். தேர்தலில் முழுவேகமாக போட்டியிட்டனர். இதன் மூலம் எதிர்கட்சிகளும் பங்குகொண்ட ஒரு சனநாயகத்தேர்தல் என்று, மகிந்த சர்வதேசத்திற்கு கூறுவதற்கு இவர்கள் அங்கீகாரம் வழங்கினர். இந்தத் தேர்தலின் பின்னர், ஜே.வி.பியின் பிளவு வெளிப்படையானது. பிளவுக்கு வித்திட்ட முதலாவது சர்ச்சைக்கு பிள்ளையான் வைத்திருந்த ஆயுதமே காரணமாகியது. பிள்ளையானுக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் உள்ளது. எனவே அவர் ஆயுதம் வைத்திருக்க வேண்டும் என வீரவன்ச கூற, பிள்ளையானின் இருப்பில் இருக்கும் ஆயுதங்கள் களையப்பட்ட பின்னரே தேர்தலில் பங்கேற்கமுடியும் என லால்காந்த அணியினர் வாதிட்டனர். இவ்வளவுகாலமும் அரசுக்கு நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்கிவந்த ஜே.வி.பி அரசுக்கு எதிராக விரல் நீட்டும் படலம் ஆரம்பமானது. ஆனாலும் ஆயுதம் களையப்படவேண்டும் என்று கூறிய லால்காந்த குழுவினர் பின்னர் தமது நிபந்தனையை பற்றி கவலைப்படாது தேர்தலில் குதித்தனர். பெரும் படையணி தம்மிடம் இருப்பதுபோல தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர். இறுதியில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை கிழக்கு மாகாணத்தில் பிரநிதித்துவப்படுத்தும் ஜே.வி.பிக்கு ஒரேயொரு மாகாணசபை உறுப்பினரே கிடைக்கும் நிலை இன்று தோன்றியுள்ளது. மகிந்தவுக்கு நல்லதொரு பாடத்தை புகட்ட வேண்டும் என்று களம் இறங்கிய ஜே.வி.பிக்கு மகிந்த நல்ல பாடத்தை புகட்டியிருப்பது போலவே நிலமை உள்ளது.

இன்று மகிந்த ராஜபக்ச ஜே.வி.பியின் முதுகு எலும்பையே முறித்துள்ளார். கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் முதலமைச்சர் பதவி பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது. அதில் தீர்வு எட்டப்பட்டநிலையில், இன்று கிழக்கு மாகாணசபைக்கான காணி, பொலீஸ் அதிகாரம் தொடர்பான சர்ச்சைகள் கிழம்பியுள்ளன. ஆனாலும் கிழக்கின் முதலமைச்சர் ஒருவர் தனது கைக்குள் இருப்பதால் தொடர்ந்தும் யுத்தத்தை முன்னெடுக்கும் மகிந்தவின் அரசாங்கத்திற்கு தற்போது சாதகநிலை காணப்படுகின்றது. இன்று மகிந்தவுக்கு தமிழருக்கு பதவி கொடுப்பதால் எதுவும் பிரச்சினையில்லை. இதன் அடிப்படையில் பார்க்கின்றபோது பிள்ளையானுக்கும் பிரபாகரனுக்கும் இடையே வேறுபாடு இல்லை. இருவரும் ஆயுதங்களுடனேயே உள்ளனர். ஆனால் கிழக்கில் உள்ள வளங்களை கொள்ளையிடுவதற்கு பிள்ளையான் எல்லாவகையிலும் உதவுவார். எனவே கிழக்கில் பல்தேசிய கம்பனிகளின் நிகழ்ச்சிநிரலை முன்வைத்து அனல் மின்நிலையங்களை அமைத்தல், சுற்றுலா விடுதிகளை உருவாக்குதல் மற்றும் கிழக்கின் இயற்கை வளங்களை சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பனை செய்தல் மூலம் பெருமளவு நிதியைப் பெறும் நோக்கம் மகிந்தவிடத்தில் உள்ளது. இதற்கு பிள்ளையான் அவருக்கு வலதுகரமாக விளங்குவார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தனது தாயகப்பகுதி வளங்களை விற்பதற்கு தயாரில்லை. இதனாலேயே மகிந்த அவர் மீது தொடர்ச்சியாக போர் தொடுக்கின்றார். மகிந்த தொடுக்கும் போருக்கு இந்தியா தொடக்கம் சர்வதேச நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏன் ஆதரவு வழங்ககின்றன என்றால் அரசின் போர் நடவடிக்கைகளுக்குள் உலகமயமாக்கல் நிகழ்ச்சிநிரலும் ஒழிந்திருப்பதனாலேயாகும். இன்று ஜே.வி.பியினர் இரண்டு அணிகளாகி உள்ளனர். ஒரு அணி இனவாத சக்திகளுக்குள் உள்ளது. விமல் வீரவன்ச இதற்கு தலைவராக உள்ளார். இவர் மகிந்தவின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் செயல்பாட்டில் இறங்கியதுடன் சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளுக்கு தலைமை தாங்கவும் முன்நிற்பார். இதேநேரம் சோமவன்ச பிரிவினர் என்ன செய்யப்போகின்றார்கள். இவர்கள் மக்களுக்கு எதை செய்யப்போகின்றார்கள். பட்டினியால் வாடும் மக்களுக்காக குரல் கொடுக்கப்போகின்றார்களா? இந்த நாடு பொருளாதார சீர்கேட்டால் அழிவதை தடுக்கப்போகின்றார்களா? பல்தேசிய கம்பனிகளுக்கு நாட்டின் வளங்களை விற்பதை தடுக்கப்பதற்கு போராடப் போகின்றார்களா? இவ்வகையான போராட்டங்களை சோமவன்ச பிரிவினர் முன்னெடுத்தால் நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம். இவர்களின் போராட்டம் யுத்தத்திற்கு எதிரானதாக, இனவாதத்திற்கு எதிரானதாக இருந்தால் நிச்சயமாக அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படின், விடுதலைப்புலிகளும், ஜே.விபியும் சமமானவர்களாகவே தென்படுவர். தெற்கில் பல்வேறு ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் மக்களை மீட்பதற்காக ஜே.வி.பியும் வடக்கில், அரச புறக்கணிப்புகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக போராடும் விடுதலைப்புலிகளும் ஒரே நோக்கத்திற்காக செயல்படுகின்றனர் என்று கூறமுடியும். தெற்கிலே பின்தங்கிய விவசாய ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் இருந்தே ஜே.விபி தோற்றம் பெற்றது. அதே போன்று வடக்கிலே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள விவசாயிகள், மீனவர்கள் மத்தியில் இருந்தே விடுதலைப்புலிகள் உருவாகினர். எனவே இவர்கள் இரு பிரிவினதும் தோற்றங்கள் ஒரே சூழ்நிலையில் இருந்தே தோற்றம் பெற்றுள்ளன. உண்மையில் சிங்கள மக்கள் ஒடுக்கப்பட்டேயுள்ளனர். அதற்காகப் போராட வேண்டும். வெளிநாட்டுக் கலாச்சாரத்தில் வாழும் கும்பல் இந்த நாட்டு மக்களை தனது நலனுக்காக ஒடுக்கி வருகின்றது. அதற்காக நிச்சயம் ஜே.விபியும் போராடவேண்டும். அதே போலத்தான் தமிழ்மக்களின் கலாச்சாரம், பண்பாடு, மொழி என்பவற்றிக்காக தமிழ் மக்கள் போராடுகின்றார்கள்.

இந்தப்போராட்டத்தை ஏன் ஜே.வி.பி எதிர்க்கின்றது.? இது புதிராகவேயுள்ளது. ஜே.வி.பியினர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் தமது போராட்டத்தை இணைத்து முழு விடுதலைக்காக போராட வேண்டும். ஆனால் இவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக முனைப்புடன் செயல்படுகின்றனர். தாய்நாட்டை காப்பவர்கள் என்ற கோசத்துடன் ஜே.விபியினர் மாத்திரமல்ல குணதாச அமரசேகரா, எஸ். எல். குணசேகரா போன்றவர்களும் செயற்பட்டு வருகின்றனர். சிங்கள மக்களுக்கு சுதந்திரமில்லை, சிங்கள மக்களின் சொத்துகள் அபகரிக்கப்படுகின்றது, சிங்கள மக்களின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றது, சிங்கள மக்களின் உரிமைகள் வழங்கப்படவில்லை என்று இவர்கள் கூறுகின்றனர். இதில் உண்மையில்லாமல் இல்லை. இங்ஙனம் செயற்படுபவர்கள் மேற்கத்திய கலாச்சாரத்தை விரும்பும் உயர்குடி சிங்களவர்களாவர். இன்று உலகமய நிகழ்ச்சிநிரலுக்குள் குளிர் காய்ந்து கொண்டு முழு நாட்டையும் படு குழியில் தள்ளுவதற்கு இவர்கள் செயற்படுகின்றனர். எனவே இதற்கு எதிராக சிங்கள மக்கள் சார்பில் போராடுதல் தவறில்லை. அதே போன்று தமிழ் மக்களும் தமது அடையாளத்திற்காக கலை, பண்பாடு, மொழி, நிலம் என்பவை பாதிக்கப்படுவதற்கு எதிராக போராடுகின்றார்கள். எனவே சிங்கள இனத்திற்காக போராடுகின்றோம் என்று சொல்பவர்கள் தமது உண்மையான எதிரி யார் என்பதை முதலில் இனங்காணவேண்டும். தமது எதிரி தமிழ்மக்கள் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். எனவே பொதுவான எதிரிக்கு எதிராக போராட தமிழ் மக்களையும் தம்முடன் இணைக்கவேண்டும்.

இன்று சிங்கள உயர் குடியினர், பல்தேசிய கம்பனிகளின் துணையுடன் தமிழ்மக்களை அடிமைப்படுத்த முனைகின்றனர். இந்த முயற்சிக்கு ஜே.விபியும் துணைபோகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தினை நிறுத்து ! வாழ்க்கைச் செலவினை குறை !

*தமிழ் முஸ்லீம் மக்களை விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்குகின்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து தடுத்து வைத்து சித்திரவதை செய்து கொலையும் செய்கின்றனர். இந்த இருமாகாகாணங்களில் வாழும் மக்களை போலவே நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்மக்களும் துன்பப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் பிடி ஆணைகளோ, நீதிமன்ற உத்தரவுகளோ இன்றி அவசரகால விதிகளின் துணையுடன் பயங்கரவாதத்தை தடுத்தல் என்ற போர்வையில் நடைபெறுகின்றன*

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் வாழ்க்கை செலவு யாவரும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித்து காணப்படுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் பார்க்கின்ற போது இவ்வருடம் 1400 புள்ளிகளால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது. 2006ம் ஆண்டுக்கும் 2007ம் இடைப்பட்ட காலத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு 700 புள்ளிகளாக விருந்துள்ளது. ஆனால் 2007க்கும் 2008 மே மாதத்திற்கு இடையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு 1400 புள்ளிகளாக காணப்படுகின்றது. தற்போது இலங்கையின் பணவீக்க நிலமை 20% மாக காணப்படுகின்றது. இந்நிலை மேலும் அதிகரிக்கும் தன்மை அதிகமாக உள்ளது. பொதுவாக ஆசிய பிராந்தியத்தில் விலைவாசி உயர்வு தற்போது அதிகமாக உள்ளது. உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்திருப்பதும், வர்த்தக பொருட்களான அரிசி,மா என்பனவற்றின் விலை அதிகரிப்பினாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆசிய நாடுகளில் உள்ள ஏனைய நாடுகள் தத்தமது அரசாங்கங் களின் மூலமும் மத்திய வங்கியின் மூலமும் பணவீக்கத்தை 5% இருந்து 10% வரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. தேவையற்ற அரச செலவீனங்களை குறைப்பதன் மூலமும் எரிபொருட்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் மானியங்களை வழங்குவதன் மூலமும் அந்நாடுகள் பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்க்கும் துறையாக தனியார்துறை விளங்கின்றது. ஆனாலும் தனியார்துறைத் தொழிலாளர்கள் வாழ்க்கை செலவு அதிகரிப்புக்குரிய வேதன உயர்வை பெறமுடியாத நிலையில் உள்ளனர். அரசாங்கம் தனியார்துறை வேலை கொள்வோரை வேதன உயர்வை வழங்குமாறு நிர்பந்திப்பதற்குரிய சட்ட ஏற்பாடுகளை செய்வதற்கு திராணியற்ற நிலையிலேயே உள்ளது. மறுபக்கத்தில் அரசாங்கத் துறையிலும் அதிகரித்த வாழ்க்கை செலவுக்குரிய படியை வழங்க அரசாங்கம் மறுக்கின்றது. அத்துடன் தான் வாக்குறுதி அளித்திருந்த நிதிக் கொடுப்பனவுகளையும், வழங்காதிருக்கின்றது. அரசதுறை தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவுகள் மூலம் ஒடுக்கப்படுகின்றது. தற்போது அரசாங்க வங்கிகளிலும் சில தனியார் வங்கிகளிலும் வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய உரிமை குறைக்கப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரத்தை கொண்டிருக்கும் சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவசரகால சட்டவிதிகளின் உதவியுடன், அடிப்படை சனநாயக மற்றும் குடியியல் உரிமைகளை ஒடுக்கி வருகின்றார்.

**சனநாயக உரிமைகள்:**

ஊடக சுதந்திரம், தொடர்பாடல் இயக்கத்திற்கான சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், அத்துடன் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கான சுதந்திரம் எல்லாமே மறுக்கப்பட்டு வருகின்றது.மகிந்த அரசாங்கம் அண்மை யில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்பு, விடுதலைப் புலிகளுடன் செய்திருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருந்தது. தற்போது அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் வெளிப்படையான யுத்தத்தில் வடபகுதியில் ஈடுபட்டுவருகின்றது.

அரச படைகள் விடுதலை புலிகளை விமானங்கள் மூலம் குண்டுகளை வீசியும் பீரங்கி மற்றும் பல்குழல் துப்பாக்கிகள் மூலம் விரட்டிவிட்டு தமது கட்டுப்பாட்டுக்குள் அப்பகுதிகளை கொண்டுவர முயல்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறுகின்றனர். இவர்களின் அகதி வாழ்வு மிக மோசமான நிலையில் உள்ளது.

விசேட அதிரடிப்படை, பயங்கர வாத தடுப்பு பிரிவு மற்றும் அரசபாதுகாப்பு பிரிவுகள் அதேபோன்று அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டுவரும் தமிழ் ஒட்டுப்படைப்பிரிவுகள் ஆகியவை வடக்குகிழக்கு பகுதிகளில் உள்ள தமிழ் முஸ்லீம் மக்களை விடுதலைப் புலிகளுக்கு தகவல்களை வழங்குகின்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து தடுத்து வைத்து சித்திரவதை செய்து கொலையும் செய்கின்றனர். இந்த இரு மாகாணங்களில் வாழும் மக்களை போலவே நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் துன்பப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் பிடி ஆணைகளோ, நீதிமன்ற உத்தரவுகளோ இன்றி அவசரகால விதிகளின் துணையுடன் பயங்கரவாதத்தை தடுத்தல் என்ற போர்வையில் நடைபெறுகின்றன.

> *ஊடக சுதந்திரம், தொடர்பாடல் இயக்கத்திற்கான சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், அத்துடன் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்கான சுதந்திரம் எல்லாமே மறுக்கப்பட்டு வருகின்றது. மகிந்த அரசாங்கம் அண்மையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்பு, விடுதலைப் புலிகளுடன் செய்திருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருந்தது. தற்போது அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் வெளிப்படையான யுத்தத்தில் வடபகுதியில் ஈடுபட்டுவருகின்றது.*

ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் மக்களின் குடியியல் உரிமைகளான, எழுந்தமானமான கைதுகளும் விசாரணை இன்றி, தடுத்து வைத்தல் நடைபெறாமல் இருப்பதற்கான சுதந்திரம், இராணுவ அல்லது பொலீஸ் பொறுப்பில் இருக்கும்போது சித்திர வதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், ஒருவருக்கு எதிராக எதுவித பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளும் இல்லாத நிலையில், எந்தவொரு பிரசையும் அவரது வீட்டிலோ அல்லது பொலீஸ் நிலையதத்திற்கோ அழைக்கப் பட்டு விசாரணை செய்யாமல் இருப்பதற்கான உரிமை என்பன மறுக்கப்பட்டுள்ளன.

மகிந்தவின் இராணுவத்தளபதி இந்த வருட இறுதிக்குள் விடுதலைப் புலிகளை ஒழித்துவிடுவதாக சூழுரைத்துள்ளார். அவர் புதுவருட செய்தியாக "பயங்கரவாதம் சகல நிலைகளிலும் துடைத்தெறியப்படும;"என்று கூறியுள்ளார். வன்னிபகுதியில் யுத்தம் தொடர்கின்றது. இவர் கூறிய கூற்றுக்களை உண்மையாக்கும் விதத்தில் விடுதலைப்புலிகள் தமது இராணுவ நிலைகளை அகற்றி விட்டதற்கான எந்தவித அறிகுறியும் தென்படவில்லை. மறுபக்கத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளில் அரசாங்க அமைச்சர்கள், எதுவும் அறியாத அப்பாவி பொதுமக்கள் பஸ்களில் குண்டுகள் மூலம் கொல்லப்படுவது அதிகரித்து வருகின்றது. அரசாங்க ஊடகங்களும் முற்றுமுழுதான தனியார் ஊடகங்களும் மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குவதுடன் மக்களை தவறான வழியில் நடத்தியும் செல்கின்றன.

தற்போது நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அதிகரித்த பணவீக்க நிலையும் வாழ்க்கை செலவு உயர்வும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுற்கு அப்பாற்பட்டது என தொடர்ச்சியாக செய்திகள் வெளிவருகின்றன. வடக்குகிழக்கைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வெளியிடும் தகவல்கள் மகிந்த அரசாங்கத்திற்கு எதிரானதாகவே அமைந்துள்ளதால் அவர்களை பிழையான முறையில் கைதுசெய்து, தடுத்துவைத்து சித்திரவதை செய்வதன் மூலம் குற்றத்தை ஒப்புக்கொள்ள செய்கின்றனர். இதனால் பலர் உடல்ரீதியாக, தாக்கப்பட்டுள்ளதுடன், கொல்லப்பட்டும் உள்ளனர். இவை அதிஉயர் பாதுகாப்பு பிரதேசத்துக்குள்ளேயே இடம்பெற்றுள்ளன. இத்தகைய குற்றங்களை புரிந்தவர்களை பொலீசார் ஒருபோதும் கைது செய்யவில்லை. இந்த அரசாங்கம் 10 பில்லியன் ரூபாய்களை புதிதாக அச்சடித்துள்ளது. இதேநேரம் 100பில்லியன் டொலர்களை போரிற்காகவும், தேசிய பாதுகாப்பிற்காகவும் வட்டிக்கு எடுக்கும் நிலைக்கு சென்றுள்ளது. மேலும் 10 பில்லியன் ரூபாய் பல்வேறு திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நூற்றுக்கணக்கான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டும் இருக்கின்றனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவே நியமிக்கப்பட்டன. பாதுகாப்பு துறையில் அரசாங்க கட்டுப்பாடு இல்லாது காணப்படுகின்றது. இதேநேரம் ஐக்கிய தேசிய கட்சியும் ஜே.வி.பியும் ஊழல்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரஸ்த்தாபித்து வருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் கூட்டுத்தொழிற்சங்கங்களின் மேதினக் கூட்டம் மகிந்த அரசாங்கம் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் என நம்பிக்கை கொள்ளவில்லை. ஜனாதிபதி சுதந்திரமும், ஜனநாயகமும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும்நிலை ஏற்படும். ஒரேநாடு பிரிக்கமுடியாத இந்த நாட்டுக்குள் அதிகாரமும் பகிரப்பட வேண்டும். சுதந்திரமும் சமத்துவமும் எல்லோருக்கும் உறுதிப்படுத்தப்பட்டு இந்தவருட முடிவில் சந்தோசமாக இருக்கவழி செய்யப்படும். இதுவே அவரின் இம்முறை புதுவருட செய்தியாக வெளிவந்திருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் மேதினக்கூட்டத்தின் கருத்தாக மகிந்த அரசாங்கத்திற்கு இவ்வருட இறுதிக்குள் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் ஆற்றல் இல்லை யென்றெ கூறவேண்டும். விடுதலைப் புலிகள் வடபகுதியில் தற்போது தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் இராணுவ கட்டுப்பாட்டை இழந்தாலும் விடுதலைப்புலிகள் அரசபடைகள் மீது கரந்தடி தாக்கு தல்களை மேற்கொள்வார்கள். அவர்கள் சிறு சிறு ஆயுத குழுக்களாக நாட்டின் பலபாகங்களிலும் தாக்குதல்களை மேற்கொள்வார்கள். இவ்வருடத்தில் இந்நிலை அதிகரித்து காணப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் அரசாங்கத்தால் இந்த வருடத்தில் வாழ்க்கைச் செலவு உயர்வையும் பணவீக்கத்தையும் குறைக்கமுடியாது. அடுத்த வருடத்திலாவது நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக பில்லியன் கணக்கான ரூபாய்களை கொட்டி யுத்தத்தை தொடர்ந்தால் தேவையற்ற செலவீனங்கள் அதிகரிக்கும். மேலும் தேவையற்ற திட்டங்களால் ஊழல்களே அதிகரிக்கும். தற்போது உள்ள சூழ்நிலையை மாற்றுவதற்கு இந்நாட்டில் வாழும் உண்மையான அமைப்புகளின் தொழிலாளர்கள் முன்வரவேண்டும். விசேடமாக தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு இதற்காக தமது முழுப்பலத்தையும் வெளிக்கொணர வேண்டும்.

1.உணவு, எரிபொருள கள், மற்றும் ஏனைய பொருட்களுக்கான மானியத்தை அரசாங்கம் வழங்க வேண்டுமெனவும் அதேபோல் மின்சாரம், போக்குவரத்து செலவுகளுக்கு ஏனைய நாடுகளின் மேற்கொள்ளப்படுவது போல ஒழுங்குகள் செய்துகொடுக்க வேண்டும். போலீஸ், இராணுவத்திற்கு அதிகாரத்தை வழங்குவதும் அதன்மூலம் மக்களின் மனித உரிமைகள், குடியியல் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணியாகவும் அமைந்த அவசரகாலச சட்டத்தினை ரத்துச் செய்ய வேண்டும்.

2.வடக்குகிழக்கு ஆயுத மோதல்களில் ஈடுபட்டுவரும் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு செல்வதற்கு ஆதரவையும் வழங்க வேண்டும். சமாதானமானது சனநாயக ரீதியான அரசியல் தீர்வாக அமைய வேண்டும். இத்தீர்வானது இப்பகுதிகளில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களால் ஏற்றுக்கொள்ளகூடியதாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வரலாற்று ஆய்வினை வேண்டி நிற்கும் தேச வழமைச் சட்டம்.

பேராசிரியர். கார்த்திகேசு. சிவத்தம்பி.

இலங்கையின் நீதிமுறை இலங்கையிலுள்ள ஒவ்வொரு இன குழுமத்தினதும் பாரம்பரியங்களுக்கு இயையவே அமையப்பெற்றுள்ளது. கண்டிய வழக்கு முறைமை, முஸ்லீம்களுக்கான விவாக, சொத்துப் பாரம்பரிய முறைமைகள், இலங்கையின் வட பகுதிக்கான தேசவழமை, மட்டக்களப்புக்கான முக்குலச் சட்ட முறைமை என்ற பாரம்பரிய நியமங்கள் அவ்வவ்மக்கள் கூட்டத்திற்கான நீதி பரிபாலன நியமங்கள் ஆகியுள்ளன.

மட்டக்களப்பிற்கான முக்குவர் சட்டம் சாதிக்குழுமம் ஒன்றினது நியமங்களையே கூறுவதனால் அதனை அப்பிரதேச மக்கள் யாவருக்கும் பொதுவானதாக அதாவது அப்பிரதேசத்தில் வாழுகின்ற மற்றைய சாதிக் குழுமங்களுக்கும் - கொள்ளப்பட முடியாமற் போனமை ஆச்சரியத்தைத் தருவதன்று.

இவற்றைவிட இலங்கையின் வடமேற்கு கரையோரப்பகுதியில், குறிப்பாக புத்தளம், சிலாபம் போன்ற பாரம்பரிய முத்துக் குளிப்பு பிரதேசத்தில் வாழ்ந்து வந்த செட்டிச்சமூக மக்களுக்கான ஒரு தேசவழமைத் தொகுதியும் இருந்தது என்பது பேராசிரியர் சி.பத்மநாதன் இது பற்றி வெளியிட்ட அண்மைய நூலின் மூலம் தெரியவருகின்றது.

மேலே குறிப்பிட்ட பாரம்பரிய சமூக நியம தொகுதிகளினுள் தேசவழமை என இன்று குறிப்பிடப்படும் சட்டத் தொகுதியின் சமூகப் பின்புலம் பற்றிய சில வினாக்களை கிளப்புவது அவசியமாகின்றது.

தேசவழமைச் சட்டத்தின் சட்ட நீதியியல் (Jurisprudence) அடிப்படை யாது?

தேச வழமைச்சட்டத்தை ஒரு சட்டத் தொகுதியாக ஏற்றுக்கொள்ளும் நாம் அச்சட்டத்தொகுதியின் நீதி அம்சங்கள் சமூகப் பெறுமானங்கள் பற்றிய எடுகோள்கள் ஆகியன பற்றி சிந்தித்தல் அவசியம்.

இவ்வினாவினை இரண்டு நிலைப்பட முன்வைக்கலாம். ஒன்று இச்சட்டத்திற்கு தளமாக அமைந்துள்ள சமூக, தனிமனித நீதியுணர்வு யாது? அல்லது உணர்வுகள் எவை?

இரண்டாவது சமூக வரலாற்று ரீதியாக பார்க்கும்போது எத்தகையதொரு சமூக முறைமையின் சட்ட திட்டங்களாக இவை அமையலாம். அல்லது அமைந்தன. இந்த விடயம் பற்றிய சமூக நிலைப்பட்ட ஒரு புலமை சார்ந்த சொல்லாடல் நிட்சயமாக நடைபெறவில்லை.

நீதிமன்ற நிலையிலும் கூட முன்னாள் பிரதம நீதியரசர் சர்வானந்தா அவர்களது தேடியதேட்டம் சொத்துப்பற்றிய ஏறத்தாழ புதிய கருத்து நிர்ணயம் விரிவாக ஆராயப்படவில்லை.

இந்தியாவிலுள்ளது போல சமூகப் பொது விடயங்களை, மக்கட் பொது விடயங்களை நீதிமன்றில் வழக்காடு விடயமாக கொள்ளும் மரபு (Public Litigations) இங்கில்லாதது இதற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். (உண்மையில் அத்தீர்ப்பு விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.)

தேசவழமை பற்றிய உணர்வு முனைப்பு இப்பொழுது பெரிதும் கூடியுள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, பாரம்பரியமாக யாழ்ப்பாணச் சமூக ஒழுங்கமைப்பு என்று சொல்லப்படுவதில் காணபப்டும் நிலைகுலைவு. (இந்த நிலைகுலைவு சீர்குலைவா? இல்லையா என்பது பற்றியும் விவாதிக்க வேண்டும்.) இரண்டு, யுத்தகாலத்தில் வெளிநாடு சென்றவர்கள் போர் நிறுத்தச் சூழலில் தங்களது உடமைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சிகள். இவற்றைவிட மூன்றாவதான ஒரு முக்கியமான காரணமும் உள்ளது. அதாவது நவீன மயமாக்கம், சனநாயக மயமாக்கம், பால் நிலைச்சமத்துவம் என்பன காரணமாக தேசவழமைப்பு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சமூக, நிறுவன மாற்றங்கள் குறிப்பாக குடும்ப ஒழுங்கமைப்பு பற்றிய எடுகோள்கள் மாறிக் கொண்டு வருகின்றது.

மேற்கூறியவற்றுள் உண்மையில் பால்நிலைச் சமத்துவம் மிக முக்கியமாகியுள்ளது. தேசவழமைச் சட்டத்தினுள் வரும் பெண்களின் உரிமைகள் பற்றிய வினாக்கள் கிளம்பியுள்ளன.

இத்தகையதொரு சூழலில் இச்சட்டத்தொகுதியின் உருவாக்கம், அதன் வரலாறு பற்றிய சில முக்கியமான உண்மைகளைப் பதிவு செய்து கொள்ளல் அவசியம்.

அ .தாம் ஆளும் பிரதேசத்தில் நியாயமான நீதி முறைமையை நிலை நிறுத்த விரும்பிய ஒல்லாந்தர் கிளாக் ஐசாக் என்பவர் தலைமையில் பிரதேச உதவியாளர்கள் மூலமாக தொகுத்துக் கொண்டதே தேசவழமைத் தொகுதியாகும். இங்கு வழமை என்ற சொல்லை நோக்குக. அரசியற்சட்ட தொகுதியில் ( Convention) என்பதற்குரிய சட்டவலு வழமை என்ற சொல்லுக்கு உண்டு. ஏனெனில் வழமைகள் மீறப்படுவதில்லை. அவை மீறப்படவும் கூடாது.

ஆ. இத்தொகுதியின் பெயர் தேசவழமை என்றாலும் உண்மையில் இதில் தேசத்தின் வழமைகள் எல்லாமே தொகுக்கப்படவில்லை. வழக்காடு பொருளாக உள்ளவையும் அவற்றிற்கான தீர்வுகளுமே இத்தேசவழமைத் தொகுதியில் உள்ளன.

இ. சாதி முறைமையை அதிகாரப்படி நிலையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பின் வெளிப்பாடாக அமைந்த தேசவழமையை சாதி முறைமை சட்டபூர்வமாக ஒழித்தநிலையில் (1844) நடைமுறைப்படுத்த முடியாது. அப்படி நடைமுறைப்படுத்தும் பொழுது சாதி முறைமை சாராத தேச வழமைகளே நடைமுறைப்படுத்தலாம். இன்றைய நிலையில் உண்மையில் சாதி முறைமை சாராத விடயங்களே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஈ. இதனால் முன்னர் சிறைக்குடிகள் என்று சொல்லப்பட்ட அடிமைக்குடிமைகளுடன் தொடர்புபடாத விடயங்களே பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிறைக்குடிகள் பற்றிய குறிப்புகள் பற்றிச் சிந்திக்கும்போது ஒரு முக்கியமான விடயத்தை தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதாவது இப்பொழுதுள்ள தேசவழமைச் சட்டத் தொகுதியினுள் இலங்கையின் வடபகுதியில் நிலவிய சாதியமைப்பு முற்றுமுழுதாக எழுதப்படவில்லை.. சிறைக்குடிகள் பற்றி மாத்திரம் எழுதப்படுவதால் எல்லாச் சாதியினர் பற்றியும் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிட முடியாது. உண்மையில் இந்த விடயத்தைச் சமூக மானுடவியல் கண்ணோட்டத்தில் நோக்கல் வேண்டும். அத்தகைய ஆய்வு எதுவுமே இதுவரை செயற்படவில்லை. சொத்துரிமை பற்றிப் பேசும் போது எந்தவொரு சாதிபற்றியும் குறிப்பிட்டுப் பேசவில்லை. இது முக்கியமானது. அதாவது முதுசம், சீதனம், தேடியதேட்டம் என்பன எல்லாச் சாதியினருக்கும் வரும். அது மாத்திரமல்ல ஒற்றி, ஈடு போன்ற மற்றைய சொத்து முறைமைகளுக்கும் சாதிமுறைமை இல்லை.


இதனாலேயே இன்று தேசவழமைச்சட்டம் அடிப்படையில் சொத்துரிமை பற்றிய சட்டமாக உள்ளது.

உ. அச்சொத்துரிமை முறைமையினுள்ளும் பல மாறுதல்கள் ஏற்படுவதற்கான சூழல்கள் இப்பொழுது தோன்றியுள்ளன. இச்சொத்துரிமை என்பது வெறுமனே வீட்டுக் காணிகளுக்கு மாத்திரம் உரியவையல்ல. பயர்ச்செய்கை நிலங்களும் இதற்குள் வரும். இப்பயிர்ச் செய்கையினுள் இரண்டு விடயம் முக்கியமாகின்றது.

1. புவியியற் செய்கை நடைமுறை அம்சங்கள்.

2. இந்த பயிர்ச்செய்கை முறைமையை உள்ளடக்கி நிற்கும் உற்பத்தி முறைமை.

ஈடு, ஒற்றி என்பன நிலப்பிரபுத்துவ ( Feudal) முறைமைக்கு உரியனவே. அத்துடன் ஒரு காணியை பிறத்தியாருக்கு விற்பதற்கு முன் அதனை வாங்கிக் கொள்வதற்கு விற்பவரைச் சார்ந்த சில உரிமையாளர்களுக்கு முதலிடமுண்டு. ஆனால் தேசவழமையில் இன்று பிரச்சினைக்குரிய விடயமாகியுள்ளது பெண்களின் உரிமைகள் பற்றிய விடயங்களே. தேசவழமை சொத்தை 3 வகையாக பிரிக்கும் முதுசம், சீதனம், தேடியதேட்டம். முதுசம் என்பது ஆண் தன்வழியால் கொண்டுவருவது (முதுசொம்) சீதனம் என்பது பெண் கொண்டுவருவது ( அதாவது திருமணத்தின் பொழுது அவளுக்கு



அவள் பகுதியால் கொடுக்கப்படுவது.) தேடியதேட்டம் என்பது கணவன் மனைவி குடும்பமாக வாழ்ந்த பொழுது தேடிக்கொண்ட தேட்டம்.

இவ்வாறு நோக்கும் பொழுதுதான் தேசவழமைச் சொத்தின் முக்கிய, அச்சாணியான அம்சம் புலப்படுகின்றது. அதாவது சொத்து என்பது குடும்ப நிலைப்பட உள்ளதே. (Anex property family bases)

சொத்து பற்றி பெண்களுக்கு சில உரிமை வரையறைகள் உள்ளன. அதாவது மனைவி எந்தவொரு சொத்தைப் பெறுவதற்கும், விடுவதற்கும் கணவன் இயைபு வேண்டும். இதனை ஒரு அங்கீகாரத் தேவை என்று கொள்வதா? கணவருக்குத் தெரிய அச்சொத்து பரிமாற்றம் நடைபெற்றதா? என்பதே கேள்வி. சம்பந்தப்பட்ட உறுதியில் கணவன் என்றுமே இதனை நான் அங்கீகரிக்கின்றேன் என்று கையெழுத்திடுவதில்லை. அவரின் கையெழுத்தின் சட்டவலு யாது என்பது முக்கிய வினா.

அவருக்கு தெரிய நடந்தது என்பது தான் பதில் என்று கொள்ள வேண்டும். குடும்பத்தில் இருக்கும் வரை அவருக்கு தெரியாமல் மனைவி அதனைப் பெறவோ கைவிடவோ கூடாது.

பெண்ணுடைய உரிமையை விளக்கிக்கொள்ள இன்னொரு நிலையும் உண்டு. அதனை சற்றுப் பார்ப்போம். கணவன் - மனைவியாக இருக்கின்ற பொழுதான் இந்த கட்டுப்பாடே தவிர அவர் அந்த கணவனை விட்டு விலகியபின் வேறு விதம் செய்யத் தடை கிடையாது. கணவனும் மனைவியும் முன்னர் பல தாரங்களையுடையவர்களாக இருக்கலாம் என்பது தேசவழமை மூலம் தெரியவருகின்றது.

எனவே அடிப்படையில் பெண் என்ற தனி நபர் மீது விதிக்கப்படும் ஒரு தடையாக தேசவழமைச் சட்டத்தைக் கருதலாமா என்பது சிந்திக்கதக்கது.

தேசவழமை பற்றிய ஒரு அகண்ட திறந்த விவாதம் வேண்டும். சட்ட வல்லுனர்களும் சமூக அறிவியலாளர்களும் ஒன்று சேர்ந்து இம்முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும்.

## வடக்கு-கிழக்கு- தென் இலங்கை முஸ்லிம்களினது


4ம் பக்கத் தொடர்ச்சி

மக்களையும் திருப்திப்படுத்தவே முடியாது என்பதை உணர்தல் வேண்டும். வட-கிழக்கு முஸ்லிம்கள் முஸ்லிம் மாகாண கோரிக்கையை முன்வைத்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட நிலையில், தென்னிலங்கையில் இக்கோரிக்கைக்கு கிடைத்த பலத்த எதிர்ப்பும் தென்னிலங்கை அரசியல் தலைமையின் கிண்டலும் கேலியும் மிக முக்கியமானது. இன்றுவரை வட-கிழக்கு முஸ்லிம்களின் கோரிக்கை நியாயமானதுதான் என தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலிருந்து, முஸ்லிம் அரசியல் தலைமைகளிலிடமிருந்து ஒரு குரல் தானும் எழவில்லை. இக்கோரிக்கையை அவர்கள் ஆதரிக்க முடியாது என்பதன் உண்மை தான் வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியலிலிருந்து வேறுபாடானது என்பதை நிரூபிப்பதற்கு தக்க சான்றாகும்.

தென்னிலங்கை முஸ்லிம்களின் வர்த்தக நலன்சார் நன்மைகளும் அம்மக்களின் பலமில்லாது, தொடர்ச்சியற்ற புவியல், மக்கள் சனத்தொகை அமையும், சிங்களமக்களுடனான இணைந்த வாழ்வும் அரசியல் நலன்களும் இந்த முடிவுக்கு காரணமாக இருக்கின்றன. ஆகவே வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமை வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தனது அரசியலை வட-கிழக்கிற்குள், முஸ்லிம் தேசத்திற்குள் மாத்திரமே முன்னெடுப்பதன் மூலம் தங்களுடைய கோரிக்கைகளை வென்றெடுப்பதுடன், இலங்கையில் வாழும் தென்னிலங்கை முஸ்லிம்களுடன் தொடர்ச்சியான இனத்துவ உறவையும் அவர்களுடைய இருப்பையும் உத்தரவாதப்படுத்த முடியும். இதுவே யதார்த்தமான தென்னிலங்கை – வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியலாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் பசுமைத்தாயகம் சுற்றுப்புறச்சூழல் எனும் சஞ்சிகையில் இர. அருள் இணை ஆசிரியரால் எழுதப்பட்ட இக்கட்டுரை புவி வெப்பமடைவதைத் தடுக்க வழிவகைகளைப் பற்றி ஆராயும் ஆவணமாகும். 2007 திசம்பர் மாதம் இந்தோனிசியாவில் உலகச் சுற்றுப்புறச் சூழலியலாளர்களால் உருவாக்கப்பட்ட விடயதானங்கள் தற்போதைய சூழ்நிலையில் மிகப்பொருத்தமான கவன ஈர்ப்பாக இருக்கும் என்ற அவசியம் கருதி இதனை நாம் தொகுத்துத் தருகின்றோம். அண்மைக்காலமாக புவி வெப்பமடைதல், திடீர் மழை – வெள்ளம், புழுக்கம், அனல்காற்று, வரட்சி என்பன நாம் எதிர்கொள்ளும் பாரிய இயற்கைச் பிரச்சனைகளாக விளங்குவதால் அது பற்றி பேசும் இக்கட்டுரை வாசகர்களுக்கு பயனாகவிருக்கும் என நம்புகின்றோம்.*



# உலகம் எரிகின்றது ! உலக அழிவைத் தடுத்து நிறுத்த ஓர் முயற்சி !

மனித குலம் தனது வரலாற்றில் எப்பொழுதுமே சந்தித்திராத பேராபத்தினை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. புவி வெப்ப மடைந்து வருவதன் காரணமாக காலநிலை மாற்றத்தினால் தான் இந்த மாபெரும் ஆபத்து இயற்கை அழிவு மூலமாக உருவாகியிருக் கின்றது. எதிர்வரும் 10 ஆண்டு களுக்குள், உலகநாடுகள் அனைத்தும், உலக மக்கள் அனைவரும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு புவி வெப்பமடைதலைத் தடுக்கத் தவறினால் இவ்பூமி அழிவதைத் தடுக்க முடியாது போகலாம் என்கின்றது அறிவியல் உலகம்.

தொழில்புரட்சிக்குப்பின் மனிதர்கள் புதைபடிவ எரிபொருட்களை (நிலக்கரி,பெற்றோல், வாயு) பயன்படுத்தத் தொடங்கினர். 1750ம் ஆண்டுகளுக்கு முன்பு, வளிமண்டலத்தில் 280 ppm (ppk பத்துலட்சத்தில் ஒரு பகுதி) ஆக இருந்த கரியமில வாயுவின் அடர்த்தி 2005ஆம் ஆண்டில் 379 ppm ஆக அதிகரித்து விட்டது. கரியமிலவாயுடன், மீத்தேன், நைட்ரஸ் ஒக்சைட்டு உள்ளிட்ட அனைத்து பசுமையில்ல வாயுவுகளின் அடர்த்தி 430ppm ஆகும். எரிபொருட்களின் பாவனையும் போக்குவரத்து வசதிகளும்தான் இச்சிக்கலுக்கு முதன்மையான காரணங்களாகும். மனிதர்களால் இயற்கை சூழலமைப்பில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றமே, இந்த காலநிலை மாற்றத்திற்குக் காரணம் எனத் தெரியவந்திருக் கின்றது.

சூரியனிடமிருந்து பூமிக்கு வரும் வெப்பசக்தியை வளிமண்டலத்தில் அதிகமாகிவரும் பசுமையில்ல வாயுக்கள் அளவுக்கதிகமாக பிடித்து வைத்துக் கொள்வதால் புவி வெப்பமடைகின்றது என கண்டெறியப்பட்டுள்ளது.கரியமில வாயு உள்ளிட்ட இவ்வாயுக்களின் அளவு அதிகரிப்பிற்கு ஏற்ப புவியின் மேற்பரப்பு வெப்பநிலையும் அதிகமாகி வருகின்றது. சுமார் 200 ஆண்டுகளாகவே வெப்பநிலை அதிகரித்து வந்திருப்பதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். 1906ம் - 2005 ஆண்டுவரையிலான 100ஆண்டுகளில் புவியின் மேற்பரப்பு சராசரி வெப்பநிலையில் 0.74° செண்டிகிரேட் வெப்பம் அதிகரித்துள்ளது. அது நாளுக்கு நான் அதிகரித்த வண்ணம் இருப்பது தெரிவந்திருக் கின்றது.

உலகின் வெப்ப நிலையை அளவிடத் தொடங்கிய 1850ம் ஆண்டுகளுக்குப் பின்னர், வரலாற்றிலேயே மிக வெப்பமான 12 ஆண்டுகளைப் பட்டியலிட்ட போது அதில் 1995-2006க்கும் இடைப்பட்ட 11 ஆண்டுகள் இடம்பெற்று, ஒவ்வொரு ஆண்டையும், அதற்கு முந் தய ஆண்டுகளைவிட அதிக வெப்பமான ஆண்டாக மாறிவருவது தெரிய வந்திருக்கின்றது.

**புவி வெப்பமடைவதன் விளைவுகள்**

காலநிலை மாற்றத்தால் இயற்கைச் சூழலில் பலவிதமான மாற்றங்கள் நேர்ந்து வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மனித வாழ்க்கைக்கும், புவியியல் உயிரின நீடிப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. நீர்வளம், உயிர்ச் சூழல் அமைப்பு, உணவு, கடலோரப்பகுதிகள், நல் வாழ்வு என அனைத்தையும் பாதிப்பனவாக இம்மாற்றங்கள் உள்ளன.

**கடல் மட்டம் உயர்தல்**

புவி வெப்பமடைவதால் கடல் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. 1961ஆம்ஆண்டு முதல் ஆண்டுக்கு 1.8 மில்லி மீட்டர் அளவிலும், 1993ஆம்ஆண்டு முதல் ஆண்டுக்கு 3.1 மில்லி மீட்டர் அளவிலும் கடல் மட்டம் அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. கடலின் வெப்பநிலை அதிகரித்தல், பனிமலைகள் உருகுதல், துருவப் பகுதியும் பனிப்பாறைகளும் அழிதல் போன்ற காரண்ங்க்ளால் கடல் மட்டம் உயர்ந்து விடுகின்றன. இதனால், கடலோரப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

**பனிப்பாறை உருகுதல்**

துருவப்பகுதிகளிலும், மலைகளிலும் உள்ள பனிப்பகுதிகள் குறைந்து வருகின்றன. எடுத்துக் காட்டாக ஆர்க்டிக் பகுதி பனிப்பரப்பு பத்தாண்டுக்கு 2.7விழுக்காடு அளவு குறைந்து வருகிறது. இந்தியாவின் இமயமலை,கென்யாவின் கிளிமஞ்சாரோ போன்ற மலைப்பகுதிகளில் பனிப்பரப்பு குறைந்து வருகிறது. இதனால் அடுத்த சில ஆண்டுகளுக்கு மாபெரும் வெள்ளம், அதன்பிறகு ஆறுகள் வற்றிப்போகும் ஆபத்து நேர்ந்துள்ளது.

**மழைப் பொழிவில் மாற்றம்**

குறுகிய காலத்தில் பலத்த மழை, வழக்கமான காலத்தில் மழை பொழியாத நிலை போன்ற மாற்றங்கள் நேர்ந்து வருகின்றன. 1900-2005ஆம் ஆண்டுகளுக்கு இடையே வட மற்றும் தென் அமெரிக்கா, வட-ஐரோப்பா, வடக்கு மற்றும் மத்திய ஆசியப் பகுதிகளில மழையளவு அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கு, சகாரா, தெற்கு ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியப் பகுதிகளில் மழை அளவு குறைந்துள்ளது.

**வறட்சி**

1970ஆம் ஆண்டுக்குப் பிறகு உலகமெங்கும் வறட்சி அதிகரித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் உலகில் குளிர்காலம் குறைந்து வெயிற்காலம் அதிகமாகி உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளிலும் காடு கள் அடிக்கடி தீயால் பாதிக்கப் படுவது அதிகரித்துள்ளது.

**புயல்** வங்கக்கடல், வடஅட்லாண்டிக், வட பசிபிக் போன்ற வெப்ப மண்டல கடற்பகுதிகளில் வீசும் புயற்காற்றின் எண்ணிக் கையும், அவை வீசும் வேகமும் 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகமாகியுள்ளது.

**நீர்வளப் பாதிப்பு**

ஆறுகள்,ஏரிகள் போன்றவற்றின் நீர் சுழற்சியும் பாதிக்கப் பட்டுள்ளது. பெருமழை, பனிமலை உருகுதல் போன்ற காரணங்களால் வெள்ளப் பெருக்கு அதிகரித்துள்ளது. வெள்ளத்தால் நீர் வளம் வேகமாக கடலுக்கு ஓடிவிடுவதாலும்,வறட்சியினாலும் நிலத்தடி நீர்வளமும் தொடர்ந்து கீழிறங்கி செல்கிறது.

**உயிர்ச்சூழல் பாதிப்பு**

தாவரங்கள், விலங்குகளின் வாழ்விடம் மாறிவருகிறது. குளிர்பகுதிகளில் காணக்கிடைக்காத வெப்ப மண்டலத் தாவரங்களும், விலங்குகளும் இப்போது காணப்படுகிறது. கடல் பகுதிகளிலும் இதே போன்ற மாற்றம் நிகழ்ந்து வருகிறது.

**விவசாயத்தில் வீழ்ச்சி**

விவசாயத்தில் காலம் காலமாக நீடித்து வந்த பருவகால நம்பிக்கைகள் பொய்த்து வருகின்றன. எதிர்பாராத பெருமழை, வெள்ளம், வறட்சி, நீர்வள பாதிப்பு, எதிர்பாராதப் பூச்சித்தாக்குதல்கள் போன்றவற்றால் விவசாயம் வீழ்ந்து வருகிறது.

**நோய்கள்**

மனிதர்களும் விலங்குகளும் எதிர்பாராத நோய்களால் பாதிக்கப்படுவது இப்போது அதிகமாகி வருகிறது. சிக்குன் குனியா, சார்ஸ் போன்றப் புதிய நோய்கள் தாக்குவதற்கும்,ஏற்கெனவே ஒழிக்கப்பட்டதாக நம்பப்படும் மலேரியா போன்ற நோய்கள் மீளவும் உருவெடுக் கவும் புவி வெப்பமடைதல் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என நம்பப்படுகின்றது.

இவ்வாறாக எண்ணற்ற பாதிப்புகளுக்கு புவிவெப்பமடைதல் வழிவகுப்பதாக உலக அறிவியலாளர்கள் அடங்கிய, ஐக்கிய நாடுகள்அவையின் ஓர் அங்கமான காலநிலை மாற்ற பன்னாட்டு அரசுக்குழு (IPCC) நவம்பர் 2007இல் வெளியிட்ட 4ஆவதுஅறிக்கையின் ‘கொள்கை வகுப்பாளர்களுக்கான’ சுருக்கத்தில் தெரிவித்துள்ளது. (இந்திய விஞ்ஞானி ராஜேந்திர குமார் பச்செளரி தலைமையிலான இக்குழுவிற்கு 2007ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது)

ஆக, பவி வெப்பமடைவதால் காலநிலை மாற்றமடைந்துள்ளது. பெரும்மழை, அதிவேகப் புயல், மாபெரும் வெள்ளம், அதிகரிக்கும் நோய்கள், கடும் வறட்சி என எல்லாமும் வரலாறு காணாத அளவு அதிகரித்துவிட்டன. இந்நிலை தொடருமானால், இப்பூவுலகம் மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக மாறிப்போகும் காலம் விரைவில் வரக்கூடும் என அறிவியலாளர்கள் எச்சரிக்கின் றனர்! அதாவது நமது பிள்ளை களோ, அவர்களது சந்ததியினரோ வாழ முடியாத இடமாக பூமி மாறிப்போகக் கூடும்.

**புவி வெப்பமடைய என்ன காரணம்?**

முதலாளித்துவசுரண்டல் முறைமைக்கும்,உயர்குல் மனிதர்களின் நவநஞ்சக வாழ்க்கை முறைகளுக்கு மாத்திரமல்ல ஆதிக்க நலன்களுக்காகவுமே இந்த புவி வெப்பமடையக் காரணமாகும். அதிலும் குறிப்பாக, பேராசையால் உதாரித்தனமான வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்ததே இன்றைய ஆபத்திற்கான அடிப்படைக்காரணம். உண்மையில், இன்றைய அமெரிக்காவின் வாழ்க்கை முறையை உலகில் ஒவ்வொரு மனிதரும் பின்பற்ற ஆசைப்பட்டால் அதற்கு ஒன்பது பூமிகள் தேவைப்படும் என்கிறது ஐ.நா.வின் மாநில மேம்பாட்டு அறிக்கை.

2004ஆம் ஆண்டில் வளிமண்டலத்தில் கலந்த பசுமையில்ல வாயுகள் முறையே –மின்சாரம் மற்றும் எரிசக்தி வழங்கல்25.9% போக்குவரத்து 13.1%, குடியிருப்புகள் மற்றும் வர்த்தகக் கட்டடங்கள் 7.9%.தொழிற்சாலை கள் 19.4%, விவசாயம், 13.5%, காடுகள் 17.4%, கழிவுநீர் மற்றும் குப்பை 2.8% என்ற அளவுகளில் வெளியாகியுள்ளன.

**யார் காரணம்?**

வளிமண்டலத்தில் பசுமையில்லா வாயுக்கள் அளவுக்கதிகமாக கலப்பதற்கோ அல்லது கடந்த 200 ஆண்டுகளாக கலந்ததற்கோ ஏழைநாடுகள் காரணமல்ல. உலகின் ஏழைகளும் காரண மல்ல. வசதிபடைத்தோரும் வளர்ந்த பணக்கார நாடுகளுமே இந்த நிலைமைக்கு முழுக் காரணமாகும்.

1750-2005ஆம் ஆண்டுகளுக்கு இடையேயான காலக் கட்டத்தில் வளிமண்டல கரியமில வாயுவின் அடர்த்தியானது. 280ppm என்ற நிலையில் இருந்து 379ppm ஆக அதிகரிப்பதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த பண்கார நாடுகள்தான் முழுமையானக் காரணம் ஆகும்.இன்றைக்கும் அந்த நாடுகள்தான் மிக அதிக பசுமையில்ல வாயுவை வெளிவிட்டு வருகின்றன.

வளி மண்டலத்தில் அளவுக்கதிகமாகக் கலந்துள்ளது மொத்த கரியமில வாயுவில் ஒவ்வொரு 10 டன்னிலும் 7டன் வளர்ந்த நாடுகளின் பங்காகும். இதனை ஒவ்வெர்ரு தனிநபருக்கும் கணக்கிட்டால் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் பங்கு ஒவ்வொருவருக்கும் தலா 1100 டன்னாகும். ஆனால் சீனாவின் பங்கு 66 டன் மட்டும்தான்.

2004ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து வெளியான மொத்த கரியமில வாயு 6,048 மில்லியன் டன்.இது உலகின் மொத்த கரியமில வாயு வெளியேற்றத்தில் 20.9%, ஆனால், அமெரிக்காவின் மக்கள் தொகையே 4.6% மட்டுமே. அதாவது, ஒவ்வொரு அமெரிக்கருக்கம் சராசரியாக தலா 20.6 டன் கரியமில வாயுவை வெளியேற்றக் காரணமாகியுள்ளனர்.

**பாதிப்பு யாருக்கு?**

புவி வெப்பமடைவதின் விளைவாக வெள்ளம், புயல், வறட்சி,குளிர்,காட்டுத்தீ போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அவற்றின் அளவும், வேகமும், தாக்கமும் ‘வரலாறு காணாததாக’ இருப்பது வழக்கமாகி விட்டது. 2000-2004 இடையேயான காலக்கட்டத்தில் உலகில் ஆண்டுக்கு 326 இயற்கைப் பேரழிகள் நிகழ்ந் துள்ளதாகக் கணக்கிடப்பட் டுள்ளது. இந்த அளவானது 1980ம் ஆண்டில் நடந்த இயற்கைப் பேரழிவுகளைப்போல இரு மடங்காகும்.வேகமாக அதிகரித்த வரும் இத்தகைய இயற்கைச் சீற்றங்களால் மிக அதிகமர்கப் பாதிக்கப்படுவது ஏழைநாடுகள்

புவிவெப்பமடையக் காரணமான வளர்ந்த பணக்கார நாட்டினர் தமது வளர்ச்சியின் காரணமாக இயற்கைச் சீற்றங்களை சமாளிக்கும் அளவிற்கு தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்வாக அமைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் ஏழை

*தொடர்ச்சி 19 பக்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடுத்த தலைமுறை

அரசி

'அப்பா, எழும்புங்கோவன் பிள்ளைக்கு நேரஞ்செண்டு போச்சு'' இதுக்குத்தான் இரவிரவா கொம்பியூட்டருக்கு முன்னால் கொட்டக் கொட்ட முழிக்காதையுங்கோ எண்டு சொன்னனான். இப்ப எழுப்பவும் எழும்புறி யளில்லை.''

வீட்டுக்குள் போட்டிருந்த வெப்ப மாக்கியையும் மீறி பனிக்காலக் காலைக் குளிர் உடலினைச் சில்லிட வைத்தது. இறுக்கப் போர்த்திருந்த போர்வையைப் பிடித்திழுத்தவளின் மேல் கோபமாய் வந்தது அவனுக்கு.

'காலங்காலத்தால உன்ர சுப்ரபாதத்தைத் தொடங்காத பொறு வாறன்''

எரிச்சலுடன் எழுந்து கண்ணைக் கசக்கியபடி கையில் கட்டியிருந்த டிஜிட்டல் கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் ஐந்து மணி யன்னல் சீலையை விலக்கி வெளியே எட்டிப்பார்த்தான். அந்த அடுக்குமாடி அறையின் யன்னல் வழியே மொன்ரியல் நகரின் பிரதான பாதைகளில் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பறந்து கொண்டிருந்த வாகன வரிசைகள் அழகாகத் தெரிந்தன. கோப்பையை நீட்டியவளின் கையிலிருந்து அதை வாங்கி நிதானமாக உள்ளிழுத்தான்.

'எண்டாலும் ஊரில பிளேன்ரீ குடிச்சமாதிரி வராது'' பெருமூச்சுடன் கூறியபடி இன்னொரு வாயை உள்ளிழுத்தான்.

'ஓமோம், வந்து .மூண்டு வருஷமாச்சு, வீடு வாங்குவம், பிள்ளைய நல்லாப் படிப்பிப்பம், அந்தக் கதையில்லை. இன்னும் ஊர்க்கதைதான்.''

அவளும் பதிலுக்கு ஒரு பெருமூச்சு விட்டாள்.

'நிதூஷா வெளிக்கிட்டாளே?'' கட்டிலில் இருந்து எழுந்தபடி மனைவியின் கதைப்போக்கைத் திசை திருப்பினான்.

'ஓமோம் அவள் அப்பவே வெளிக்கிட்டு நிக்கிறாள். கெதியா வாங்கோ.''

குளியலறைக்குள் சென்று சூடான நீரையும் குளிர் நீரையும் கலந்து திறந்து விட்டு ஷவரின் கீழ் நின்றான். ஆமாம், அவள் சொல்வதும் சரிதான். என்னதான் நடந்தாலும் இன்னும் அவன் மனது சின்ன வயதில் வாழ்ந்து வளர்ந்த ஊரை விட்டு விடுபடவில்லை. காலைக் குளிருடன் கிணற்று நீரை அள்ளி வாரித் தலையில் இறைத்தால் என்னமாய் இருக்கும்! இங்கு வந்ததிலிருந்து வெந்நீர் தான். உடலுக்கு எல்லாம் பழகி விட்டது. ஆனால் மனதுக்கு? குளித்து விட்டு வந்தவன் உடைகளையும் மாற்றி விட்டு வெளியே வந்தான்.'அப்பா, குட்மோர்னிங்'' என்று குதூகலித்துக்கத்திய மகளை அணைத்துக் கொண்டான்.

'நிதுக்குட்டி இன்னும் ஜக்கற் போடேல்லயா? வெளியில் குளிருமே?'' என்றபடி அவளை விட பெரிதாயிருந்த குளிர் கால மேலாடையை போட்டு விட்டான் பின்னர் துப்பட்டாவை எடுத்து கழுத்தினுள் குளிர் போகாதவாறு கட்டிவிட்டான்.

'சிறிலங்காவில் குளிராதா அப்பா?'' சின்ன மகளின் கேள்வியைக் கேட்டு சிரித்தான்.

'இல்லை அங்க ஸ்நோ எல்லாம் இல்லை. மழைக்காலம் மட்டும் தான்''

'அப்ப ஏன் நாங்க இங்க வந்தனாங்க?''

'அங்க சண்டை'' என்றபடி தனது கோட்டையும் போட்டுக்கொண்டு'கலா! போயிட்டு வாறம;'' என்றபடி மகளையும் தூக்கிக் கொண்டு வெளியேறினான்.

சற்று நேரம் ஏதும் பேசாமல் வந்த நிதூஷா திடீரென 'ஏனப்பா சண்டை?'' என்று கேட்டாள். அவன் என்ன சொல்வதென யோசிப்பதற்குள் மீண்டும் 'என்ன சண்டையப்பா?''

'நீங்க ஸ்கூல்ல பிள்ளையோட பிடிக்கிறமாதிரி சண்டைதான்''

'சொக்கிளேற்றுக்கா அப்பா?''

'இல்ல''

'அப்ப?''

'தமிழீழத்திற்கு''

'அப்படியெண்டா?''

'அது இப்ப நிதுவுக்கு விளங்காது. இப்ப் கேள்வி கேக்கக் கூடாது. நாங்க முதல் டக்ஸியொன்டு பிடிப்பம் ''

குளிரில் நடந்து போவது சாத்தியமில்லையென்று வாசலால் வெளிப்பட்டவும் அவன் புரிந்து கொண்டான். பனிவாரும் வண்டி வீதியின் இரு கரைகளிலும் ஓரடி உயரத்திற்கு பனியை இறைத்துக்கொண்டே சென்றி கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் சப்பாத்தினுள் பனி புகுந்து கால் விறைக்கத் தொடங்கியது. அவசரமாக ஒரு டக்சியை வழிமறித்து ஏறினான். வாகனத்தினுள் வெப்பக்காற்று முகத்தில்பட மீண்டும் உயிர் வந்தது போலிருந்தது. பாவம் பிள்ளை! குனிந்து குளிர்ந்து போயிருந்த அவளது கன்னங்களைத் தடவிக் கொடுத்தான்.

'அப்ப நான் ஸ்கூலுக்கு போறன் தானே அப்பா?''

'என்ன?'' அவள் கேட்ட கேள்வியின் அர்த்தம் புரியவில்லை அவனுக்கு

'அப்ப ஏன் நீங்க சிறிலங்காவை விட்டிட்டு வந்தனீங்க?''

'அது பெரிய சண்டை, இருக்கேலாது''

'அப்ப அம்மம்மாவும் தாத்தாவும் இருக்கினம்?''

'அவையளுக்கு வர விருப்பமில்லை''

'ஏன்?''

'அவையளுக்கு ஊர்தான் விருப்பம்?''

'அப்ப உங்களுக்கு விருப்பமில்லையா? அப்பா?''

'எனக்கும் விருப்பமில்லைத்தான், நானும் அம்மாவும் நிதூக்குட்டிக்காகத்தான் தான் இங்க வந்தனாங்க''

'நீங்களும் சண்டை பிடிச்சனீங்களா அப்பா?'' சற்றுப் பொறுத்துக் கேட்டாள். அவன் சிரித்தான்.

'இல்லை''அப்ப யார் பிடிச்சது? '''புலியும் ஆமியும்''

'புலியெண்டா என்னப்பா?''

'எல்லா நேரமும் இப்பிடிக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது அப்பாவுக்கு கோவம் வரும்.''

டக்ஸி ஓட்டுனரின் கணக்கை பத்து டொலர் கொடுத்து தீர்த்து விட்டு அவளை பாடசாலையில் கொண்டு போய் விட்டான்.

'அப்பா பின்னேரம் வருவன். தொப்பி கிளவுஸ் எல்லாம் கீழ போட்டிட்டு துலைஞ்சு போச்செண்டு சொல்லக் கூடாதென்ன? கவனமா வைச்சிருக்க வேணும்.''

குளிர் காரணமாக அவளது கண்ணால் வழிந்த நீரைத் துடைத்து விட்டு கன்னத்தில் முத்தமிட்டான். கன்னம் சில்லென்றிருந்தது.

'அப்பா போட்டு வாறன் என்ன?''

தூரத்தில் வருமட்டும் கையசைத்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்து பெருமூச்சொன்று விட்டான். அவன் கண்கள் கண்ணீரினால் நிறைந்தன. இது குளிர் காரணமாக வழியும் கண்ணீரல்ல! மனதின் கனம் காரணமாக வழியும் நீர்!

## சிங்கள மயமாக்கலுக்கு.... 3ம் பக்கத் தொடர்ச்சி

பிள்ளையான் கல்வி அமைச்சினைத் தனக்குத் தரும்படிக் கேட்டும் கூட ஜனாதிபதி வழங்கவில்லை. பின்னர் ஹிஸ்புல்லா சமரசத்திற்கு வந்து கல்வி அமைச்சினைத் தனக்குத் தரும்படிக் கேட்டபோது அது ஏற்கனவே இன்னொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

எனவே அமைச்சரவைகளை உருவாக்கும் போதே பேரினவாத விஸ்தரிப்பு அடையாளப் படுத்தக்கூடிய வகையில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது. இவ்விஸ்தரிப்பு முயற்சிகள் எதிர்வரும் காலங் களிலும் தொடர்ந்த வண்ணமே இருக்கும். ஏற்கனவே பொத்துவில், அட்டாளைச்சேனை காணிப் பிரச்சினைகளுக்கு அப்பால் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கட்டப்படும் வீடுகள் தொடர்பாகவும் ஹெலஉறுமய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. இதைவிட சேருவிலப் பிரதேசத் தினை மூதூர் வரை விஸ்தரிக்கும் நோக்கமும் பேரினவாதத்திற்கு உண்டு. கிழக்கில் படையினரின் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருவதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வேறு கூறியிருக்கின்றார்.

எனவே சிங்களமயமாக் கல் செயற்பாடு கிழக்கில் தொடரத்தான் போகின்றது. இதனைத் தடுக்கும் பலமும் பிள்ளையானிடம் இல்லை. கல்வி அமைச்சினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பேரம்பேசும் ஆற்றலே அவருக்கு இல்லாத போது சிங்களமயமாக்கல் நடவடிக்கைகளைத் தடுக்கும் ஆற்றல் அவருக்கு இருக்கும் எனக்கூறமுடியாது. புலிகள் கிழக்கில் இருக்கும் வரை சிங்களமயமாக்கல் ஒரு மட்டத்திற்கு மேல் வளரமுடிய வில்லை. தமிழிழப் விடுதலைப் புலிகள் அதனைத் தடுக்கும் ஒரு கவசமாக விளங்கியிருந்தனர். புலிகள் விலகிய பின்னர் பேரினவாதிகள் நுழையக் கூடியதாக இருந்தது. தற்போது மாகாணசபை பேரின வாதிகளின் செயற்பாட்டினை மேலும் இலகு வாக்கியுள்ளது. வட-கிழக்குப் பிரிப்பு கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலத்தையும் பலவீனமாக்கியுள்ளது. மாகாண நிருவாகத்தினை கைப்பற்று வதற்குகூட கொழும்பில் தங்கிருக்கவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முஸ்லீம்தரப்பு பிள்ளையான் நிருவாகத்தை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. பேரினவாத சக்திகள் இந்தத்தடவை சிங்கள மயமாக கலுக்கு முஸ்லீம் பிரதேசங்களைத் தெரிவு செய்திருப்பதால் அது தொடர்பான முஸ்லீம் மக்களின் ஆத்திரம் பிள்ளையான் நிர்வாகம் மீதே திரும்பப்பார்க்கும். இராணுவத் தரப்பும் கிழக்கில் ஒரு அரசியல் நிருவாகத்தினை வளரவிடப் போவதில்லை. போர்ச் சூழல் தொடர்ந்தும் இருப்பதால் உயர் பாதுகாப்பு வலயம் உட்பட தமது கெடுபிடிகளை அவர்கள் தொடரவே செய்வர். மூதூர் கிழக்கு மக்களின் மீள் குடியேற்றமும் நடைபெறப் போவதில்லை. பேரினவாதச் சக்திகள் மூதூர் கிழக்கினை சிங்களமயமாக்க முற்படலாம். பேரினவாதிகளுக்கு கிழக்கில் சவாலாக எஞ்சியிருந்த தமிழ்ப் பிரதேசம் மூதூர் கிழக்குப் பிரதேசமாகும். அது தற்போது தங்களின் ஆதிக்கத்தில் வந்திருப்பதால் ஏதோ ஒரு வகையில் சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகளை அவர்கள் அங்கு மேற்கொள்ளலாம்.

எனவே கிழக்கு அரசியல் தொடர்ந்தும் நெருக் கடிக்குள்ளாகப் போகின்றது என்பதே உண்மை போலத் தெரிகின்றது.

## ஜேவிபி இனவாதத்தன்மையை

20ம் பக்கத் தொடர்ச்சி

இந்நிலையில் இருந்து ஜேவிபி இன்னும் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தமிழ் மக்களின் விடயத் தில் அவசரமாக பாய்ந்து செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை. இன்றைய நிலையில் தமிழ் மக்கள் விரும்பும் இரு தேசக்கோட்பாடு அரசியலை முன்னெடுக்க முனைவார்களா னால் ஜேவிபிக்கு சங்கடமான நிலை உருவாகும் என்பது தமிழ் மகக்ளுக்குத் தெரியும். இன்றைய சூழலில் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் தமது பாதுகாப்புக்காக போராடுவதைத் தவிர வேறுவழி இருக்கமுடியாது என்பதை ஜேவிபி ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்மக்களின் போராட் டத்திற்கு தமிழீழம் தான் தீர்வு என ஏற்காவிட்டாலும், தங்களின் பாதுகாப்புக்காகப் போரிடுவதை இன ஐக்கியத்திற்கு எதிரானது எனக் கூறிவிட முடி யாது. அதேவேளை, தேசிய இனங் களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வரும் போது ஆதரவாக இல்லாவிட்டாலும் எதிர்ச்சக்தியாக இல்லா விட்டால் போதும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இடதுசாரிக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்ப் பிரதே சங்களில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள், தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த பிரதேசங் களிருந்து வெளியேற்றப்படல், வடக்குகிழக்கு மாகாணங்களை இணைக்கும் மையப் பிரதேசங் களில் சிங்களக் குடியேற்றங்கள், தமிழ்பெயர்கள் மாற்றப்பட்டு சிங்கள பெயர்கள் இடப்படல் போன்ற நிகழ்வுகளுக்காகவும் ஜேவிபி குரல் கொடுக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஜேவிபி இதுபோன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுமானால், தமிழ் மக்கள் உட்பட அனைத்து ஒடுக்கப்படும் சமூகங்களும் ஆதரவுச் சக்தியாக மாறக்கூடிய நிலை தோன்றலாம். சனநாயக சக்தி களும் முற்போக்கு சக்தி களும் அணிதிரளக்கூடிய வாய்ப்பும் உருவாகலாம்.

இடதுசாரிக் கொள்கை யையின்படி தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமையுண்டு. ஆனால் ஜேவிபி அதனை ஆதரிக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. குறைந்த பட்சம் இரு தேசக் கோட்பாட்டை ஆதரிக்கும் நிலைக்காவது எதிர்காலத்தில் வரவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் மத்தியில் ஜேவிபிக்கு சரியான இடம் கிடைக்கும். தமிழ்மக்களின் இவ்வாறான எதிர்பார்ப்புகளை யெல்லாம் ஜேவிபி நிறை வேற்றுமா? இதற்கு வரலாறு தான் பதில் சொல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணாதிக்கத்தின் அமிலக் காதல்!



> ***பெண் என்பவள் வெறும் உடல் அல்ல என்பதைக் கருத்து ரீதியாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், சமூகத்தில் நிலவும் பண்பாடு, ஊடகங்களின் தாக்குதலும் பெண்களைப் பாலியல் நோக்கில் பார்ப்பதற்கு மட்டுமே அவர்களையும் பழக்கப்படுத்துகின்றது. எனவே அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்குள் ஆணாதிக்கம் துளிர்விட்ட வண்ணம் இருக்கின்றது. இதைக் களையெடுக்க வேண்டுமானால், அதற்குப் பெண்களின் உதவியும் தேவைப்படுகின்றது. ஏராளமான பெண்கள் சமூக வாழ்க்கையில் ஈடுபடும்போதுதான், பாலினக் கவர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆண்-பெண் உறவு சாத்தியமாகின்றது. பெண்கள் சமூக மாற்றத்திற்கான நடைமுறையில் ஈடுபடும்போது தான், ஆணாதிக்கம் என்ற ஒன்றையே அவர்களால் அடையாளம் காண முடிகிறது.***

சமூக அமைப்பினாலும்,குடும்ப நிறுவனத்தினாலும் அடிமைப் படுத்தப்பட்ட பெண்கள், தமது விடுதலைக் கான புரிதலையும், புத்தார்வத்தையும் புதுப்பிக்க வேண்டிய வேளை இது. உழைக்கும் வர்க்கம் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பெண்கள், வீட்டுச் சிறையிலிருந்து விடுபட்டு, பெருந்திரளாக வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கூட, அவர்களது சமூக நிலையில் பெருமளவு மாற்றம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. உலகமயமாக்கத்தின் நுகர்வுக் கலாச சாரத்தால் அழகுப் பதுமைகளாக ஆக்கப் பட்டுள்ள பெண்கள், வீட்டிலோ சாதிய, மத, ஆண்ணாதிக்க, நிலவுடமை போன்ற பிற் போக்குகளின் கீழ் அடைபட்டுள்ளனர்.

இருப்பினும் சற்றே சுய பொருளா தாரத்துடனும், வெளியில் சிறிது சுதந்திரத துடனும் நடமாடும் பெண்களுக்கு,ஆசு வாசப்படுத்தும் விசயமாக இருக்கின்றது காதல். இக்காதல் பொதுவாக மேலோட்ட மாகவே இருந்தாலும் அதற்கு ஆட்படும் பெண்களுக்கு குறுகிய காலத்திற்காக வாவது சுய மதிப்பையும், மகிழ்ச்சியையும் தரத்தான் செய்கின்றது. வெற்றி பெறுகின்ற காதல், திருமணத்திற்குப் பிறகு தனது முற்போக்கு முகமூடியை இழந்து விடுவதால், தனது பழைய நிலையை பெரும்பாலும் அடைந்து விடுகின்றாள் பெண்.

மின்னலைப் போலத் தோன்றி மறையும் இக்காதல் வாழ்விலாவது, ஒரு பெண்ணுக்கு தனது துணையைத் தெரிவு செய்யும் சுதந்திரம் இருக்கின்றதா? குறைந்த பட்சம் காதலைத் தெரிவிக்கும் ஒரு ஆணிடம், அவனைப் பிடிக்கவில்லை. என்று சொல்லும் உரிமையாவது உள்ளதா? கீழ்க்கண்ட உண்மைக் கதையைப் படியுங்கள்.

நாமக்கல் மாவட்டம் தாண்டா கவுண்டம் பாளையத்தைச் சார்ந்த மாரிமுத்து. கூலித்தொழிலாளியானாலும் தனது மகள்கள் சீமா, மீனா இருவரையும் அருகாமை நகரக் கல்லூரிகளில் சிரமத்துடன் படிக்க வைக்கின்றார். ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்து முதல் தலை முறையாக கல்லூரிக்கு கல்வி கற்கச் சென்றவர்கள் என்ற முறையில், இருவரும் ஆர்வத்துடன் படிக்கின்றார்கள். இளங்கலை மூன்றாமாண்டு படிக்கும் சீமாவை அவளது உறவுக்காரப் பையனான ஆறுமுகம் தினசரி பின்தொடர்கின்றான். கொசுவலை தயாரிக்கும் தொழிற்சாலையில் பணி யாற்றும் ஆறுமுகம் ஏழாம் வகுப்போடு படிப்பைக் கைவிட்டவன். சீமாவை எப்படியாவது காதலித்தேயாக வேண்டும் என்பதில் குறியாயிருக்கின்றான்.

ஆனால் சீமா அவனது காதலை ஏற்கவில்லை. இருப்பினும் ஆறுமுகத்தின் நச்சரிப்புத் தாளாமல், திருமணம் செய்ய வேண்டுமென்றால் தனது தந்தையிடம் பேசுமாறு கூறி, சீமா தவிர்க்கப் பார்க்கிறாள். ஆறுமுகம் விட்டபாடில்லை. தனது சுற்றத் தாருடன் மாரிமுத்துவிடம் பெண் கேட்கச் செல்கிறான். ஆறுமுகம் தூரத்து உற வென்றாலும் சீமாவுக்கு சகோதர உறவுமுறை என்பதால், பெண்தர இயலாது என்று மாரிமுத்து மறுத்துவிட்டார்.

திருமணப் பேச்சு முறிந்தாலும், அந்த இளைஞனின் காதல் உணர்ச்சியடங் கவில்லை. விடாமல் சீமாவை தொல்லை செய்கின்றான். வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப்போய்த் திருமணம் செய்து கொள்ளலா மென வற்புறுத்தினான். இதிலெல்லாம் தனக்கு விருப்பமில்லை என்று, சீமா பலமுறை அவனிடம் பொறுமையாக விளக்கியிருக்கின்றாள். இதற்கு மேல் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று அந்த அபலைப் பெண்ணுக்குத் தெரியவில்லை. எப்படியும் சீமா தனக்குக் கிடைக்கமாட்டாள் என்பதால் ஆறுமுகம் ஆத்திரம் கொள் கின்றான்.

இடையில் சீமாவை பெண்கேட்டு பக்கத்து ஊரிலிருந்து மாப்பள்ளை வர இருப்பதாகக் கேள்விப்பட்ட ஆறுமுகம் சினமடைந்தான். தனக்கு கிடைக்காத சீமா யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று முடிவெடுத்து, கந்தக அமிலத்தை வாங்கிக் கொள்கின்றான்.

ஜனவரி 21ஆம் திகதி அதி காலையில், வீட்டை ஒட்டியுள்ள ஓலைத் தடுப்பிலான குளியலறையில் சீமா குளித்துக் கொண்டிருக்கின்றாள். தடுப்பைத் தள்ளி விட்டு உள்ளே நுழைந்த ஆறுமுகம், குப்பியிலிருந்த அமிலத்தை அவளது முகத்தில் வீசுகிறான். முகம் சிதைந்த நிலையில் கதறியழும் சீமாவை அருகி லிருக்கும் ராசிபுரம் மருந்துவ மனைக்கு அழைத்து செல்கின்றார் மாரிமுத்து. அங்கு வசதியில்லை என்பதால், சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றாள் அந்த ஏழைமகள். இந்த முகத்தை வைத்துக் கொண்டு அக்காவால் வாழமுடியாதே என்று தங்கை மீனா கதறியழுகிறாள்.

301.01.08 குமுதம் ரிபோர்ட்டில், இச்சம்பவத்தை நேரடியாக விசாரித்து எழுதியிருக்கும் நிருபர் கதிரவன், பொலீசார் கைது செய்யப்பட்டுள்ள ஆறுமுகத்திடம் பேசிப்பார்க்கின்றார். அவன் என்ன சொல்கின்றான்.? நான் ஒன்றும் அவளுடன் ஒட்டிப் பிறந்த சகோதரன் இல்லை. என்னைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கா கவே இப்படிச் சொல்லி என்னை அசிங்கப் படுத்தி திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதை நம்பி சீமாவும் என்னைத் தவிர்த்தாள். எனவேதான் எனக்குக் கிடைக்காதவள் வேறு யாருக்கும் கிடைக்கவே கூடாது என்பதற்காகவே, இப்படி ஒரு காரியத்தைச் செய்தேன். முகத்தில் சலனமில்லாமல், ஆறுமுகம் கூறிய வார்த்தைகள் இவை.

நேசித்த பெண்ணின் முகத்தை சிதைத்து வாழ்வை இருளாக்கியிருக்கும் ஆறுமுகத்தினுடைய அந்தப் பெண் மீதான உறவைக் காதல் என்று அழைக்கமுடியுமா? இந்த வக்கிரத்தைக் கண்ட பிறகு எவரும் இதைக் காதல் என்று அழைக்கமாட்டா கள்தான். எனினும் அறிவுக்குத் தெரிந் திருக்கும் இந்த உண்மை, உணர்ச்சிக்குப் புரிவதில்லை. காதல் குறித்த பிரச்சினை களை யாதார்த்தமாகத் தீர்மானிப்பது உணர்ச்சிதான் என்பதால், பல இளைஞர்கள் அமிலம் வாங்குவதில்லையே தவிர அதற்கு முந்தைய எல்லை வரை வன்முறையை மேற்கொள்கின்றார்கள். உடன்பிறந்த ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகளை இந்த வன்முறைகளை அவ்வளவு சுலபத்தில் அவர்களுக்கு புரிய வைக்கமுடியுமா என்று தெரியவில்லை. ஏனெனில், ஊடகங்களும் சினிமாவும் காதலை ஒரு சனநாயகப் பண்பாக கற்றுக்கொள்ளவில்லை.

புத்தாண்டுக்குப் பிறகு பிப்ரவரி 14 காதலர் தினம் இளைஞர்களின் திரு விழாவாக மாறிவிட்டது. இல்லை, மாற்றப் பட்டுவிட்டது.. என்ன பரிசு கொடுக்கலாம், என்ன வண்ணத்தில் ஆடை அணியலாம், பிரபலங்களின் காதல் அனுபவங்கள் என மொத்தத்தில், ஊடகங்களால் காதல் காய்ச்சல் அதிவேகத்தில் சூடேற்றப் ஷபடுகின்றது. காதல் இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா என்று, இந்த சூடேற்றலில் இளைஞர்கள் சங்கமிக்கின்றார்கள். ஆனால் இந்த நெருப்பில் சமூகத்தின் பிற்போக்குத் தனங்கள் எவையும் எரிக்கப்படுவதில்லை. காதலையும் ஒரு நுகர்பொருளாகப் பாவிக்க கற்றுக் கொடுக்கும் இந்தக் கண்ணோட்டம், உண்மையில் காதலின் தேவை குறித்தும், அதன் பிரச்சினைகளைக் குறித்தும் கடுகளவு கூட சொல்லிக்கொடுப்பதில்லை. சாதியும் மதமும் மாறி காதலித்த குற்றத்திற் காக உயிரோடு எரிக்கப்பட்ட காதலர்களின் கதையை எந்த ஊடகமும் கவலையோடு கூட வெளியிடுவதில்லை.

அதனால்தான் சாதியும், மதமும், வர்க்கமுமே இன்றும் திருமணத்தைத் தீர்மானிக்கும் விதிகளாக இருக்கின்றன. காதலிப்பது ஜாலிக்காக, கல்யாணமாவது செட்டிலாவதற்கு என்ற காரியவாதக் கண்ணோட்டமே இளைஞர்களிடம் மேலோங்கியிருக்கின்றது. அவ்வகையில் இளைஞர்கள் காதலின் இலக்கணத்தையும் தொழில் நுட்பங்களையும் தமிழ் சினிமாவிலிருந்துதான் கற்றுக்கொள் கிறார்கள். முக்கியமாக இளைஞர்களின் காதல் பார்வையை அநேகமாக சினிமா தான் தீர்மானிக்கின்றது. காதல் வயப்படு வதன் அடிப்படை இனக்கவர்ச்சி என்ற உயிரியல் உறவில் இருக்கின்றது என்றால், யாரை, ஏன், எப்படிக் காதலிப்பது என்ற பரிசீலனையை பண்பாட்டின் தரம் முடிவு செய்கின்றது. குறிப்பாக ஆண்கள் இந்தத் தரத்தை தமிழ் சினிமாவிலிருந்துதான் பெறுகின்றார்கள்.

சமூகநிலையில் இன்னமும் சமத்து வத்தை அடைய முடியாத பெண்களுக்கு, பொதுவாக காதலுக்கான முன் முயற்ச்சிக ளைச் செய்வதற்கு வாய்ப்பில்லை. அந்த வாய்ப்பை உரிமையாகப் பெற்றிருக்கும் ஆண்கள், அதை எப்படிக் கையாளு கிறார்கள்.? எல்லாத் திரைப்படங்களிலும் நாயகனாக வரும் ஆண்கள் பெண்களை விரட்டி விரட்டி காதலிக்கின்றார்கள். காதலித் தே ஆகவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்து கிறார்கள். சில சமயங்களில் மிரட்டு கின்றார்கள். சில இடங்களில் எப்படியும் காதலிப்பேன் என்று சவால் விடுகின்றார்கள். புதிய பாதை போன்ற படங்களில் வல்லுறவு கொண்டு விட்டு கல்யாணம் தன்னோடுதான் என்று வழியில்லாமல் செய்து விடுகின்றார் கள். நீ ஒருவனைக் காதலிப் பதைவிட உன்னைக் காதலிப்பவனை காதலிப்பதே சிறந்தது என்று உபதேசிக் கின்றார்கள். இப்படி காதலுக்கு மசியாத நாயகியை வீழ்த்துவதற்கு எல்லா வித்தை களையும் செய்கின்றார்கள்.

கார்ல் மார்க்ஸ் தனது மரு மகனுக்கு எழுதிய கடிதமொன்றில், மென் மையாக வெளிப்படுத்தப்படும் காதலில்தான் அழகிருக்கின்றது என்று தான் கருதுவதாகக் குறிப்பிடுகின்றார். ஒரு பெண்ணுடன் உள்ள உறவு அல்லது நட்பின் அடிப்படையில் அவள் மீது காதல் தோன்றும்போது, அதனை அவளிடம் தெரிவிப்பதில், ஆணுக்கு மிகுந்த எச்சரிக்கையும் நிதானமும் வேண்டும். இது பழமை வாதமல்ல. இந்த அணுகுமுறையில்தான், ஒரு பெண்ணுடைய ஆளுமையின் மீது அந்த ஆண் கொண்டிருக்கும் மதிப்பு வெளிப்படுகின்றது. ஆனால் தமிழ்த் திரைப்படங்கள், ஒரு பெண்ணை வென்று அடக்கவேண்டிய விலங்காவே கருது கின்றது. ஒரு வரியில் சொல்வதானால், இது தான் பச்சையான ஆணாதிக்கம். இப் படித்தான் நமது இளைஞர்கள் பெண்களின் பின்னால் சுற்றுவதும், கவருவதும், தொல்லைப்படுத்துவதுமாக இருக்கின்றார் கள். ஆணையும் பெண்ணையும் இருவேறு உலகமாகப் பிரிந்து வைத்திருக்கும் இந்தியச் சமூக அமைப்பு, இந்த தொல் லைக் காதல் வளர்ப்புக்கு ஏதுவாக இருக் கின்றது.

இத்தகைய காதல் உணர்வே, பெண்ணை தன்னால் காதலிக்கப்பட வேண்டிய அடிமையாக நினைக்கின்றது தான் நினைத்து விரும்பியதாலேயே ஒரு பெண் தன்னைக் காதலிக்க வேண்டும் என்றுதான் ஆண்கள் நினைக்கின்றார்கள். தன்னைப் போலவே ஒரு பெண்ணுக்கும் சுயமதிப்பும், தெரிவு செய்யும் விருப்பமும், நிராகரிக்கும் உரிமையும் இருப்பதாக ஒரு ஆண் கனவிலும் நினைப்பதில்லை. பெண்களைப் பொறுத்தவரை தங்களை அடிமைபோல பாவிக்கும் இந்த அணுகுமுறை குறித்து கவலைப்படு வதைவிட, தமது எதிர்கால வாழ்க்கையின் பாதுகாப்பு குறித்தே கவலைப் படுகின்றார்கள்.ஆக ஒரு பெண்ணை உட மையாகாக கருதும் ஆண்களின் நினைப்பை கேட்பதற்கு ஆளில்லை என்பதால், ஆண்களின் காதல் முதல் முயற்சியே வன்முறையாக இருக்கின்றது.

வாழ்க்கை உருவாக்கியிருக்கும் எல்லா உறவுகளிலும் மகிழ்ச்சி, துன்பம், பிரிவு, உறவு, ஏமாற்றம் எல்லாம் கலந்திருக் கின்றது.அதில் ஒரு தலைக்காதல் வயப்பட்டு பின்னர் அந்தக் காதல் நிராகரிக்கப்படும் சூழ்நிலையில்,ஒரு ஆணின் கவலை மட்டும் பாரதுரமாக மாறுகின்றது. தனக்கு அடங்கிக் கிடக்க வேண்டிய ஒரு பெண் தன்னை மறுப்பதால் ஆண்கள் தமது சுயகௌரவம் பாதிக்கப்படுவதாகத் துயரப்படுகின்றார்கள்.

*தொடர்ச்சி 19 பக்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.ஏ. நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகள்



## 60 வருட துயரங்களின் நினைவாக

### அந்தொய்னே ஜபாற

*அந்தொய்னே ஜபாற பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசிர் அறபாத் ஐ. நா சபையில் முதல் முறை பேசிய போது (1988) இன்று நான் ஒரு ஒலிவம் கிளையையும் விடுதலைப் போராளியின் துப்பாக்கியையும் ஏந்தி வந்துள்ளேன். ஒலிவம் கிளை என் கையிலிருந்து விழுமாறு செய்யாதிர்கள் எனக் கூறினார் . அந்தொய்னே ஜபாறவின் இக் கவிதை அப்பேச்சியின் தூண்டுதலினால் பிறந்த கவிதையாகும்*

# சமாதான நதியும் போர்த் துப்பாக்கிகளும்

*ஐக்கிய நாடுகள் சபைக்கு பலஸ்தீனர்களின் முறையீடு:*

உள்ளங்கைகளில் புறாக்களை ஏந்தி
இன்று நாங்கள் உம்மிடம் வந்துள்ளோம்
துயில் கலைந்து எழுந்த எங்கள் நாடு
பலஸ்தீனத்துடன் நாங்கள் வந்துள்ளோம்.

இருபது ஆண்டுகள் நாம் காத்திருந்தோம்
பெற்றவை யெல்லாம் வார்த்தைகள் மட்டுமே
வெற்று வார்த்தைகள் மட்டுமே பெற்றோம்

எங்கள் காயங்கள் வலிதருகின்றன
எங்கள் எலும்புகள் நொறுக்கப்பட்டன
ஆயினும்
நாங்கள் உமக்கு நல்கிட வந்துள்ளோம்
ஈராக் நாட்டு ரோஜாப் பூக்களும்
டமஸ்கஸ் நகர நறிய மலர்களும்
வானம் பாடியின் இன்னிசைப் பாடலும்
சின்னக் குருவியின் பிரார்த்தனைக் கீதமும்
காதல் இரவுகள் அனைத்தும் கூட
நாங்கள் உமக்கு நல்கிட வந்துள்ளோம்

ஆண்டாண்டு காலமாய் அடித்து நொறுக்கிச்
சிதறப்பட்ட மக்களாய் வாழ்ந்தோம்
பெருந்தன்மையும் வீரமும் மிக்க
மக்களே நாங்கள்
அனைத்துக் காதலும் பெறுவதற்குரிய
அருகதை முழுமையாய் உடையவர் நாங்கள்
நட்புடன் வாழ நாங்கள் செய்யும்
கடைசி முயற்சி இதுவேயாகும்
கையில் நாம் தாங்கிய ஒலிவம் கிளையினை
நிலத்தில் வீச நிர்ப்பந்திக்காதீர்

ஒருபுது ஒழுக்கம் உருவாக்குமாறு
உலகிடம் நாங்கள் விண்ணப்பம் செய்கிறோம்
மணல் மேடுகளிலும் மலைகளின் மீதும்
நாங்கள் வாழ்ந்தவர் என்பதை மறப்பீர்
மணல்களை நாங்கள் போற்றினால் என்ன?
மரங்களை நாங்கள் மதித்தால் என்ன?
பிரகாசமான நட்சத்திரங்களை
எனது சகோதரி கழுவினால் என்ன?

எனது பாட்டி திறந்த கண்களால்
வெறித்துப் பார்ப்பதைக் காணும் நிலைமை
எனக்கேன் வருவான்?
வானத்தை நோக்கி நிர்வாணமாக
எனது தாயின் சடலம் கிடப்பதைக்
காணும் நிலைமை எனக்கேன் வருவான்?
காட்டு வழிகளில் தீர்க்கதரிசிகள்
சஞ்சாரம் செய்வதை நாங்கள்
பார்த்துள்ளோம்
எனது பூமியின் புனித வழிகளில்
ஒளிரும் தாரகை தடம்பதித்துள்ளன

அநீதியால் துயருறும் எனது மக்கள்
காதலின் நட்பின் கீதமே யாவர்
எல்லா நாட்டு மக்களிடத்தும்
அவர்கள் அன்புக் கரம் இதோ நீட்டினார்
அந்தக் கரங்களை வெட்டி விடாதீர்

உடைந்து நொறுங்கிய உள்ளத் துயருடன்
உலகில் உள்ள நாடுகளிடத்தில்
முன்பும் நாங்கள் முறையீடு செய்தோம்

ஆயின் நாங்கள் அவர்களின் திறந்த
கதவின் வெளியிலே தள்ளப்பட்டோம்
உம் மனச்சாட்சி அசையவே இல்லை
கசக்கிப் பிழியும் அகதி வாழ்க்கை
சுமையாய் எம்மில் சுமத்தப்பட்டது
நாடுகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய்
திறந்த கரங்களால் வரவேற்கப்பட்டன
ஆயின் நாங்களோ ஒதுக்கப்பட்டோம்

எமது இளைஞரின் எமது பெண்களின்
எமது சிறார்களின் வேண்டுதல் எல்லாம்
உமது நெஞ்சினை உலுப்பவே இல்லை

பிறகு வந்தது எம் போராட்டம்
தியாகங்களும் போர்களும் நிகழ்ந்தன
கொல்லப்பட்டோம் காயமடைந்தோம்
முறையீடுகள் மிகமிக குறைந்தன
எங்கள் கண்ணீரை நாங்கள் நிறுத்தினோம்

துப்பாக்கி முழக்கம் சொற்களை விடவும்
உரத்துப் பேசின
நீதிகோரும் எமது மக்களைத்
தடுத்திட வேண்டாம்
எமது புண்களைக் கிளறிடவேண்டாம்

ஓநாய்களாக வேட்டைப் பறவையாய்
ஒவ்வொரு நாளும் பலியிடப்படுகின்ற
ஆட்டுக் கடாக்களாய்
கணிக்கப்படுவதை நாங்கள்
வெறுக்கின்றோம்

பயங்கர நிலைமை முடிந்திட வேண்டும்
எமது புண்ணிய பூமியின் ஊடாய்
சமாதான நதி பெருகிடவேண்டும்
என்பதே எமது பிரார்த்தனையாகும்

நீதியும் சமாதானமும்
புதியதான ஓர் சிந்தனைப் பாதையும்
இவையே எமது வேண்தலாகும்

இனக்கொலை புரிந்து கரங்கள் தறித்த
கடந்த கால அச்சுறுத்தல்கள்
எதையுமே இங்கு உருவாக்கவில்லை
துப்பாக்கி முழுக்கமும்
யுத்த பேரிகையும் தவிர
எதையுமே இங்கு உருவாக்கவில்லை.

# ஏனெனில் நான் ஒரு அராபியன்

நான் தடுப்புக் காவலில் இருக்கிறேன்
ஐயா, அதற்கு காரணம்
நான் ஒரு அராபியன் என்பதே
தன் ஆன்மாவை விற்க மறுத்த
ஓர் அராபியன்

விடுதலைக்காக எப்போதும் முயன்ற
ஓர் அராபியன்
தனது மக்களின் துயர்களை
எதிர்த்து நின்ற ஒரு அராபியன்
நீதியான சமாதனத்தின் நம்பிக்கை
கொண்டவன்
ஒவ்வொரு மூலையிலும் மரணத்தை
எதிர்த்து பேசியவன்
ஒரு சகோதரத்துவ வாழ்வைக் கோரி
அதற்காக வாழ்ந்தவன்

அகவே தான்
நான் தடுப்புக் காவலில் இருக்கிறேன்
ஏனெனில்
நான் போராடத் துணிந்தவன்
இன்னும் ஏனெனில்
நான் ஒரு அராபியன்

# வங்குறோட்டானவனின் அறிக்கை

என் பாண் துண்டை நான் இழக்க நேரிடினும்
என் சட்டையையும் கட்டிலையும் விலைகூற நேர்ந்தாலும்
கல்வெட்டியோ சுமை காவியோ
தெருக் கூட்டியோ நான் பிழைக்க நேரினும்
உன் பண்டசாலையைத்
துடைத்து மினுக்க நேரிட்டாலும்
குப்பையைக் கிளறி உணவெடுக்கும்படி வந்தாலும்
பட்டினி கிடந்து அழுந்த நேரினும்
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

என் காணியின் கடைசித் துண்டையும் பறித்தெடு
என் இளமையைச் சிறைக் கூண்டினுள்ளே புதைத்திடு
என் முதுசொத்தைக் கொள்ளையடி
என் நூல்களை எரித்திடு
என் கோப்பைகளில் உன் நாங்களுக்கு இரைபோடு
போ, என் ஊரிலுள்ள கூரைகள் மீது
உன் பயங்கர வலைகளை விரித்திடு
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

என் கண்ணெதிரே
நீ எல்லா விளக்குகளையும் ஊதி அணைத்தாலும்
உதடுகளின் முத்தங்கள் அனைத்தையும்
உறைவித்தாலும்
என் நாட்டின் காற்றினைச்
சாபங்களால் நிறைத்தாலும்
என் ஓலமிடும் குரல்வளையை
அமுக்கி ஒடுக்கினாலும்
என் காசுகள்போல் பொய்க்காசு தயாரித்தாலும்
என் பிள்ளைகளின் முகத்து முறுவலைப்
பிடுங்கி எடுத்தாலும்
இகழ்ச்சி ஆணி கொண்டு
என் விழிகளில் அறைந்தாலும்
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

மனிதனின் எதிரியே
துறைமுகங்களில் சைகைகள் உயர்த்தப்பட்டுவிட்டன
காற்றெங்கும் அழைப்புகள் நிரம்பிவிட்டன
எங்கெங்கும் அவை தெரிகின்றன
அடிவானத்திலே கப்பற் பாய்களைக் காண்கின்றேன்.
முயன்று, இடர் மீறி, இழப்புக் கடல்களினின்றும்
யுலிசசின் கப்பல்கள் மீண்டு வருகின்றன
பொழுது புலர்கிறது மனிதன் முன்னேறுகின்றான்
நான் பொருட்டாக நான் சத்தியம் பண்ணுவேன்
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

## இந்திய அக்கிரமிப்பு 1 ம் பக்கத் தொடர்ச்சி

புலிகள் தற்போது தங் களது நுணுக்கமான இராஜ தந்திரத்தின் மூலம் இந்தியா வினதோ, மேற்குலகினதோ அழுத்தங்கள் இலகுவில் வந்தடை யாதவாறு மிகத் தூரத்தில் நின்று கொண்டிக்கின்றனர். அவர்கள் மீது அழுத்தங்கள் மேற்கொள்வதாயின் பல தடைகளைத் தாண்ட வேண்டும்.

மகிந்தர் அரசாங்கம் மேற்குலக அழுத்தம், இந்திய அழுத்தம் என இரு அழுத்தங் களுக்கு தற்போது உள்ளாக வேண்டியிருக்கின்றது. உள் நாட்டிலும் போர் நீண்டு கொண்டி ருப்பதால் விலைவாசி உயர்வு, தொழிற்சங்கப் போராட்டம் என்வவற்றிக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

உள் நாட்டு மட்டத்தில் பிரச்சினை தீர்க்க முடியாத எந்த அரசும் வெளிநாட்டுத் தலையிடு களுக்கு உள்ளாகுவது இயற்கை யானது.

பிரித்தானிய கலானித் துவத்தில் இருந்து சுதந்திரமடைந்த இலங்கை தற்போது போது இந்தியக் காலனித்துவத்திற்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளது.

பிரித்தானியாவிற்கு எதிராக ஒழுங்கான சுதந்திரப் போராட்டத் தினை இலங்கை நடாத்தவில்லை ஈனால் இந்தியாவுக்கு எதிராக நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் இன்று எற்பட்டுள்ளது

இந்தியக் காலனித்து வத்திலிருந்து விடுபடுவதற்கான ஓரே வழி போரை நிறுத்தி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்ப்பதுதான்

இனப்பிரச்சினையைத் தீக்காத வரை இந்திய காலனித்து வத்திலிருந்து விடுபடுதல் ஒரு போதும் நிகழப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் அரசியல் .......

10ம் பக்கத் தொடர்ச்சி

**சர்வதேச சக்திகளுடன் அண்மைக்காலமாக அதிகளவு தொடர்புகளைக் கொண்டிருக்கின்ற நீங்கள் இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சக்திகள் நேர்மையாக நடத்துள்ளார்களா எனக் கருதுகின்றீர்களா ?**

சர்வதேச தொடர்புகள், விருதுகள், சந்திப்புகள் எல்லாம் நடந்துள்ளன தான். ஆனாலும் சர்வதேச நாடுகள் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்பதே எனது கருத்தாகும். எனக்கு விருது வழங்கிய அமெரிக்கத்தேசம் தமிழ்தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலும், ஏனைய சர்வதேச பிரச்சினைகளிலும் ஒரு ஒடுக்குமுறை நோக்கம் கொண்ட ஏகாதிபத்திய அரசாகவே செயல்பட்டுள்ளது. எனக்கு அமெரிக்கா விருது வழங்கினாலும் அது அமெரிக்க மக்களால் வழங்கப்பட்ட விருதாகவே நான் கருதுகின்றேன். இங்கே மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றது. அதற்கு எதிராக நாம் செயற்படுகின்றோம் என்பதையே இவ்விருதின் மூலம் உலகத்திற்கு நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

**எந்தத் தீர்வுக்கும் இந்தியா தடையாக இருக்கும் போல இருக்கின்றது. இப்பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என கருதுகின்றீர்கள்?**

எப்பொழுதுமே இந்தியா குழப்ப வேலையைத்தான் செய்து வருகின்றது. கடந்த 2, 3 சகாப்தங் களாகக் கூட தனது நலனுக்காவே இந்தியா செயல்படுகின்றது. ஒவ்வொரு நாடும் தமது நலன்சார்ந்த நடவடிக்கைகளுக்காக செயல்படுவது இயல்பு ஆகும். அதை நாம் குறைகூற முடியாது. ஆனால் இந்தியா தற்போது எடுத்திருக்கும் முடிவுகள் இந்திய நலன்சார்ந்தாக இல்லையென்பதே எமது கருத்தாகும். தமிழ், முஸ்லீம் மக்கள் ஒன்றாக இணைந்து வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க இந்தியா தடுக்கின்ற காரணியாக இருப்பதே கவலை தருவதாக உள்ளது.

**இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் போது எல்லா இனங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படல் வேண்டும். குறிப்பாக மலையக மக்களின் பிரச்சினைக்கும் தீர்வு காணபட வேண்டும். இது விடயத்தில் முஸ்லிம் தலைமைகளிடம் இருக்கின்ற அக்கறைகூட மலையகத் தலைமைகளிடம் காணபப்ட வில்லையே? இத் தேக்கத்தினைப் போக்க என்ன செய்யலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்.?**

இதில் அதிசயப்பட எதுவு மில்லை. இன்று மலையகத்தில் அரசியல்த் தலைமைகள் இல்லை. அங்கே சந்தாத் தலைமை அல்லது தொழிற்சங்கத் தலைமை மாத்திரமே உள்ளது. எனவே சந்தாத் தலைமைகளுடன் அரசியல் தூரநோக்கு இருக்கும் என எதிர்பார்த்தால் அது எமது தவறு என்றே கூறவேண்டும்.

**அண்மைக்காலத்தில் உங்களை முக்கி யத்துவப்படுத்தியது மனித உரிமைகள் தொடர்பான உங்களின் செயல்பாடுகள் தான். மனித உரிமைகள் நிலைமைகள் இலங்கையில் எவ்வாறுள்ளன. ?**

நான் பிரதிநிதித்துவப் படுத்தும் கொழும்பு மாவட்டத்தில் சட்டத்திற்கு புறம்பான வெள்ளை வான் கடத்தல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இங்ஙனம் கடத்துகின்றவர்கள், பொலீஸ் பகுதியைச் சேர்ந் தவர்களே அல்லது பாதுகாப்புப் பிரிவிவைச் சேர்ந்தவர்களே என்பது சந்தேகமின்றி வெளிப்படுத்தப் பட்டுள்ளது. தமிழர்களை பிடிப்பது, அல்லது கடத்திச்செல்வது தமது கடமை என்ற நிலை உருவாக் கப்பட்டுள்ளது. இரவு வேளைகளில் பலர் கடத்தப்பட்டிருக் கின்றார்கள். இவர்களை புலனாய்வுப்பிரிவோ அல்லது பயங்கரவாத தடுப்புப் பிரிவோ கடத்தியது என்பது பின்னர் தெரியவந்தது. ஒரு நாட்டில் அரசுக்கு எதிரான செயல்பாடுகள் நிலவுகின்ற போது அதை தடுப்பது பாதுகாப்பு பிரிவினர்களின் கடமையாகும். ஆனால் அதற்குரிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகச் அதனைச் செய்ய வேண்டும். ஆனால் இங்கே சட்டத் திற்கு புறம்பாகவே சகலதும் நடைபெறுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு செயல்படுகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

**உங்களது செயற்பாடுகள் மனிதவுரி மைகள் விடயத்தில் எவ்வகையான தாக்கத்தை செலுத்தியிருந்தன?**

காணாமல்போனவர்கள் தொடர்பில் காணாமல் போனவர் களைத் தேடிக் கண்டுபிடிப்பது என்பது ஒரு நடவடிக்கை. தொடர்ந்தும் காணாமல் போவதை தடுப்பது மற்றுமொரு நடவடிக்கை யாகும். ஒன்று நோய் நிவாரணி. மற்றது நோய்த்தடுப்பு. எங்கள் செயல்பாடுகளால் காணாமல் போனவர்கள் பலர் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். பலர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளனர். ஆனாலும் இந்த கடத்தல், காணாமல்போதல்கள் எமது பகுதியில் பெரிய அளவில் தொடர்ந்தும் நிகழாமல் இருக்க எமது போராட்டங்கள் காரணமாகும்.

**தென்னிலங்கைச் சக்திகளினுடனான ஐக்கியம் பற்றி. ?**

தென்னிலங்கை அரசியல் சக்திகளுடன் இணைந்து செயல்படவே விரும்புகின்றோம். செயல்பட்டும் வருகின்றோம். தென்னிலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் எமது கட்சி மட்டுமே அரசாங்கத்துடன் இணையாமல் செயல்பட்டு வருகின்றது. மக்களின் பொதுவான நன்மை கருதி யாருடனும் இணைந்து செயல்பட தயாராகவுள்ளோம்.

**மக்கள் நெருக்கடிகளைச் சந்திக்கின்ற போது சிரமமெடுத்து மக்களின் பிரச் சினைகளை முன்னெகொண்டு செல் பவன்தான் தலைவன். தென்னிலங் கைத் தமிழ்மக்கள் மத்தியில் தற்போது நீங்கள் ஒரு தலைவராக உருவாகி யுள்ளீர்கள். தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களின் தலைவர் என்ன இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என நீங்கள் கருதுகின் றீர்கள்.?**

ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வட-கிழக்குக் பகுதியிலே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்கவேண்டும். உண்மையில் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதே உண்மை நிலையாகும். வட-கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட 23 பாராளுமன்ற உறுப்பினர்களில் 22 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளை தமது ஏகபிரதிநிதியாகக் கொள்கின்றனர். ஆனால் வட-கிழக்கு வெளியே வாழுகின்ற தமிழ் மக்களுக்கு விடுதலைப்புலிகள் தலைமை தாங்கவில்லை என்பது தான் எமது கருத்தாகும். முன்பு சில தமிழ்த் தலைவர்கள் விடுதலைப்புலிகளும் அதன் தலைவரும் வட-கிழக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு தலைமை தாங்குவதாக பேசிவந்தனர். இந்தக் கருத்தில் எந்த அடிப்படையும் இல்லை என்பதே எமது கருத்தாகும். இவர்கள் பின்னர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். ஆனால் நாங்கள் அப்படிக் கூறவில்லை. நாங்கள் எப்பொழுதும் ஒரே கருத்தையே கூறிவருகின்றோம். இதற்கு இரண்டு கருத்துக்கு இடமில்லை. உண்மையில் தென்னிலங்கையில் குறிப்பாக மலையகத்திலும் கொழும்பிலும் இந்திய வம்சாவழி மக்கள் வாழுகின்றனர். இதே போன்று கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வட-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்தும் பல்வேறு காரணங்களாலும் தமிழ் மக்கள் வாழுகின்றனர். இத்தகைய மக்களுக்கு ஒரு தலைமை வேண்டும்.

**அண்மைக்காலமாக கடத்தல், கொலை கள் அதிகரித்துள்ளன. இவற்றைத் தடுக்க என்ன செய்யலாம் எனக் கருதுகின்றீர்கள்?**

தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் தான் இத்தகைய செயல்களை தடுக்க முடியும். ஏற்கனவே நடந்த நிகழ்வுகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம் என நாம் கூறவில்லை. இதனைத் தடுப்பதற்கு தேசிய ரீதியாக தமிழ் , முஸ்லீம் மக்களிடத்தில் உள்ள அனைத்து சமாதானத்தை விரும்பும், யுத்தத்தை எதிர்க்கும் சக்திகள் சில அடிப்படை விடயங்களிலாவது ஒன்றிணைந்து செயல்படவேண்டும். குறிப்பாக மனித உரிமை விடயத்திலாவது ஒன்றுபட வேண்டும். மறுபக்கத்தில் கொடிய யுத்தத்தினால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் யுத்தத் துரும்பையே இதற்கு எதிராகப் பாவிக்கின்றது. போர் என்ற ஒரு போர்வையை போர்த்தி மகிந்த அரசாங்கம் அனைத்து அசிங்கங் களையும் மூடிவருகின்றது. இத்தகைய நிலமைகளுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே இந்த அரசாங்கத்தை வீழ்த்தமுடியும்.

**தற்போதைய ஆட்சியில் ஊடகங் களின் செயல்பாடுகள் அதன் சுதந்திரச் செயல்பாடுகள் குறித்து. ?**

போரை தொடர்ந்து நடத்துகின்ற சர்வாதிகாரத் தன்மை கொண்ட இராணுவ முனைப்புடன் செயற்பட்டுவரும் ஒரு அரசாங்க ஆட்சியில் ஊடகத்துறை அடக்கப் படுவது ஆச்சரியமான விடயமல்ல. இந்நாட்டில் ஊடக சுதந்திரம் முழுமையாக இருந்திருக்கு மானால் சனநாயக சுதந்திரம் இருந்திருக்கும். சனநாயக சுதந்திரம் இருந்திருந்தால் இவ்வளவு மோசமான சூழ்நிலை நாட்டில் உருவாகியிருந்திருக்காது.

அண்மைக்காலத்தில் மொரட்டுவ, கண்டிப் பகுதிகளில் குண்டுகள் வெடித்துள்ளன. இதனால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர். இத்தகைய படுகொலைகள் நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டியதாகும். இதேநேரம் வன்னிப்பகுதி மீது ஆகாயத்திலிருந்து பொழியப்பட்ட குண்டுகளினாலும், தரையில் இருந்து ஏவப்பட்ட செல்களினாலும் ஆழ ஊடுரும் தாக்குதல் நடவடிக்கைகளினாலும் பல மக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர். எனவே இதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கேயும் குண்டுகள் வெடிக்கின்றன. அங்கேயும் குண்டுகள் வெடிக் கின்றன. எனவே இரண்டு நிகழ்வு களுக்கிடையிலேயும் தொடர்புகள் உள்ளன. ஒன்று நிகழ்வதால் தான் மற்றொன்று நிகழ்கின்றது. இதனை ஊடகவியலாளர்கள் தென்பகுதி மக்களுக்கு எடுத்துக்கூறவேண்டும்.

# பிரதமரின் போர் முழக்கம்

1ம் பக்கத் தொடர்ச்சி

மாகாணத்திற்கு எத்தகைய அதிகாரமும் மகிந்த அரசால் கிடைக்கப்போவதில்லை. எனவே பிள்ளையானும் கிழக்கு மாகாண அதி காரத்திற்காக போராடவேண்டிய நிலையே உருவாகும். இன்று ஜே.வி.பி தனது பிரதான எதிரியாக விடுதலைப்புலிகளை கூறுவதைவிட இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளையே குற்றம் சாட்டுகின்றது இது ஜே.வி.பியின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் மன மாற்றத்தை பிரதிபலிக்கின்றது.

நாட்டில் இன்று சட்டம் ஒழுங்கு இல்லை, பாதுகாப்பு இல்லை. மக்களுக்கு உரிய எத்தகைய நிவாரணமுமில்லை. ஒரு அரசாங்கமே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே நாட்டில் போரை நிறுத்த சமாதானத்தை ஏற்படுத்த பலமானதொரு மக்கள் சக்தி கட்டி எழுப்பப்பட வேண்டும். அத்தகைய சக்திகள் போராட்டக் களத்தில் இருந்தே உருவாக வேண்டும். அதற்கு சாதகமான நிலைமைகள் தென்னிலங்கையின் தென் படத் தொடங்கியுள்ளன.

# தமிழ் மக்களின்

3ம் பக்கத் தொடர்ச்சி

மாகாண சபைக்குள்ள அதிகாரங்களில் ஓரளவாவது உள்ள அதிகாரம் கல்வி அதிகார மேயாகும். தேசியப்பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் பற்றிய விடயங்கள் மாகாண சபைகளின் அதிகாரங்களாகவே உள்ளன. ஆனால் இதனையும் தமிழ் பேசும் மக்கள் அடைய விடாமல் தடுக்கும் வகையில் அவ்வமைச்சும் சிங்களவருக்கே வழங்கப்பட்டுள்ளது. இலங்கையி லுள்ள ஏனைய மாகாணங்களில் கல்வி, காணி அமைச்சுகள் முதலமைச்சரின் பொறுப்பிலேயே விடப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண சபையில் மட்டும் இவ்வமைச்சுக் கள் சிங்களவர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே குற்றவாளி கூண்டில் ஜே.வி.பியே முதலில் நிறுத்தப்படவேண்டும். ஜே.வி.பினர் மகிந்தவுடன் இணைந்து இதுவரை காலமும் எதைச் சாதித்தனர். ஒற்றை ஆட்சிமுறை வலுப்பெறவேண்டும் என்றனர். ஒற்றையாட்சி முறையை சிதைக்கும் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை ஒடுக்க வேண்டுமென்றனர். உலகமயமாக்கலையும், உலக முதலாளித்துவ செல்வாக்கையும் இல்லாமல் செய்வோம் எனக்கூறிக்கொண்டு மகிந்த ராஜபக்சவை ஆட்சியில் இருத்தினர். யுத்தத்தை முன்னெடுத்தனர். இனவாதத்தையும் முன்னெடுத்தனர். இவற்றை முன்னெடுக்க விமல் வீரவன்சவுக்கு எல்லாவித வழிவகைகளையும் ஏற்படுத்தி கொடுத்தனர். இவற்றினால் விமல் வீரசன்ச மிகப்பிரபலமான வீரராக மக்கள் மத்தியில் புகழ் அடைந்தார். அல்லிப்பூ இயக்கம், தாயகத்தை காக்கும் தேசிய இயக்கம் என பல்வேறு இனவாத செயல்பாட்டு இயக்கங்களுக்கு தலைமை தாங்கினார். இவற்றின் மூலம் சிங்கள மக்கள் விடுதலை அடையமுடியும் என கடுமையான பிரச்சாரங்களில் ஈடுபட்டார்.

இவற்றை தனக்கு சாதகமாக்கிய மகிந்த முதலாளித்துவத்திற்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்டி கிழக்கு மாகாண மக்களை அடிமைப்படுத்தி இறுதியில் சிங்கள மக்களையும் பயமுறுத்தி இறுதியில் ஜே.வி.பியை தூக்கியெறிந்து விட்டு, கிழக்கில் தேர்தலை நடாத்தி வெற்றிபெற்றதுடன், சர்வதேசத்தின் முன் தன்னை சனநாயகவாதியாகவும் காட்ட முனைகின்றார். இன்று ஜே.வி.பிக்கு என்ன நடந்துள்ளது.? ஜே.வி.பி இரண்டாக பிரிந்துள்ளது. இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த கிழக்கு மாகாணத்தில் ஒரு மாகாணசபை உறுப்பினரை பெற்றுள்ளனர். இன்று ஒரு பாராளுமன்ற தேர்தல் வந்தால் இவர்களுக்கு ஏழு ஆசனங்களுக்கு மேல் பெறமுடியாதநிலை தோன்றியுள்ளது. இதேநிலைதான் அன்று பாரம்பரிய இடதுசாரிகளுக்கும் நடந்தது. முதலாளித்துவ சிறிலங்கா சுதந்தரக் கட்சியுடன் இணைந்ததால் அவர்களுடைய இருப்பே இல்லாமல் போயுள்ளது

.இனவாதத்தில் ஊறிப்போன ஜே.வி.பியால் தமிழ்மக்கள் சார்பான நிலைப்பாடுகளை எடுக்கமுடியுமா, ஒருநாளும் முடியாது. இவர்கள் இனவாதத் தளத்தைவிட்டு ஒரு போதும் வெளியேறமாட்டார்கள். இந்த நாட்டில் எல்லா தேசிய இனங்களையும் ஒன்று சேர்த்து இயக்கிய கட்சி சமசமாஜ கட்சியாகும். தென்னிலங்கை ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களுக்காகவும் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகவும் போராடிய வரலாறு அவர்களுக்கு உண்டு. தென்னிலங்கையில், தொழிலாளர்கள், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பரந்துபட்ட மக்கள் சக்திகள் மத்தியில் அவர்கள் செல்வாக்கு பெற்று விளங்கினர். தமிழ்மக்கள் தொடர்பாக ஒரு மொழி இருநாடு இருமொழி ஒரு நாடு என்று அன்றே ஆணித்தரமாக கூறியிருந்தனர். ஆனால் இவர்கள் சிறிமாவுடன் இணைந்ததினால் பிற்காலத்தில் தென் இலங்கையிலும், வடக்கு கிழக்கிலும் ஆயுதப்போராட்டங்கள் தொடங்கின. எனவே சமசமாஜகட்சியின் காட்டிக்கொடுப்புக்கு எதிராக நாம் கட்சிக்குள் போராடி இறுதியில் நவசமசமாஜ கட்சியை உருவாக்கினோம். எம்முடன் இணைந்து செயல்பட்ட வாசுதேவ இன்று கருங்காலியாக மாறி ஆட்சியாளர்களுடன் சங்கமமாகி உள்ளார். இவர்களின் இத்தகைய காட்டிக்கொடுப்புகளே இலங்கையில் இடதுசாரிகள் பலமிழக்கும் நிலையை ஏற்படுத்தியது. மேற்படி காட்டிக்கொடுப்புகளின் ஒட்டுமொத்த விளைவாக பிள்ளையான் தோற்றம் பெற்றுள்ளார். பிள்ளையான் மகிந்த திட்டத்திற்கு தலைசாய்க்க, மகிந்த உலகமயமாக்கலை மிக கடுமையாக முன்னெடுப்பார். எனவே இந்தியா, மேற்குலகம், அமெரிக்கா என்பன மகிந்த மீது ஓரளவு நம்பிக்கை கொள்ளும்நிலை ஏற்படும். இன்று இந்தியா இலங்கைக்கு உதவிகளைச் செய்து வருகின்றது. மன்மோகன்சிங் எவ்வழியோ அவ்வழியேதான் தானும் என்ற நிலையில் கருணாநிதியும் செயல்படுகின்றார்.இது பச்சை துரோகத்தனமாகும். இதே நேரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகள் எமக்கு ஆறுதலைத் தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் எரிகின்றது !

14ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டினர் பாதிப்புகளுக்கு எளிதில் பலியாகும் அவலநிலையில் உள்ளனர். 2000– 2004 ஆம் ஆண்டுகளுக்கு இடையே ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களினால் இந்தியா உள்ளிட்ட வளரும் நாட்டு மக்கள் தொகையில் 19பேரில் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், வளர்ந்த மேலைநாட்டு மக்களில் 1500 பேரில் ஒருவர் மட்டுமே பாதிப்படைந்தாக ஐ.நா மானிட மேம்பாட்டு மையம் தெரிவித்திருக்கின்றது

ஆக,புவி வெப்பமடைவதால் அதிகம் பாதிக்கப்படுவது மூன்றாம் உலக நாடுகள் போன்ற ஏழைதான். வளர்ந்த நாட்டினர் செய்த தமது பொருளாதார உற்பத்தி களுக்காக செய்துவரும் க்ாரியங்களால் பணக்காரர்களை விட ஏழை மிக அதிகமாக பாதிக்கப் படுகின்றனர். இது உயர்வகுப் பினரைவிட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அதிலும் ஆண்களைவிட பெண்களும் சிறுவர்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

**புவி வெப்பமடைவதைத் தடுப்பது எப்படி?**

வளிமண்டலத்தில் கரியமில வாயு அடர்த்தி அதிகரிப்பே இதற்கு காரண மாகும்.எனவே, புவி மென்மேலும் வெப்ப மடைவதைத் தடுக்க வேண்டுமானால், உடனடியாக பசுமையில்லா வாயுக்கள் வெளியாகும் அளவினைக் கட்டுப்படுத்த வேண்டும். குறிப்பாக கரியமில வாயுவைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இதற்கு, அணுசக்தி பாவனை உட்பட எரிபொருட் களின் பயன்பாட்டு அளவினை உடனடியாக குறைக்க வேண்டும். இதுவே புவி வெப்ப மடைவதைத் தடுக்க முதன்மையான வழியாகும். எரிபொருடள் பயன்பாடு நேரடி பொருளாதார வளர்ச்சியுடன் இணைந் திருக்கின்றது. ஆனால் குறைவான எரி பொருள் பாவனையுடன் தேவையான உற்பத்தி பொருளாதாரத்தை செய்யலாம். இன்று உற்பத்தி பொருளாதாரம் என்பது மிதமிஞ்சிய, போட்டிச்சந்தை, பொருளாதார மேலாண்மை காரணமாக வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது.

ஆனால் புவியின் மேற்பரப்பு வெப்பநிலையில் தற்போது அதிகரித்துள்ள 0.7° சென்டிகிரேட் உயர்வினை 2°சென்டி கிரேட் வரையிலும் மேலும் அதிகமாகிச் செல்ல அனுமதிக்கலாம் என்ற எண்ணத்தை மேலைத்தேய நாடுகள் கொண்டிருக்கின்றனர். அதாவது இதுவரை வளி மண்டலத்தில் அதிகரித்துள்ள கரியமில அடர்த்தியைக் குறைப்பது சாத்தியமில்லை. இந்த அடர்த்தியின் அளவை 1.50 சென்டிகிரேட் வரை தானாகவே அதிகரித்து விடும். அதேசமயம் இந்த அதிகரிப்பினை கட்டுப்படுத்தினாலும் கூட இயற்கைப் பேரழிவுகள் தொடர்ந்து அதிகரிக்கவே செய்யும். ஆனாலும் அவை ஓளரவு மனிதசக்தியால் சமாளிக்க முடியும் என காலநிலை மாற்ற சர்வதேசக்குழு கணித் துள்ளது. ஒருவேளை கட்டுப்படுத்தத் தவறினால், இந்த நூற்றாண்டு முடிவதற்குள் புவியின் மேற்பரப்பு வெப்பநிலை 50 சென்டிகிரேட்-70சென்டி கிரேட் வரை அதிகரித்துவிடும். இவ்வாறு நடக்க மானால்,அதனால் நேரிடப்போகும் பேரழிவுகளை உலக மக்களால் எதிர்கொள்ளமுடியாமற் போகும்.

அமெரிக்கா,அவுஸ்ரேலிய நீங் கலாக,வளர்ச்சியடைந்த நாடுகள் கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைப் பதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றன. இனி, உற்பத்தி வளர்ச்சி நாடுகள் அனைத்தும் கரியமில வாயு வெளியேற்ற அளவினை 1990ஆம் ஆண்டு கீழாக, 20 முதல் 30 % அளவுக்கு கீழாக 2020க்குள் குறைக்க வேண்டும். இதுவே, 2050ஆம் ஆண்டில் 80% என்ற அளவுக்குக் குறைத்தாக வேண்டும்.

**கரியமிலவாயு வெளியேற்றத்தை கட்டுப்பருத்தவது எப்படி?**

புவிவெப்பமடைவதைத் தடுக்க கூடிய வழிமுறையாக எரிசக்தி வழங்கல், போக்குவரத்து, கட்டிடங்கள், தொழிற் சாலைகள், கழிவு வேளாண்மை ஆகிய வற்றால் உரிய மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமாக சாத்தியமாக்க முடியும் என இக்குழு பரிந்துரைத்துள்ளது. நிலக்கரியின் மூலம் பெறும் மின்சக்தி உற்பத்திமுறையை மாற்றி, சூரியசக்தி, நீர்நிலை மின்சாரம், காற்றாலை உள்ளிட்ட இயற்கைமின் உற்பத்தி முறைகளுக்கு படிப்படியாக மாற வேண்டும்.

அணுசக்தி ஒரு மாற்று என்ற எண்ணம் தவறானது. அணு மின்சாரம் கரியமிலவாயுவைத் தவிர்க்கின்றது என்றாலும், பாதுகாப்பின்மை, ஆபத்தான கழிவு, ஆயுதப்பெருக்கம் போன்ற மிக மோசமான ஆபத்தகளைத் தோற்றுக்க கூடியது.

அடுத்து போக்குவரத்து முறை களில் மாற்றங்களை கொண்டுவந்து, தனியார் வாகன பெருக்கத்தை கட்டுப்படுத்தி பேருந்துகளையும் ரயில்வண்டிகளையும் உள்ளடக்கிய பொதுப் போக்குவரத்து வசதிகளை அதிகமாக்க வேண்டும். இதன் போதுதான் புவி மாசடைவதிலிருந்தும் வெப்படைதலிருந்தும் பாதுகாத்து பூலகையும் அதன் மக்களையும் உயிரினங் களையும் இயற்கை அழகையும் காப்பாற்ற முடியும்.கரியமில வாயுக்களைக் கட்டுப்படுத்த தேவையான வெளிப்படையான தொழில் நுட்பம், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை தொழில்மய நாடுகளிடம் இருந்து பெறுவதில் மூன்றாம் உலகநாடுகள் உறுதியாக இருந்து போராட வேண்டும்.

நன்றி: **பசுமைத்தாயகம் சுற்றுப்புறச்சூழல்**

# ஆணாதிக்கத்தின்

16ம் பக்கத் தொடர்ச்சி

இதே மறுப்பு ஒரு பெண்ணுக்கு நடந்திருந் தால், ஆண் அளவுக்கு அவள் கவலை கொள்ள வாய்ப்பில்லை. ஏனெனில் வரலாறு அவளை நடத்தியிருக்கும் விதமும் பயிற்றுவித்திருக்கும் முறையும் வேறு. அடிமைகள் ஆண்டான்களின் மீது உரிமை பாராட்ட முடியாதல்லவா? அதிலும் தான் மட்டும் உரிமையுடன் உறவு கொள்ள வேண்டிய அந்த பெண்ணுடம்பை வேறு ஒரு ஆண் உடைமையாக்கப்போகின்றான் என்பது தெரிந்தால், காதல் மறுக்கப்பட்ட அந்த ஆண் வெறி கொள்கின்றான். இந்த விசயம் எந்த அளவுக்கு அவளைச் சித்திரவதை செய்கின்றதோ, அந்த அளவுக்கு அவனது இரவுப்படுக்கை தூக்கமில்லாமல் கழிகிறது.

சமயத்தில் அமிலத்தை எறியவும் துணிகின்றது. அந்த அளவுக்கு விகாரமாகப் போகாதமனம் தற்கொலைக்குத் துணிகிறது. தனது அதிகாரம் செல்லுபடியாகாத எல்லாவகை ஆதிக்கங்களும், இப்படித்தான் இறுதியில் ஒரு அவலத்தில் முடிகின்றது. வாழ்வின் இளமைக் காலத்தில் காதல் தோல்வியால் வரும் இந்த துன்பியல் பரவத்தை எல்லா ஆண்களும் கடந்துதான் வருகின்றார்கள் என்றாலும், அதன் மூலமான ஆணாதிக்க மனோபாவத்தை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. மறுக்கப்பட்ட காதலில்தான், ஆணாதிக்கம் தனது சுயரூபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொள்கிறது. இதனால் காதலில் வெற்றிபெறும் ஆண்களெல்லாம் புனிதர்கள் என்று பொருளல்ல. காதலின் காலத்தில் பெண்ணுக்கு சமத்துவத்தை வழங்கும் இவர்கள் திருமணத்திற்குப் பின்னர் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்றார்கள். காதலின் போது மறைந்து கொள்ளும் ஆணாதிக்கம், இப்போது வெடித்துக் கொண்டு கிளம்பும். காதல் ஒரு மனிதனைத் திருத்தி நல்வழிப்படுத்தும் வல்லமை உள்ளதாக திரைப்படங்கள்தான் சித்தரிக்கின்றன.

வெற்றிபெறும் ஒரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் சாகவேண்டும் என்ற புத்திமதியை வழங்கும் இச்சித்தரிப்புக்கு அப்பால், உண்மையில் காதல் ஒரு ஆணை நல்லவனாக மாற்றிவிடுமா? குறைந்த பட்சம் ஒரு பெண்ணுக்கு எல்லா விசயங்களிலும் இருக்கும் சனநாயக உரிமையையாவது அங்கீகரிக்கச் செய்யுமா? பார்ப்பனியத்தின் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை விட காதல் மேலானதுதான். காதலின் போது சில நல்லவிசயங்கள் குறுகிய காலத்திற்காகவது நடக்கலாம். இதைத் தாண்டி ஒரு ஆணுக்கு முதிர்ச்சியான சனநாயகப் பண்பினை வழங்கும் வல்லமை ஏதும் காதலுக்கு இல்லை. பெரும்பாலும் ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார பண்பாட்டுத் தரத்தின் அளவிற்கேற்பத்தான் அச் சமூகத்தில் நிலவும் காதலின் தரமும் தீர்மானிக்கப்படுகின்றது.

காதல் ஒரு ஆணையோ பெண் ணையோ, தானே முற்போக்காளனாக மாற்றிவிடுவதில்லை. தெளிவாகச் சொல்லுவதாகவிருந்தால், ஒரு ஆண் தனது சமூக வாழ்வில் எந்த அளவு சனநாயக நடைமுறையைக் கொண்டிருக்கின்றானோ? அந்த அளவு தான் அவனுடைய காதலிலும் பிரதிபலிக்கிறது. மற்ற மக்களின் சனநாயக உரிமையையும் சுயமரியாதையையும் மதிக்கப் பழகாத ஆண், எத்தனை படித்திருந்தாலும், அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேறியிருந்தாலும் அவன் மீது சனநாயகத்தின் வாசனை கூட ஒட்டுவதில்லை. சொல்லப்போனால், தமது சமூக வாழ்க்கையில், சனநாயகத்திற்கான போராட்டங்களில் ஈடுபடும் ஆண்களிடம்கூட ஆணாதிக்கத்தின் எச்சசொச்சங்கள் நீடிக்கத்தான் செய்கின்றது. முற்போக்கான இளைஞர்கள் தமது காதல் நிராகரிக்கப்படும்போது, மற்ற ஆண்களைப் போல எல்லை மீறுவதில்லை. ஆனால் பெண்ணை உடைமையாகக் கருதும் மனோபாவத்தில் ஊறியிருப்பதால், தான் உரிமை கோரமுடியாத தனது உடைமை குறித்து சிந்தித்து சிந்தித்து மன உளைச்சலில் வீழ்கிறார்கள், தங்களை வருத்திக்கொள்கின்றார்கள். இது தவறு என்பதை அறிவுரீதியாக மேலோட்டமாக ஏற்றுக்கொண்டாலும், உணர்ச்சித் தளத்தில் சராசரி ஆணாகவே இருக்கின்றார்கள்.

பெண் என்பவள் வெறும் உடல் அல்ல என்பதைக் கருத்து ரீதியாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், சமூகத்தில் நிலவும் பண்பாடு, ஊடகங்களின் தாக்குதலும் பெண்களைப் பாலியல் நோக்கில் பார்ப்பதற்கு மட்டுமே அவர்களையும் பழக்கப் படுத்துகின்றது. எனவே அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்குள் ஆணாதிக்கம் துளிர்விட்ட வண்ணம் இருக்கின்றது. இதைக் களையெடுக்க வேண்டுமானால், அதற்குப் பெண்களின் உதவியும் தேவைப்படுகின்றது. ஏராளமான பெண்கள் சமூக வாழ்க்கையில் ஈடுபடும்போதுதான், பாலினக் கவர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆண்-பெண் உறவு சாத்தியமாகின்றது. பெண்கள் சமூக மாற்றத்திற்கான நடைமுறையில் ஈடுபடும் போது தான், ஆணாதிக்கம் என்ற ஒன்றையே அவர்களால் அடையாளம் காண முடிகிறது. அதற்கெதிராகப் போராடவும் முடிகிறது.

நன்றி: *புதிய கலாச்சாரம்*

***தமிழரங்கம் இணையத்திலிருந்து***

# ஐ.நா மனித

6ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு அரசின் வளங்களை பேரினவாதத்தை நோக்கி திருப்புவதை S.W.R.D. பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்தாலும் ஒரு கட்டத்துக்கு மேல் அவரால் முன்னேற முடியவில்லை. ஆட்சித்தலைவர் என்ற வகையில் அவர் பல்லேறு அழுத்தங்களுக்கு உட்பட்டமையே இதற்கு காரணமாகும். ஆனால் ஜனாதிபதி மகிந்தர் தன்னை நோக்கி வந்த எல்லா அழுத்தங் களையும் புறங்கையால் தூக்கி எறிந்து விட்டு முன்னோக்கி சென்று கொண்டு இருக்கின்றார். எனவே அவரால் ஒருபோதும் மேற்குலகின் எதிர்பார்ப்புக்களை திருப்த்திப்படுத்த முடியாது.

இரண்டாவது பிரச்சனை சமாதானத்திற்கு வருவதற்கு அவர் எந்த ஒரு இடைவெளியினையும் விட்டுவைக்காமையாகும். சமாதானத்திற்கான அடித்தளங் களாக இருந்தவை இராணுவம் என்ற வகையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையும்இ அரசியல் என்ற வகையில் வடக்கு கிழக்கு இணைப்பும்தான். மகிந்தர் இரண்டையுமே முறித்துவிட்டார். எனவே சமாதானத்திற்கு மீள்வரு வதாயின் புதிய அடித்தளங்களை உருவாக்குதல் வேண்டும. இன்றைய நிலையில் அவை இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை.

மூன்றாவது பிரச்சனை தென்னிலங்கையில் மகிந்தரின் ஆட்சி பலதுறைகளிலும் வீழ்ச்சி அடைந்த நிலையில், விலை உயர்வு நெருக்கடி மக்கள் மீது பாரிய சுமைகளை சுமத்தி உள்ள நிலையில், போர் வெற்றி மற்றுமே அவரது ஆட்சியை பாதுகாத்து வருகின்றது. இந்நிலையில் போரினை கைவிட அவரால் முடியாது. போரை கைவிட்டால் அந்தக்கணமே அவரின் இருப்பும் வீழ்ந்துவிடும். எனவே இப் பிரச்சனைகளினால் மகிந்தர் மேற்குலகின் விருப்பத்திற்கு இணங்கி போகும் வாய்ப்பு தற்போது இல்லை என்றே கூற வேண்டும்.

***புலிகள் என்ன செய்ய போகின்றனர்?***

இனிவரும் காலங்கள் புலிகளுக்கு உரிய காலங்களேயாகும். அரசாங்கத்தின் எழுச்சி நிலை தற்போது தேய்வடையும் நிலைக்கு வந்து விட்டது. இதனால் புலிகள் சிறிது சிறிதாக முன்னேறிச் செல்லவே முற்படுவர். ஆனால் சர்வதேச அரசியல் சூழல் இன்னமும் அவர்களுக்கு சாதகமாக வர வில்லை. புலிகள் இனிமேல் இலங்கை என்ற ஒரு நாட்டுக்குள் தீர்வு காணப்போவதில்லை. தங்களது இறுதி இலக்கினை நோக்கியே அவர்கள் நகர விரும்புகின்றனர். ஆனால் அதற்கான சர்வதேச சூழல் இன்னமும் கனியவில்லை.

சர்வதேச சூழல் தங்களுக்கு ஏற்றதாக இல்லா மையால் தாக்குதல் யுத்தத்தை அவர்கள் தொடுக்கப் போவ தில்லை மேலும் சில காலத்திற்கு தற்காப்பு யுத்தத்தையே நடாத்திக் கொண்டிருப்பர். இத்தற்காப்பு யுத் தத்தின் ஊடாக அரசு சர்வதேச ரீதியாக அம்பலப்படவும்இ பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடையவும் ஏற்ற சூழலை உருவாக்குவர்.

தங்களினுடைய இலக் கினை அடையும் வரை மகிந்தர் அரசை என்ன விலை கொடுத் தாவது பாதுகாக்கவே முற்படுவர். ஏனேனில் அவர்கள் தங்களின் இலக்கினை சென்றடைவதற்கான பாதையினை ஒழுங்கமைத்து கொடுப்பது மகிந்தர் அரசேயாகும்.

# நாட்டையே சுடுகாடாக்கும்

1 ம் பக்கத் தொடர்ச்சி

பலன்கிடைக்கப் போவதில்லை. அவசரகாலச் சட்டவிதிகளின் உதவியுடன் தமிழ்மக்களே தண்டிக்கப்படுகின்றனர். இன்று தென்னிலங்கை தண்டிக்கப்படுகின்றது. பிரதான எதிர் கட்சியான ஐ.தே.கட்சியிடம் நீங்கள் ஏன் அவசரகால சட்டவிதிகளை ஆதரிக்கின்றீர்கள் எனக் கேட்ட போது நாம் ஆதரிக்காவிட்டால் எங்களை புலி என நாமம் சூட்டுவார்கள் என அக்கட்சியின் பிரதான தலைவர் கூறியுள்ளார்.

எனவே தமிழ் மக்கள் தண்டிக்கப்படு வதை ஏற்பவர்கள் எங்ஙனம் இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளின் மொத்த வடிவமே விடுதலைப் புலிகளாகும். பிரச்சினை மேலும் மேலும் மோசமடைய அதற்கு எதிரான வன்முறைகளும் அதிகரிக் கவே செய்யும். இன்று தென்னிலங்கை யிலும் அரசாங்கம் மக்கள் மீது கைவைக்க தொடங்கியுள்ளது. எனவே இனிமேல் என்றாலும் காலங்கடத்தாமல் வன்முறைகளை யார் செய்தாலும் கண்டிபபோம். முதலில் அரச அடக்குமுறையை நிறுத்தக் கோருகின்றோம். அதன் பின் எல்லா வன்முறைகளும் தானாகவே குறையும். அமைதி நிலவும். வாழ்வும் உறுதிப் படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

புதிய சமதர்மம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

# குப்பைத் தொட்டிக்குள் விமல் வீரவன்ச

பௌத்தசிங்கள பேரினவாதத்தின் புதிய தலைவராக விமல் வீரவன்ச தன்னை உருவகுத்துள்ளார். ஜேவிபியின் பேரினவாத தளத்தில் ஏற்பட்ட உடைவின் காரணத்தினால் விமல் வீரவன்ச ஜே.வி.பியில் இருந்து வெளியேறி பேரினவாதத்திற்கு புதிதாக ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளார். இவரின் வெளியேற்றம் குறித்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கருத்துத்தெரிவிக்கையில், ஆலயத்தில் இருந்து மணியோசை வரும்போதே அந்த ஒலிக்கு மக்கள் மதிப்பும் கௌரவமும் வழங்குவார்கள்.. ஆனால் அந்த மணியோசை பொருத்தமில்லாத இடத்தில் இருந்து வந்தால் மக்கள் அந்த ஒலி மீது வெறுப்பே கொள்வார்கள் என குறிப்பிட்டார். எனவே விமல் வீரவன்ச ஜே.வி.வி தளத்தில் இருந்தபோதே அவருக்கு மதிப்பு இருந்துள்ளது. இன்று அவரின் குரலுக்கு அவ்வளவு சக்தி உள்ளதா என்பது கேள்விக்குரியதாகும்.

ஜேவிபி தளத்தில் இருந்த காலத்தில் விமல் வீரவன்ச ஒரு கல்வியுடையவராகவே கருதப்பட்டார். இன்று அவரது கல்வித்தகமைகள் பற்றிய பல சர்ச்சைகள் வெளிவரத் தொடங்கியுள்ளது. போர் என்ற நாடகம் தற்போது சிங்கள மக்கள் மத்தியில் வெறுப்பைத் தரும் நிகழ்வாக மாறத் தொடங்கியுள்ளது. போர் முனைகளில் தாம் வெற்றி பெறுவதாக தென்னிலங்கை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரிவித்து வந்த பொய்யும் புழுகும் அம்பலத்திற்கு வந்துள்ளன. இந்த யுத்தம் வெல்லப்பட முடியாததொன்று என்ற நிலமை ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவுச் சுமையால் மக்கள் அரசாங்கம் மீது கடும் வெறுப்பைக் கொண்டுள்ளனர். இந் நிலையில் தென்னிலங்கை இனவாத சக்திகளின் தளங்களில் பிளவுகளும் விரிசல்களும் வெளிப்படத் தொடங்கியுள்ளன. மக்கள் விரைவில் இனவாதசக்திகளை குப்பை தொட்டிக்குள் தள்ளும் நிலை விரைவில் ஏற்படலாம். ஜேவிபி பின்தங்கிய சிங்கள மக்களை கொண்ட அமைப்பாகும்.


தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதற்கு செல்வாக்கு உண்டு. அந்தச் செல்வாக்கு தளத்தில் இருக்கும்போதே விமல் வீரவன்சவுக்கு மதிப்பு இருந்தது. அந்தத் தளத்தில் இருந்து அவர் வெளியேற்றப்பட்ட பின்னர் அவருக்கு அவ்வளவு பெரிய செல்வாக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கமுடியாது. ஜேவிபி தளத்தில் தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள் எனப் பலர் உள்ளனர். எனவே இந்த பலமான தளத்தில் இருந்த போது விமல்வீரவன்ச பலமானவராக இருந்தார். இன்று அப்படியில்லை.

வடபகுதி யுத்தமுனையின் பாரிய பின்னடைவு பற்றிய செய்திகள் வரத்தொடங்கியவுடன் தென்னிலங்கை சிங்கள பௌத்த தளங்களில் விரிசல்களும், மோதல்களும் அதிகரிக்கும். எனவே விமல்வீரவன்சவின் கீர்த்தி எதிர்வரும் காலங்களில் மங்குசனி கொண்டவளின் நிலையாகவே மாறப்போகின்றது. ஜேவிபி விமல்வீரவன்சவை தமது நலனுக்கான துரும்பாக இனவாத நடனத்திற்கு தெரிவு செய்திருந்தது. விமல் வீரவன்ச கட்சியின் நலனைவிட ஒருபடிமேல் சென்று தனது திசையை மேல்நிலைக்கு கொண்டு சென்றுள்ளார். இதை காலம் பிந்தியே ஜேவிபி தலைமை உணர்ந்துள்ளது. இதன் காரணத்தினாலேயே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் ஜேவிபி பாரிய பின்னடைவுக்கு சென்றது.

ஆனால் ஜேவிபியில் இருந்து வெளியேறிய வீரவன்ச எதிர்காலத்தில் பெரிதாக எதனையும் சாதிக்கும் நிலைக்கு இடமில்லை. அதற்குரிய தளமும் அவரிடம் இல்லையென்றே கூறவேண்டும். தென்னிலங்கையில் மகிந்த அடைந்துவரும் தோல்விகளின் விளைவால் இனவாதிகள் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது. இந்நிலையில் விமல் வீரவன்ச எதிர்காலம் காரிருள் சூழ்ந்ததாகவே காணப்படும். குப்பைத் தொட்டிக்குள் போகும் இனவாத கும்பலில் விமல் வீரவன்சவே முதல் நிலையில் இருப்பார் என்பதே எமது அனுமானிப்பாகும்.

# ஜேவிபி இனவாதத்தை அடக்கி வாசிக்கத் தொடங்கியுள்ளதா?



தமிழ் மக்கள் எந்நவொரு அரசாங்திலும் சந்தித்திராத ஒரு யுத்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மகிந்த அரசு எதிரி நாடு ஒன்றின் மீது தொடுக்கப்படும் யுத்தமொன்றிக்கு குறைவில்லாத அளவுக்கு தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில், ஆகாய, தரை, கடல் மார்க்கமாக இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகின்றது. மகிந்த அரசு மேற்கொள்ளும் இந்த யுத்தத்தின் தீவிர ஆதரவு சக்தியாகவும் அரசின் கூட்டுச் சக்தியாகவும் விளங்கிய ஜேவிபிக்குள் கடுமையான உள்முரண்பாடுகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. ஜேவிபிக்குள் யுத்த நிகழ்ச்சிநிரல் ஆதரவாளராக இனவாதத்துடன் இணைந்து வாய் வீச்சுகளை அள்ளி வீசிய விமல் வீரவன்ச மீது கட்சி தலைமைகள் குற்றச்சாட்டுகளை சுமத்திய போது கட்சி பிளவு படத்தொடங்கியது. விமல் வீரவன்சவை கட்சி வெளியேற்றியுள்ளது. இதன் பின் ஜேவிபியின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதுவரை காலமும் ஜேவிபி ஒரு இனவாதக் கட்சியாகவே தமிழ் மக்களின் பார்வையில் இருந்தது. தங்களுடைய அரசியல் அபிலாசைகள் சம்பந்தமான விடயங்களுக்கு ஹெல உறுமய, ஐ.தே.க,சி.ல.சு.கட்சிகளை விட ஜேவிபியை இனவாத கட்சிகவே பார்த்தனர். ஆனால் அரசியல் ஆற்றல் மிக்கவர்கள் மட்டும் ஜேவிபியை இடதுசாரி கொள்கையுடன் இணைந்த இனவாதத்தையும் கொண்ட அமைப்பாகவே பார்த்தனர். ஜேவிபியை பொறுத்தவரை சிங்களத் தேசத்தின் கருத்துக்களுக்கு எதிராகச் செயற்பட்டால் சிங்கள மக்கள் மத்தியில் அந்நியப்பட்டு,பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகும் என்ப தாலேயே சிங்கள இனவாதக் கருத்துகளை முன்னெடுத்து வந்தது. இனவாதக் கொள்கையும், இடதுசாரிக் கொள்கையும் பின்பற்றி இருந்தாலும் இனவாத கொள்கையை முன்னிலைப்படுத்த வேண்டிய இதனால் தான் இன்று அவ்வகை கொள்கையை அடக்கி வாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் செயற்பாடுகளில் அரசிற்கு முழுதான ஆதரவு நிலையினை காட்டி வந்துள்ளது. மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றம், திருமலை புத்தர்சிலை விவகாரம், போன்ற விடயங்களில் கூட ஆதரவினைக் காட்டியது. தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பாக கருத்துகளை தெரிவித்தாலும் அதனை ஒரு அரசியல் செயற்பாடாக முன்னெடுக்கவில்லை. இது போன்ற விடயங்களில் கூட சமத்துவக் கொள்கை முன்னெடுக்கப்படாததால் சர்வதேச ரீதியா கவும் விமர்சனங்களை சந்திக்க வேண்டி வந்தது. இவர்கள் தமது இனவாதக் கொள்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் செயற்படுத்த தயாராக இருந்தார் களே தவிர, ஏனைய சிறுபான்மை இனங்களில் அடக்கு முறைக்கு எதிராக தமது கொள்கைகளை முன்னெடுக்க முன்வரவில்லை.

*நவநீதன்*

வடகிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் விமானக் குண்டுத் தாக்குதல் நடவடிக்கைகளை கண்டிபபதை விடுத்து அதனை நியாயப் படுத்தும் நிலையிலேயே இருந்தனர். ஆனால் தெற்கில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெறும் போது மட்டும் கடும் கண்டனங்களைத் தெரிவித்தனர். ஜேவிபியின் இனவாத

> *இதுவரை காலமும் ஜேவிபியை ஒரு இனவாதக் கட்சியாகவே தமிழ் மக்களின் பார்வையில் இருந்தது. தங்களுடைய அரசியல் அபிலாசைகள் சம்பந்தமான விடயங்களுக்கு ஹெல உறுமய, ஐ.தே.க, சி.ல.சு. கட்சிகளை விட ஜேவிபியை இனவாத கட்சிகவே பார்த்தனர். ஆனால் அரசியல் ஆற்றல் மிக்கவர்கள் மட்டும் ஜேவிபியை இடதுசாரி கொள்கையுடன் இணைந்த இனவாதத்தையும் கொண்ட அமைப்பாகவே பார்த்தனர். ஜேவிபியை பொறுத்தவரை சிங்களத் தேசத்தின் கருத்துக்களுக்கு எதிராகச் செயற்பட்டால் சிங்கள மக்கள் மத்தியில் அந்நியப்பட்டு,பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகும் என்ப தாலேயே சிங்கள இனவாதக் கருத்துகளை முன்னெடுத்து வந்தது.*

முகம் சர்வதேச ரீதியாக விமர்சனத்திற்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்ட போதும் கூட தமது இனவாதக் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. கட்சி வெளிப்படையான பிளவை நோக்கி சிதைவுக்கு வந்தபோது தான் விழித்துக் கொண்டது. அதன் பின்னர்தான் இனவாதச் சக்திகளை கட்சியிலிருந்து நீக்கியது. இதற்கு பின்னர் தனது இரண்டு கொள்கையான இனவாதக்கொள்கையையும் இடதுசாரி கொள்கையையும் முன்னெடுபபதில் சிறு மாற்றம் ஏற்பட்டது.

கடந்த காலங்களைப் போல் இனவாதக்கொள்கையை தீவிரமாக முன்னெடுப்பதை தவிர்த்து, இடதுசாரிக் கொள்கையை தீவிரமாக முன்னெடுத்து இனவாதத் தன்மையை அடக்கி வாசிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு நல்ல உதாரணமாக, கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இடம்பெறும் குண்டுத் தாக்குதல்களை கண்டனம் தெரிவிக் கும் ஜேவிபி அண்மைக் காலமாக இடம்பெறும் குண்டு வெடிப்புக்கள் சம்பந்தமாக மௌனம் சாதிப்பது பெரும் மாற்றத்தைக் காட்டுகின்றது. இதற்கு அப்பால, திருமலை மாவட்ட பா.உ ஜயந்த விஜயசேகர தமிழ் மக்களுக்கு சார்பான கருத்துகளைச் தெரிவித திருந்தார். மகிந்த அரசின் கீழ் இருப்பதைவிட விடுதலைப் புலிகளின் கட்டுப்



ஜயந்த விஜயசேகர

பாட்டில் இருந்தபோது தமிழ் மக்கள் மிகவும் சந்தோசமாகவும் வசதியாகவும் வாழ்ந்தாகவும் கடற்தொழிலுக்கான தடை தொடர்ந்தால் விடுதலைப் புலிகள் மீதான ஆதரவு அதிகரிப் பதை எவராலும் தடுத்துவிட முடியாது என்றும், திருமலையில் மீன்பிடித் தடையால் தமிழ்மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும்,சிங்களவர்களுக்கு ஓரளவு அனுமதி வழங்கும் கடற்படை தமிழ் மக்களுக்கு அனுமதி முற்றாக மறுப்பதால் அவர்கள் பட்டிணி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும், கௌரவாக வாழ்ந்த தமிழ் மக்கள் சிங்களவர்களின் வீடுகளுக்கு வந்து அரிசி, மீன் கேட்கின்றனர் என்றும், வறுமை யின் கொடுமையால் தமது உடமைகளை விற்றுவிட்டு, இந்தியாவுக்கு தப்பியோடுகின்றனர்.அதிலும் சிலர் நடுக் கடலில் உயிர் இழக்ககும் பரிதாபமும் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தார். இக்கருத்து ஜேவிபியின் கொள்கையில் ஏற்பட்டமாற்ற மாகும்.

தொடர்ச்சி 19 பக்கம்

இப்பத்திரிகை லீனஸ் ஜயதிலக் என்பவரால் கொழும்பு 02 ஸ்ஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org